ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ வைகாசி௴ 25௳ (7—5—1931) | மலர் 6

ஒப்புயர்வற்றது! வைத்திய பாஸ்கர் பண்டிட் உத்தமமானது!!

S. S. ஆனந்தரின்

மகா சந்தனாதித் தைலம்.

(24 வருடங்களாக உலகப்பிரசித்திபெற்றது)

இத்தைலம், மூளைச் சோர்வையும், நரம்புத்தளர்ச்சியையும் நீக்கி தேகத்திற்கு பலத்தையும் சுறுசுறுப்பையும் தரவல்லது. மூளையை அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு ஞாபகசக்தியை அதிகப்படுத்திக் குளிர்ச்சியைத்தருவதில் இன்றியமையாதது. பொதுவாக எல்லாப் பிணிகளையும் கண்டித்து தேக ஆரோக்கியத்தை நிலைக்கச்செய்வது—கோடைகாலத்தில் எல்லோருக்கும் அவசியமானது.

6 அவுன்சு ரூ. 1—0—0.
12 அவுன்சு ரூ. 1—14—0.
24 அவுன்சு ரூ. 3—12—0.

குடி அரசு ஆசிரியர்:-
ஈ. வெ. இராமசாமிப்பெரியார்
எழுதுவது.

சென்னையில் திரு. பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின் தமிழ் வைத்தியசாலையில் செய்யப்படுகிற மருந்துகளில் சிலவற்றையும், அவருடைய மகா சந்தனாதித்தைலத்தின் பலனையும் நான் உணர்ந்திருக்கின்றேன். அவைகள் குறிப்பிட்ட நோய்களைக் கண்டித்து நல்ல குணத்தைத் தருகின்றன.......
சென்னை அரசாங்கத்தார் தமிழ் சித்த வைத்தியத்தை ஒரு ஒரு வகுப்பாகவைத்து நடத்துவதற்கு அவர் முதன்மையாக நின்று முனைந்து வேலை செய்தார்.........அவருடைய உழைப்பினால் தமிழ் வைத்தியத்திற்கும், மருத்துவ வகுப்பினர்களுக்கும் புதிய சக்தி உண்டாகிவருகிறதென்று சொல்வது மிகையாகாது.

(மற்ற பெரியார்களின் அபிப்பிராயத்தை நமது கேட்லாக்கில் காண்க)

இனாம்.

விலாசம் தெரிவிப்போர்க்கு நமது கேட்லாக்கும் 'சுகவழி' என்ற புஸ்தகமும்

இனாம்

இன்றே எழுதுங்கள்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலைத்தெரு, சென்னை.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டு கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை

ஆராய்ச்சி அணிகலம் என்னும் தமிழ் நூல்;

கடவுளைப்பற்றிய மதங்களின் உண்மைக்கொள்கையின் பயனான கடவுட்பேறின்பம், உலகம் பொய்யென்ற உண்மையுணர்ச்சியிலடையும் அறிவின்பம், என்ற முடிவையும் இவைகளைத் தெரிந்துகொள்வதற்குக் கீழான படியாய் முன் அமைத்துள்ள சமூகக்கட்டுப்பாடுகள் அவ்வப்போதுள்ள காலத்தைப் பொறுத்ததெனவும் உலகவிவகாரங்களில் சுயநலத்தின் பொருட்டுச் சமூக; மத; அரசியற் கொள்கைகளிற் புகுத்தப்பட்டிருக்கும் திரிபான போலி அபிப்பிராயத்தையும் மற்றும் மக்களுக்கு எத்துறைகளிலும் வேண்டற்பாலதாய் சங்கதிகள்யாவையும் பலநூற் பிரமாணங்களோடு சுருக்கவகையில் 17 அத்தியாயங்களாய்த் தொகுத்து எளிய நடையில் எழுதப்பட்டது. 125 பக்கம். 8/4 சைஸ் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 0—12—0 மதுரை புதுமண்டபம் எல்லாபுக் ஷாப்புகளிலும் அடியிற்கண்ட என்னிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

தா. க. தாயுமான பிள்ளை

மேல்மங்கலம், வடுகபட்டி போஸ்டு.

பெரியகுளம், மதுரை.

முந்துங்கள்! தபால் படிப்பின் அற்புதம்! முந்துங்கள்!!

1000 மாணவர்கள்

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம். தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல்மெட்ரிக்குலேஷன் கோர்ஸை சொற்பசெலவில் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர், பாஸ் செய்தபின் காலேஜில் சேரலாம். அல்லது உயர்தர பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர், ஹையர்கிரேட் உபாத்திமார்கள், குமஸ்தாக்கள் ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. பிராஸ் பெக்டசுக்கு உடனே இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,

ஆறுமுகநேரி, S. I. R.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

"சன்மார்க்கன்"

பொதுநலங் கருதி வெளிவரும்

ஓர் உயர்தரத்தமிழ் மாதப்பத்திரிகை:

கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கத்தின் சார்பாகப் பழனியிலிருந்து ஒவ்வொரு தமிழ்மாத முதலிலும் எளிய தமிழ் நடையில் அரிய கட்டுரைப் பொருள்களுடன் வெளியிடப்படுகின்றது. உடனே சந்தாதாரர்களாகச்சேருங்கள். வருட சந்தா:—உள்நாடு ரூ. 1. வெளிநாடு 1.4.0.

ஆசிரியர்—(நாவலூற்று)

சி. சுவாமிசிவநேசம்,

'சன்மார்க்கன்' பத்திரிகாலயம், பழனி.

"GENUINE KHADDAR"

சுத்தமான கதர்.

அகில பாரத சர்க்கா சங்கத்தாரால் நற்சாட்சிப் பத்திரம் பெற்றது.

எங்களிடம் கதரில் எல்லாத் தினுசுகளும் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்களை உடனே கவனிக்கப்படும். அட்வான்சுடன் ஆர்டரை அனுப்பவும்.

விலாசம்:—

எம். சென்னியப்ப முதலியார்,

கதர் ஸ்டோர், திருப்பூர், S.I.R.

பஞ்சமா பாதகங்கள்

எவை?

ஏன் நிகழ்கின்றன?

அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து

புஞ்சைப்புளியம்பட்டி,

(கோயமுத்தூர் ஜில்லா)

சுத்தகதர்! உயர்ந்தகதர்!!

நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கிரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்கள்கிரயம் முழுமையும் அனுப்பினால் கவனிக்கப்படும்.

கா. மு. & ஈ. ரு. வே. & Co.,

கதர் ஸ்டோர்,

சென்னிமலை ஈங்கூர் (S.I.Ry.)

குணமில்லாவிடில் பணம் வாப்பீஸ் செய்யப்படும்.

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷகணக்கில்குணமாகும்.

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழநி S. I.

கனம். ஸி. ராஜகோபால ஆச்சாரி அவர்களுக்கு வணக்கம்.

(கைவல்யம்)

தாங்கள் பெரிய வக்கீலாக இருந்தகாலத்திலும் தாங்கள் எனக்குச் சிறிது அறிமுகமுண்டு. அதை விட்டு தேசியஇயக்கத்தில் முக்கியத்தலைவராகி நஞ்சைப்புளியம்பட்டி காங்கிரஸ் சபைக்குத் தாங்கள் தலைமைவகித்தபொழுது கனம். கிஞ்சப்ப கவுண்டர் விருந்தாளியாக யிருந்தீர்கள். அந்தசமயம் நான் நடந்துகொண்ட ஊழியத்தாலேயே தங்களிடம் வைத்துள்ள அன்பைத்தெரிந்திருப்பீர்கள். பொய்யோ மெய்யோ வாதிப்பிரதிவாதிகளின் விவகாரங்களை எடுத்து வாதிப்பதில் சமர்த்தர். சட்டத்துக்குள் நியாயம் அடங்காவிட்டாலும் தீர்ப்பு எப்படி முடிந்தாலும் உண்மையை உணரக்கூடிய அறிவுடையவர்கள். தேசத்திற்காகத் தன் சுகத்தை விட்டவர்கள். அப்பேர்ப்பட்ட தங்கள் மனமும், அறிவும் சாதாரண பார்ப்பனர்கள் போன்ற மனப்பான்மையை அடைந்து தங்கள் முயற்சியும், பிரசாரமும் அவ்வழியே போவதானல் நமது தேசத்தின் துரதிருஷ்டத்திற்கும், நமது பாவ விமோசனத்திற்கும் வேறு வழியென்னவிருக்கிறது. பெரியவர்கள் பேரில் நம்பிக்கைதான் எப்படி உண்டாகும்?

சுயமரியாதை இயக்கத்தை நாத்திகமென்றும் தெய்வமில்லை என்றே அவர்கள் சொல்லுகிறார்கள் என்றும் பிரசாரம் செய்கிறவர்கள்போல தாங்களும் அதன் மீது பழி சுமத்தப் புறப்பட்டு விட்டீர்கள் என்று நினைக்கும்படியாக இருக்கிறது தங்கள் ஈரோட்டுப் பிரசங்கம். கடவுளிருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்களுக்கென்ன? கடவுள் உண்டா இல்லையா என்று தீர்மானம் பண்ணுவது தேசீயத்தில் முக்கியமான வேலையல்லவே. கடவுளைப்பற்றிச் சொல்லவேண்டிவந்தால் உண்மையான கடவுளை விபரமாகவெடுத்துச் சொல்லவேண்டுமேயல்லாமல் கடவுளில்லை என்று தொலைதூரத்தில் தம்பட்டமடிபடுவதாகவும் அதற்காக தெய்வம் தெய்வமெனச் சொல்லி பழைய பார்ப்பான் வயற்றுவழிக்கே கொண்டுபோய் விடும்படியான தெய்வ வழிக்கு நீங்களும் ஜாடைபண்ணலாமா?

"கடவுளைப்பற்றின கவலைஉனக்கு வேண்டாம். எதிலும் உன்னுடைய அறிவை உபயோகப்படுத்து" என்று சுயமரியாதைத் தலைவர் சொன்னதுண்டு. இன்னும் அதையேசொல்லுகிறார். ஞானம் அதிகப்பட்டு உலக விவகாரங்கள் செம்மைப்படாமல் சீரழிந்துபோனால் கர்மத்தைச் செய்என்றும் கர்மத்தைச்செய்து உலக போக போகியங்களை அதிகரித்துவிட்டால் ஞானம் வேண்டுமென்றும் உபதேசிப்பது நமக்குப் பரம்பரை தானே. உலகத்தை விட்டு ஞானத்தை விரும்பிப் போனவர்களுக்குஉலகாயுத மதத்தை உபதேசம் பண்ணினவர் நமது ரிஷிகளில் பெரியவரான பிரகஸ்பதியல்லவா? அடியும் முடியுமிலா உணர்வே தெய்வமென்று இராமருக்கு உபதேசித்தது வசிஷ்டரல்லவா? அவரை விட நமக்குப்பெரியவருண்டோ? உங்கள் தெய்வமான ஸ்ரீ கிருஷ்ணன் 'சத்துருவை ஜெயித்து உலகபோகங்களை அனுபவி' என்று அர்ச்சுனனுக்குச்சொன்னரேயல்லாமல் ஒன்பது நாமமும் ஒருகிக்கப்போட்டு அக்காரவடிசலும் அதற்கேற்ற சட்டினியும் தின்று என்னைக் கும்பிட்டு துளசியும் தீர்த்தமும் வாங்கிக்கொண்டால் எல்லாக்காரியமும் முடிந்துவிடுமென்று சொல்லவில்லையே. உலகப்போதத்தெய்வத்தினிடம் பக்திவந்து பார்ப்பானின் வயற்றை நிறைத்துக்கொண்டிருக்கும் தெய்வத்தினிடம் பக்தி குறைந்து விட்டால் பார்ப்பானின் மேன்மைக்குப் பங்கம் வந்துவிடுமே என்று நினைக்கும் தாங்கள் பிர்மஸ்ரீ ராமானுஜாச்சாரியை நினைத்துப்பாருங்கள் நினைத்துப்பார்த்து கடவுளைப்பற்றி உபதேசம் செய்ய தங்களுக்கு இஷ்டமிருந்தால் குரு சொன்ன ஞான உபதேசம் எல்லாருக்கும் உபயோகப்பட கோபுரத்திற்கு மேலேறி வீசி எறிந்த ஸ்ரீ ராமானுஜச்சாரியாரைக் குருவாய்க்கொண்ட தங்கள் கூட்டாத்தாருக்குக் கடவுளைப்பற்றி முதல் முதல் உபதேசம் செய்யுங்கள். ஏனெனில் திருப்பதி பள்ளியில்கூட வடமொழியின் இலக்கணத்தை மற்றவைணவர்களுக்கும் சொல்லிக்கொடுக்கத் தடையாக விருக்கிறார்கள். ஒரு பாஷையிலுள்ள இலக்கணத்தைப் பொதுவென்று நினைக்காத மனமுடையவர்களான இவர்களுக்கு தெய்வ நிச்சயமில்லாமலிருக்கிறது. இன்னும் தங்களுக்குச் சாவுகாசமிருந்தால் அண்ணாமலை சர்வகலாசாலையில்கூட ஞான சாஸ்திரம் பார்ப்பானைத்தவிர மற்றவர்கள் படிக்கப்படாதென்று தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படித் தடுக்க ஏதுவாயிருக்கும் மகாபாவிகளுக்கு கடவுளைப்பற்றி உபதேசம் செய்யுங்கள். தங்களுக்கு இன்னும் சிறிது சாவுகாசமேற்பட்டால் சர் அண்ணாமலை சர்வகலாசாலையின் சங்கீதப் பள்ளியில் பார்ப்பானரல்லாத பிள்ளைகள் ஒருவருமில்லாமலிருப்பதற்குக் காரணம் சர் அண்ணாமலை செட்டியாரைக் கேட்டு அவர்களுக்குக்கடவுள் தன்மையை எடுத்துச்சொல்லுங்கள். இது போலவே கடவுள் தன்மையை எடுத்துச்சொல்ல வேண்டிய இடங்கள் அநேகமுண்டு. அதையெல்லாம் விட்டு கடவுளின் பெயர்சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி அவமதிக்கும்படி செய்து வைக்கும் கூட்டத்தாருக்கும் தெய்வத்தின் பெயர்கேட்டு அடிமைப்பட்டுக் கிடப்பாருக்கும் தாங்களும் பிரமாணமாவதற்கு வந்துவிட்டீர்களே. இப்படியே நம்முடைய உலகவாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் குரூரமான கொடுங்கோன்மை நடப்பதைத்தெரிந்தும் தெய்வ சம்மதமென்று அபிநயித்தும் வரும் நீங்கள் ராஜாங்கத்தில் கூசாமல் பரிபூரண விடுதலைகேட்பது தப்பல்லவா? சுதந்திரத்தைக் கொடுப்பதற்குத்தயாராகவில்லாத எவனும் சுதந்திரத்திற்கு அருகனல்லன் என்பதை நமது கடவுள் அங்கீகரிக்கவில்லையா? அதை அங்கீகரிக்காத எந்தக்கடவுளாகவிருந்தாலும் அவை இருப்பதைவிட இல்லாமலிருப்பது விசேடமல்லவா?

இழந்துபோன ராஜியத்தை மீட்டுக்கொண்டவர்களுக்கு தெய்வபக்திதான் கருவியாகவிருந்ததா? அவர்களின் சாமர்த்தியமும் அறிவும் பிரதானமாக விருந்ததா என்பதையும் எல்லா நாட்டிலும் இதற்குமுன்னும் இப்பொழுதும் தேசியவாதிகளிருக்கிறார்கள், இருந்தார்கள். அவர்கள் கடவுள்பக்தியை உபதேசித்தார்களா? உபதேசிக்கிறார்களா? ஜனங்களுக்குள்ள குறைகளில் தங்களால் தீர்க்க முடியுமானதைத்தீர்த்து எல்லாரையும் ஒன்று சேர்த்து மற்ற குறைகளுக்குப்பாடுபடுகிறார்களா என்பதை கவனித்துப்பாருங்கள். மகமதியர் நமது நாட்டில் படையெடுத்து வந்த காலத்தில் நமது தெய்வங்கள் பேசிக்கொண்டும் ஆசாரிகளாக அவதாரம் செய்து கடவுள் பக்தியை உபதேசம் செய்துகொண்டும் ஆங்கிலேயர் வந்த காலத்தில் நமது தெய்வ அம்சங்கள் ஆச்சாரிகளாகவந்து தெய்வ பக்தியைப்பற்றி உபதேசித்துக்கொண்டுமிருந்ததாகவல்லவா நமது பெரியவர்களின் சரித்திரங்களெல்லாம் சொல்லுகின்றன. அதைவிடவா தாங்கள் கடவுள் பக்தியை உபதேசித்துவிடப் போகிறீர்கள்? கடவுள் பக்திக்குசக்தியிருந்தால் அபஜெயமடைய ஏதுவில்லை. அதனாலேயே ஜெயத்திற்கு இன்னும்பல சக்திகளும் வேண்டுமென்றும வெறும் கடவுள் பக்தி உபயோகமில்லை என்றும் ஏற்பட்டுவிட்டது. ஜெயத்தைக்கொடுக்கும் சக்தியானது மனிதருணமான சமத்துவம். அதனால் உண்டாகும் ஒற்றுமை உண்மைக்குப்பரிந்துபேசுதல் தருமத்தின் உண்மைகளைத்தெரிந்து நடத்தல் பொதுலோகவிதியை அங்கீகரித்தல் முதலிய குணங்களாக விருக்கிறது. அவைகளை நமக்கில்லாமையே நமது தாழ்மைக்குக்காரணமேயொழிய கடவுள் பக்தியில்லாத குறையன்று. ஆனதினால் கடவுளைப்பற்றின கவலையை நிறுத்தி நமது அறிவை எதிலும் உபயோகப்படுத்துவோம் என்று சுயமரியாதைத்தலைவர் சொல்லுகிறார். இதில் கடவுள் உண்டு இல்லை என்கிற விவகாரமென்ன விருக்கிறது? முயற்சியினால் பரமபதம் அடையலாமென்றவசிஷ்டவார்த்தைக்கும் ஜீவர்களின் தாழ்மைக்குக்காரணம் ஜீவர்களேயல்லாமல் அந்தக்கடவுளென்று நினைக்கும் மூடர்கள் அதோகதியடைவார்கள் என்ற கைவல்லிய வாக்கியத்திற்கும் உன் கடமையை நீசெய்து உலகத்தில் கீர்த்திமானாய் விளங்கு என்ற கீதைவாக்கியத்திற்கும் விரோதமல்லவே.

தெய்வத்தின் பெயர் சொல்லி படித்தவர்கள் பிழைக்கும் நமது நாட்டில் தெய்வம் இல்லாமல் எங்கேபோகும்? தெய்வம் எங்குமிருக்கிறது. விசித்திரமான நமதுநாட்டுத்தெய்வங்களைப் போல் வேறு எந்த நாட்டிலுமில்லை. அப்பன் கொடுக்கவேண்டிய பிரார்த்தனைக்கடனுக்கு மகளின் கம்மலை யாருக்கும் தெரியாமல் கழற்றிவந்து பணம் கொடுத்தப்பின் கம்மலைக்கொடுக்கும் அவ்வளவு கெட்டிக்காரத் தெய்வம் எந்த ராஜியத்திலாவது இருக்க முடியுமா? தத்துவார்த்தமிருந்த நம்மிடை அதுவாழும் சௌகரியம் புத்தியுள்ளவர்களிடம் அதற்குக் கிடைப்பதில்லை. இமயமலையைத்தாண்டி கைபர் கணவாய் வழியாக மூவாயிரம் பார்ப்பனர்களோடுவந்து அவர்களுக்கு அடிமையென்று சொல்லிக்கொண்டு அவர்கள் வயிற்றுப்பிழைப்பிற்குவழியாக விருக்கும் நமதுதெய்வம் சுல்தானின் சத்தத்தைக்கேட்டவுடன் சமுத்திரத்திற்குள் போய்விட்டதே. சர்ச்சிலைப் போன்றவர்கள் இருக்கும் இங்கிலாண்டுக்கு மகாத்மா காந்திக்குத்துணையாக அந்த தெய்வத்தையா அனுப்பச் சொல்லுகிறீர்கள்? அது எங்கிருக்கிறதோ. எங்கேபோய் ஒளிந்துகொண்டதோ யாருக்குத்தெரியும்.

அதுவுமல்லாமல் நமது தெய்வங்களுக்கு நீங்கள் கேட்கும் சுயராஜியமும், ராஜாங்கத்தார் கொடுப்பதாகச் சொல்லும் சுயராஜியமும் தெரியுமா? தெரியாதே. பொதுலோக விதியை அங்கீகரிக்காத நமது தெய்வங்களுக்கு வட்டமேஜை மகாநாட்டில் விவகரிக்கும் விவகாரங்கள் அர்த்தமாகுமா? நமது கடவுளுக்கு பாஷைவடமொழி யென்பது தீர்மான விஷயம். தென்மொழி தெரியுமென்று சிலர் சொன்னாலும் மந்திரங்களெல்லாம் வடமொழியில் சொன்னால்தான் அவருக்கு அர்த்தமாகுமாம். அப்படியிருக்க ஆங்கிலம் அர்த்தமாவதும் கஷ்டம். கன்னடாசட்டத்தைக்கண்டதேயில்லை. அதுவுமல்லாமல் ஆதிதிராவிடர்களைக்கண்டாலே மூர்ச்சையாய் போய்விடுகிறார். மூர்ச்சை தெளிவதற்கு பணமும், பார்ப்பானுக்குச் சோறும் வேண்டியிருக்கிறது. இப்பொழுதோ ஆதிதிராவிடர்கள் புதுச்சீர்திருத்தத்தில் ஒரு மந்திரி வேலை வேண்டுமென்கிறார்கள். வட்டமேஜை மகாநாட்டில் ஒரு மந்திரிவேலைக்கு அனுகூலமேற்பட்டால் நமது தெய்வம் மூர்ச்சையோடு நிற்காது. செத்தேபோகும். மலேயா நாட்டிலோ ரப்பர் ஈயம் விலை இறக்கம். பர்

(தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க)

தஞ்சை ஜில்லா

சுயமரியாதை மகாநாட்டு

நடவடிக்கை தொடர்ச்சி.

பிறையார்.

தலைவர் புரொபசர் பி. லக்ஷ்மிநரசு பி. ஏ., எல். டி., அவர்களின் முடிவுரை.

பிறகு தலைவர் முடிவுரையாகப் பேசியதாவது:—

சகோதரிகளே! சகோதரர்களே!! உங்களுடைய தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டதைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். அவற்றுள் முக்கியமானது தீண்டாமை ஒழிக்கப்படுவதற்கு இந்து மதம் அழிக்கப்படவேண்டுமென்பதேயாகும். நமது நாட்டில் தீண்டாமையென்பது சாதிகளின் பேரின் மாத்திரமல்லாமல் பெண்கள் சமூகத்தின் பேரில் எல்லாப் பெண்களையுமே தீண்டாமையில் ஆழ்த்தி வைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக பெண்கள் புஷ்பவதியானால் அவர்களைத் தொடக்கூடாது. மாதவிடாயானால் ஒவ்வொரு மாதமும் தொடாமலும், நிழல்கூட மேலேபடக்கூடாத அவ்வளவு தூரத்தில் விலக்கிவைக்கப்பட்டும் வருகிறது. பிள்ளை பெற்றால் கொஞ்சநாட்களுக்குத் தீண்டாதார்களாகவே வைக்கவேண்டும். ஆகையால், பெண்கள் எந்த வகுப்பாயிருந்தாலும் பார்ப்பனருள்பட தீண்டாமை புகுத்தப்பட்டிருக்கிறது. அது போலவே ஒருவருக்கொருவர் வரிசைக்கிரமமாகத்தீண்டாமையென்பது எல்லாரையும் சூழ்ந்து கொண்டிருக்கிறபடியால் இந்து மதத்தையே அடியோடு அழித்தாலொழிய தீண்டாமையொழியாதென்று நீங்கள் கண்டு பிடித்த உண்மையைப் போற்றுவதோடு, அதற்காகச் செய்த தீர்மானத்தையும் பாராட்டுகிறேன்.

மற்றும் நீங்கள் உச்சிக்குடுமி வைத்துக்கொள்ளுதல் கூடாதென்று சொல்லுவேன். அது இந்து மதத்திற்கு ஒரு முக்கிய குறியாகயிருக்கிறது. அடுத்தாப்போல் கர்ப்பத்தடையைப்பற்றிய தீர்மானத்தில் அடியோடு பிள்ளைகள் பெறுவதை நிறுத்திவிட வேண்டுமென்பது கூடாது. ஏனெனில், ஒன்று, இரண்டு குழந்தைகள் இருக்கவேண்டியது மனித சமூகத்தின் அவசியமென்பதோடு சரீரத்தத்துவத்திற்கும் தள்ள முடியாத காரியமாகும். மூன்றாவதாகப் பொதுவுடமை தீர்மானத்தில் சர்க்காரரே எல்லாச் சொத்துக்களையும் கைப்பற்றிக் கொண்டால் ஒழிய ஏழை--பணக்காரன் தன்மை அடியோடு ஒழிந்து விடாது. ஆனால் தொழில்களில் சரீரப் பிரயாசைக்கும் புத்திப்பிரயாசைக்கும் வித்தியாசம் ஏற்படுத்தக்கூடாது. செருப்பு தைப்பதும், புஸ்தகமெழுதுவதும் சமமான வேலையென்றே கருதவேண்டும்.

ஒரு சமயம் ஒரு கப்பலிருந்த எல்லா ஆட்களுக்கும் ஒவ்வொரு வேலை கொடுக்கப்பட்டது. அப்பொழுது ஒரு தத்துவ ஆராய்ச்சிக்காரருக்கு கூட்டும் வேலைகொடுக்கப்பட்டது. அவர் சந்தோஷத்தோடு அதைச்செய்தார். தொழில்களுக்கு யோக்யதையிலும், சன்மானத்திலும் வித்தியாசம் வகிக்காவிட்டால் தொழிலாளி-முதலாளி சம்பந்தமான தகராறுகள் ஒழிந்தே போகும். ஒரு பெரிய மின்சார ஆராய்ச்சிக்காரன் தனது தொழிலை உலகப் பொதுத் தொழிலென்று கருதி, ஒரு செல்வவானிடம் சென்று தனக்கு ஜீவனத்துக்கு மாத்திரமும், ஆராய்ச்சி சம்பந்தமான செலவைக்கொடுத்தால் போதுமென்று சொல்லி ஒப்புக்கொண்டு வேலைசெய்தான். அந்தத்தொழிலாளிக்கும் — முதலாளிக்கும் வித்தியாசமென்பதே யில்லாமல் ஆராய்ச்சியின் மூலம் அநேக அற்புதங்களைக்கண்டுபிடித்தான். அது உலகுக்கு மிகவும் பயன்பட்டது. இம்மாதிரி மனப்பான்மையுடன் உலகக்காரியங்களை எல்லாருடைய பொறுப்புமென்று கருதி வேலை செய்யத் துடங்கினால் தொழிலாளி—முதலாளி தகராறுகள் அநேகம்மறைந்துபோகும். இப்பொழுது எந்தமனிதனும் பணக்காரனாவதற்கு காரணமெல்லாம் மற்றவனுடைய உழைப்பின் பயனை அனுபவிப்பதேயொழிய வேறில்லை. ஆகையால் உங்களுடைய தீர்மானங்களெல்லாம் முக்கியமானதும், அவசியமானதும், மிகவும் பாராட்டப்படத்தக்கதுமாகும்.

இவ்வியக்கம் மேலும் மேலும் விர்த்தியடைய வேண்டுமென்றும், இவ்வியக்கத்தலைவர் திரு ஈ. வெ. இராமசாமி இன்னும் அநேக நாட்களுக்கு ஜீவித்திருக்கவேண்டுமென்று நான் ஆசைப்படுவதோடு என்னால் ஆன உதவிகளையெல்லாம் எந்த நேரத்திலும் இவ்வியக்கத்திற்குச செய்ய காத்திருக்கின்றேன் என்று உங்களுக்கு மனப்பூர்வமாய் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என்று சொன்னார்.

தலைவர் ஆங்கிலத்திலேயே பேசினார். உயர்திரு எஸ். இராமநாதன் அவர்கள் அதைத்தமிழில்மொழிபெயர்த்துரைத்தார். பிறகு திரு. அழகர்சாமி அவர்களாலும் எஸ். வி. லிங்கம் அவர்களாலும் வந்தனோபசாரம் சொல்லப்பட்டது. நாகப்பட்டணம் தொழிலாளர் தலைவர் திரு ருத்திராபதி அவர்களும் சுயமரியாதை இயக்கம் தொழிலாளிகளுக்குஉதவி செய்ய வேண்டுமெனவும், எல்லாரையும் சமமாகப் பாவிக்க வேண்டுமெனவும், உரைத்து சில வார்த்தைகள் பேசினார். திரு ஈ. வெ. இராமசாமி மகாநாட்டை முடிக்கையில் ஒவ்வொரு மகாநாட்டையும் நடத்துவதில் ஏற்படும் கஷ்டங்களையும், சில நண்பர்களின் கூட்டுறவு தாராளமாய் கிடைத்துவருவதால் ஒவ்வொரு மகாநாடும் வெற்றிகரமாக முடிவு பெறுகிறதென்றும், இதைக்கண்டே மகிழ்ச்சியடைந்துவிடாமல் இலாப, நஷ்டத்தையும், மானாபிமானத்தையும், பிறர் பழிப்பையும், மிரட்டலையும் லட்சியஞ் செய்யாமல், லட்சியத்திற்காக உயிர்போகும் வரையில் பாடுபட வேண்டுமென்றும் சொல்லி மகாநாடு நடத்தியவர்களை பாராட்டிப் பேசினார். இத்துடன் மகாநாடு இனிது முடிந்தது.

பொதுக்கூட்டம்.

புரொபசர் பி. லக்ஷ்மிநரசு அவர்கள் சொற்பொழிவு.

பகல் சாப்பாட்டிற்குப் பிறகு 4 மணிக்கு மேல் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. அக் கூட்டத்தில் புரொபசர் உயர்திரு. பி. லட்சுமிநரசு அவர்கள் "புத்த மதம்" என்பது ஓர் மதமல்லவென்றும், தப்பாக அதை மதமென்று ஜனங்கள் சொல்லுகிறார்களென்றும், அது மனிதனுக்கு சில புத்திமதிகளைக் கூறுகிறதேயொழிய எந்தவிதமான கட்டளைகளையும் போதிப்பதில்லையென்றும், அதற்காக எவ்வித நிபந்தனைகளையும் ஏற்படுத்தவில்லையென்றும், அதுயாரையாவது எதைப்பற்றியாவது நிர்பந்திப்பதில்லையென்றும், சித்தார்த்தர் என்கிற ஒரு புருஷன் தன்னை சாதாரண மனிதன் என்றே நினைத்துக் கொண்டு உலக வாழ்க்கையில் தனது அனுபோகத்தின் பயனாய் தனக்குத் தோன்றிய சில எண்ணங்களைக் கொண்டு, தான் நடந்து கொண்ட மாதிரியும் அவற்றின் பலாபலன்களை எடுத்துச் சொன்னதைத்தான் புத்த தர்மமென்று சொல்லப்படுகிறதைத்தவிர வேறு ஒன்றுமேயாருக்காவது எடுத்துச் சொல்லி 'இந்தப்படி நடவுங்கள்' என்றும், 'நடவாவிட்டால் இன்னநிபந்தனை' யென்றும் அவர் யாருக்கும் சொல்லவில்லை. அது மாத்திரமேயல்லாமல், அவர் மக்களுக்கு மற்றொரு விஷயம் நன்றாய்எடுத்துச்சொல்லியிருக்கிறார்.

அது "யார் எதைச் சொன்னாலும் அதில் எப்படிஎழுதியிருந்தாலும், எப்பொழுது முதல், எந்தப்படியாகவோ யார் நடந்து வந்திருந்தாலும் அவற்றை யொன்றையும் கவனியாமல் உங்களுடைய புத்திக்கும் அனுபோகத்திற்கும் சரியென்று தோன்றுவதைச்செய்யுங்கள்" என்றே சொன்னார். உங்களுக்கு நேரில் தெரியாதது எதையும் நம்பவேண்டாமென்றே தைரியமாய்ச்சொன்னார். இக்கொள்கைகளை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்ட மனித சமூக எதிரிகளேதான் புத்தர் ஒரு விஷ்ணு அவதாரமென்றும் அதுவும் ஒரு மதம் என்றும் சொல்லி அவரது தர்மத்திற்கு மதிப்பில்லாமல்செய்து விட்டார்கள். "எனது நண்பர்களும், எனது ஒத்துழைப்பாளர்களும்கூட புத்தர் சொன்னாரென்று யாருக்கும், எதையும் போதிக்கக்கூடாது. மனிதனின் செய்கையும், யெண்ணமும் வெகு ஜனங்களுடைய நன்மைக்காகவும், வெகு ஜனங்களுடைய இன்பத்திற்காகவும், திருப்திக்காகவுமேயிருக்கவேண்டும். அன்றியும், யாராவது ஒருவர் எதைப்பற்றியாவது பேசுவதானால், தான் அறிந்ததாகவும், தனக்குத்தோன்றியதாகவும் பேசவேண்டுமேயொழிய, பிறர் சொன்னாரென்று எதையும் சொல்லக் கூடாது" என்பதுமேயாகும்.

மற்றமதங்களெல்லாம் கடவுள் என்பதான ஒரு நித்திய வஸ்துவையும், ஆன்மா என்பதான ஒரு சிருஷ்டி வஸ்துவையும் கற்பிக்கிறது. புத்தர் அவ்விரண்டையும் ஒப்புக்கொள்ளவில்லை. அவைகள் இல்லையென்றே சொல்லிவிட்டார்.

ஒரு தேரானது எப்படி பல வஸ்துக்களால் அலங்கரிக்கப்பட்டு தேரென்கின்ற ஒரு தனி வஸ்தில்லாமல், தேராகத் தோன்றப்படுகின்றதோ அப்படியே மனிதனும் பல அங்கங்களால் சேர்க்கப்பட்டு, மனிதனாகக் காணப்படுகிறான் என்பது அவரது கருத்து. மற்றபடி நரகம், மோட்சம், இறப்பு, பிறப்பு, கர்மம், முன்—பின் ஜென்மம் ஆகியவைகளைப்பற்றி அவர் கொஞ்சமும் கவலைப்பட்டது கிடையாது. இதைத்தான் புத்தரது அபிப்பிராயமென்று சொல்லுகிறேன்: மற்ற மதங்களைப்போன்று இது

[தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க]

பகுத்தறிவு (அல்லது) கத்தோலிக்க குருவின் மரணசாஸனம்.

(மொழிபெயர்ப்பாளர் S. குருசாமி B. A.)

(காப்பிரைட்)

ஜீன் மெஸ்லியருடைய மரணசாஸனமாகிய இந்நூலைப்பற்றி பிரஞ்சு தேசத்து அறிஞரும், பிரஞ்சு ராஜீயப்புரட்சிக்கு விதை போட்டவர்களில் ஒருவருமாகிய வால்டேர் என்பவர் சொல்லியிருப்பதென்னவென்றால்,—

“இப்புத்தகத்தைப் படித்ததும் திடுக்கிட்டுப் போனேன். ஏனெனில், ஒரு மத குருவானவர் உயிர் விடுந்தருவாயில், தான் கிறிஸ்துமதத்தைப் பிரசாரம் செய்த பாவத்திற்காக மன்னிப்பு கோரி எழுதியிருப்பதென்றால் அது சாமான்ய விஷயமல்ல. ஏனெனில் எப்பேர்ப்பட்ட பொய்யனும் உயிர்போகும் வேளையில் உண்மையைக் கூறியே தீருவான் என்பது உலகமறிந்த உண்மையாகும். (சாகின்றவர்களுடைய உதடுகளில் உண்மையே தாண்டவமாடும் என்று மாத்யூ அர்னால்ட் கூறுகிறார்) ஜீன் மெஸ்லியரின் புஸ்தகமானது மத வெறியர்களுக்கும் மதப்பித்தர்களுக்கும் ஒரு சிறந்த மருந்தாகும். இப்புத்தகம் மாத்திரம் உலகம் முழுதும் பரவுமேயானால் கிறிஸ்து மதத்தின் கதி என்னவாகும் என்பதும் பொதுவாகவே எல்லா மதங்களின் கதியும் என்னவாகும் என்பதும் எனக்கு நன்றாய் விளங்குகிறது. இப்புத்தகத்தை படித்தவர்கள் எல்லோரும் இதன் உண்மைகளில் முற்றிலும் திருப்தியடைந்து விட்டார்கள் என்பதை என் கண்முன்னே கண்டேன். இம்மனிதன் சாமானியனல்ல. அக்கிரமங்களைக் கிளப்பி விட்டு ருசுப்படுத்திக்காட்டுகிறார். ஜீன்மெஸ்லியருடைய மரண சாஸனமானது உலகிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் அளிக்கப்பட்டதாகும். ஆகவே, உண்மையை நாடும் ஒவ்வொரு ஆணும், பெண்ணினிடமும் இப்புத்தகம் இருக்கவேண்டுவது அவசியம், அவசியம், அவசியம் என்று சொல்வேன். தன்னையே தானே ஏமாற்றிக்கொண்ட ஒரு மதகுருவானவர், இறுதிகாலத்தில் அதற்கு வருந்தி, அச்சப்படும் ஒரு நூலானது இதேமாதிரி, தங்களையே தாங்களே ஏமாற்றிக் கொண்டு வாழும் அநேகருக்கு வெளிச்சத்தைக்கொடுக்கும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. முக்கியமாக, உலக வாழ்க்கையை ஆரம்பம் செய்பவர்களாகிய இளைஞர்களுக்கு இப்புத்தகம் ஒரு தீபஸ்தம்பம் என்றே சொல்வேன். உலகத்தில் மெஸ்லியர்கள் லட்சத்திற்கு ஒன்றுகூட கிடைப்பது அரிது; ஆனால் ஏமாற்றுக்காரர்களோ எண்ணித்தொலையாது. அபத்தமானதும் பயங்கரமானதுமான பல விஷயங்களை மனித சமூகத்திற்கு ஊட்டிய கொடுமையை நினைந்து நினைந்து மனமுடைந்து வீறிட்டெழுப்பிய உண்மைக்களஞ்சியமாகிய “பகுத்தறிவு” என்னும் இந்நூலைப் பற்றி இன்னும் என்ன சொல்வதென்றே எனக்கு விளங்கவில்லை”, என்பதாகும்.

ஜீன மெஸ்லியரின் ஜீவிய சரித்திரம்.

ஜீன் மெஸ்லியர் 167[illegible]ம் ஆண்டில் மாஸர்னி என்னும் கிராமத்தில் பிறந்தார் இவரது தகப்பனார் ஒரு நெசவுக்காரர். கிராமத்தில் வளர்ந்து வந்த போதிலும் ஜீன் மெஸ்லியர் தத்துவ சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களைப்படித்து டிப்டியாய் குருஸ்தானத்தை யடைந்தார். சிறு வயதிலிருந்தே நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் உடையவராதலால், அவர் குரு நிலைமையை அடைந்துங்கூட அதே குணங்கள் அவரிடத்தில் காணப்பட்டது ஆச்சரியமல்ல. அவர் தனது கடமைகளில் சிறிதும் தவறுவதேயில்லை. தன சம்பளத்தில் மீதிப்பட்டதை ஏழைகளுக்குக் கொடுத்து உதவினர். அவருடைய இரக்கமான மனதிற்கும் குறைபாத அன்பிற்கும் அவருடைய வாழ்க்கையிலிருந்து பல திருஷ்டாந்தங்கள் கூறலாம்.

ஒரு சமயம் அவருடைய கிராமத்திலிருந்த பிரபு ஒருவர் சில விவசாயிகளைத் துன்புறுத்திய காரணத்திற்காக, ஜீன் மெஸ்லியர் அவருக்காக கடவுள் வணக்கம் செய்ய மறுத்து விட்டார். இவ்விஷயத்தை அப்பிரபு மேலதிகாரிக்குத்தெரிவித்து ஜீன் மெஸ்லியரைப் பல வழிகளிலும் கொடுமைப்படுத்தினர். “ஏழைகள் பணக்காரர்களிடத்தில் படும் கஷ்டத்திற்கு நானே ஒரு உதாரணம். ஆனாலும், பிரபுவை கடவுள் மன்னிப்பாராக; ஏழைகளைத் துன்புறுத்தாதவாறு நல்ல குணங்கள் அவருக்கு அமைய வேண்டுமென்பதே எனது விருப்பம்,” என்று ஜீன் மெஸ்லியர் பொறுமையாகப் பதிலிறுத்தார்.

ஜீன் மெஸ்லியர் 1733ம் ஆண்டில் தனது 55வது வயதில் காலஞ் சென்றார்

அவர் இறந்ததும் சில கையெழுத்துப் பிரதிகள் அவரிடமிருந்து அகப்பட்டன. ஒவ்வொன்றும் 366 பக்கங்கள் கொண்டதாய் 3 நகல்கள் கொண்ட அப்பிரதிகள் முழுதும் அவரது கையாலேயே எழுதப்பட்டிருந்தன. அவைகளின் மேல் “எனது மரணசாஸனம்” என்று தலைப்புக்கொடுக்கப்பட்டிருந்தது. இம்மூன்று நகல்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரிடம் போய்ச்சேர்ந்தது. கௌண்ட் கைலஸ் என்பவர் சில நாட்களுக்குள் அதில் 100 சாப்பிகள் எடுத்து பாரிஸ் நகரில் பறவச் செய்தார்.

ஜீன் மெஸ்லியர் தான் எழுதிய 3 நகல்களையும் ஒரு பழுப்பு நிறமான காகிதத்தில் சுற்றிவைத்திருந்தார் அக்காகிதத்தின் மீது அவர் எழுதியிருந்ததாவது:—

“மனிதர்களுடைய அக்கிரமங்களையும், குற்றங்களையும், கொடுமைகளையும், அறிவீனச் செயல்களையும் என் ஆயுள் முழுதும் கண்டுணர்ந்தேன். அவைகளை நான் ரொம்பவும் வெறுத்தேன். ஆனால் நான் இருந்த நிலைமையில் அவைகளை வெளிப்படையாய்ச் சொல்வதற்கான தைரியமும் சந்தர்ப்பமும் எனக்கு இல்லையென்பதை நான் கண்யமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும் நான் இறந்து போவதற்கு முந்தியாவது நான் கண்ட உண்மைகளை உலகத்திற்குச் சொல்லிவிட்டு உயிர்விடவேண்டுமென்று நினைத்திருந்தேன். அந்த ஆசை நிறைவேறிவிட்டது. நானும் மனத்திருப்தியோடு உயிர்விடுகிறேன்.”

“நான் ஏதேனும் சொந்தப் பிரயோஜனத்தைக் கருதி இவ்வாறு மன மாற்றத்தையடையவில்லை யென்பதை உங்களுக்கு உறுதியாய்க்கூறுகிறேன். ஆனால் எனது உணர்ச்சிக்கு முற்றிலும் மாறான ஒரு வேலையை நான் ஏன் ஒப்புக்கொண்டேனென்றால், ஏதாவது பொருள் திரட்டும் நோக்கத்தினாலல்ல பின் எதனால் என்றால், எனது பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவது கடமை யென்று நினைத்தேன். ஆனாலும் அதைவிட்டு வெளிப்பட்டு உண்மையை உரைத்துவிட வேண்டுமென்ற ஆசை எனக்குண்டு. ஆனால் அப்படிச் செய்திருந்தால், எனது முழு அபிப்பிராயத்தையும் உலகத்திற்குச் சொல்வதற்கு முன்பே நான் கொல்லப்பட்டிருப்பேன்”

“கடவுள் கிருபையை விலைக்கு வாங்குவதற்காக வென்று பாமர ஜனங்கள் பணத்தைக்கொண்டு வந்து கொட்டியதை நான் வெறுத்தேன். பல சமயங்களில் அதை ஏற்றுக்கொள்ளவும் மறுத்தேன். ஐயோ! என்ன கொடுமை! பாமர ஜனங்கள் கண்மூடித்தனமாய் குருவின் பாதத்தில் பணத்தைக்கொட்டி தங்களுக்காக கடவுளை வணங்குமாறு கேட்கிறார்களே, என்பது எனக்கு அவ்வளவு வருத்தமாயில்லை. ஆனால், படுபாவிகளானகுருமார்கள் தாங்கள் செய்வது பெரும் ஏமாற்றம் என்பதை மனப்பூர்வமாக அறிந்திருந்தும் கூட பண ஆசையாலும் அதிகார அவாவினாலும் அதைச் சந்தோஷமாய் அனுமதித்துக்கொண்டும் அனுவித்துக்கொண்டும் இருக்கிறார்களே, அது தான் என் உடலை நடுங்கச் செய்கிறது. குருமார்கள் தங்களுடைய நோகாத வாழ்க்கையை நினைத்து சந்தோஷப்பட்டாலும் படட்டும்; ஆனால் அதற்காக பாமர ஜனங்களை,— சூதுவாதறியாத ஏழை ஜனங்களை, மேலும் மேலும் குற்றங்கள் செய்யும்படி தூண்டுகிறார்களே, அது தான் எனக்குச்சகிக்க முடியவில்லை”

“ஓ! எனது கிராம ஜனங்களே! உங்களிடம் எவ்வளவு தடவைகளில் பணம் பெறாமல் போதித்தேன். இன்னும் ஒரு தம்பிடி கூட வாங்காமல் போதிக்கக்கூடிய சக்தியில்லையே என்று எத்தனை தடவை உங்கள் முன் கதறியிருக்கிறேன்! நினைத்துப் பாருங்கள்! உங்கள் மதத்திலுள்ள ஆபாசங்களை எத்தனை சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன்! பக்தி மார்க்கமான பொய் மூட்

(தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க)

லால்குடி தாலூகா ஆதிதிராவிட மகாநாடு 30-5-31 ௳ காலை 10-மணிக்கு கல்லகத்தில் திருச்சிஜில்லா போர்டு பிரசிடெண்டும், சட்டசபை மெம்பருமான உயர் திரு. டி. எம். நாராயணசாமிபிள்ளை எம். ஏ. பி. எல் அவர்கள் தலைமையில் நடந்தது.

மகாநாட்டுக்கு ஆதிதிராவிடச் சமூக ஆண்களும் பெண்களுமாக 2500 பேர்களுக்குமேலாகவே விஜயம் செய்திருந்தார்கள். மற்றும் திருவாளர்கள் டி. எம். நாராயணசாமி எம். எல். சி., ஈ. வெ. இராமசாமி, பொன்னம்பலனார், சுப்பையா, விசாலாக்ஷி, சுலோசன—பொன்னம்பலம், உறையூர்-பரமசிவம், ஆதிதிராவிட மகாஜனசபை தலைவர் பி. சிவபிச்சை---செல்லம்மாள், அர்புதசாமி, சாமிநாதன், கூத்தப்பெருமாள், அருள்சாமி, செட்டிநாடு சு. ச. கதிரேசன், முருகேசன், அபிமன்னன், போர்மன்னன், செல்லதுரை, செல்லப்பன், பாசித்சாயபு, அப்துல் லத்தீப்சாயபு, மலாய் பெரியசாமி படையாச்சி, டி. கெ. நாராயணசாமி, முனுசாமி-பென்னுடம், திவ்வியநாதன்--ஆதலூர், வரகனேரி வாலிபசங்கத்தார், தியாகராயர் வாசகசாலையார்களும், புதுக்கோட்டை மாஜி சட்டசபை மெம்பர் ரெ. சதாசிவம் அவர்கள், நால்வர்புரட்டை வெளியாக்கியவரும், தமிழ்பண்டிதருமான சிதம்பரம்முத்தரையர், உறையூர்-மருதை, பிரம்பலூர் குலாம்மைதீன்சாயபு முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாடு சரியாய் 10-மணிக்குக்கூடினதும் தலைவர்வருவதற்கு சற்றுநேரமாகியதால் உயர் திரு ச. ம. சி. பரமசிவம் அவர்கள் தலைமையில் திருமதி சு. ப. விசாலாக்ஷி பாட்டு பாடியபின் திருவாளர்கள் பொன்னம்பலனார், ஈ. வெ. இராமசாமி, பென்னுடம் நாராயணசாமி, சாமிநாதன், ஆரோக்கியசாமி, முதலியவர்கள் உபன்யாசங்கள் செய்தார்கள்.

தலைவர் திருவாளர் நாராயணசாமி பிள்ளை அவர்கள் சரியாய் 12 மணிக்கு வந்ததும், பெருத்த ஆரவாரத்திடை வரவேற்று, ஆசனத்தமர்த்தி வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

வரவேற்புத்தலைவர் திரு. முத்துசாமி அவர்களின் வரவேற்பு உபன்யாசம்.

லால்குடி தாலூகா ஆதிதிராவிடர் மகாநாடு.

திருச்சி ஜில்லா போர்டு தலைவர் உயர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். எல். சி. அவர்கள் தலைவர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. முத்துசாமி அவர்களின் வரவேற்பு உபன்யாசம்.

கனவான்களே! சகோதரர்களே!! சகோதரிகளே!!!

எங்களின் வேண்டுகோளுக்கிணங்கி, இங்கு கூடியிருக்கும் பிரதிநிதிகளுக்கு என்மனமார்ந்த வந்தனத்தோடு வரவேற்கின்றேன். இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க இசைந்துள்ள உயர்திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். ஏ., பி. எல்., எம். எல். சி. அவர்களுக்கும் இம்மகா நாட்டிற்கு விஜயம் செய்துள்ள சகல பிரதிநிதிகளின் சார்பாக எனது அன்பார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

T. M. நாராயணசாமி பிள்ளைக்கு வரவேற்பு.

தருமம் வாய்ந்த தலைவர் திருவாளர் டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் ஏழைகளாகிய எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க இசைந்துள்ளதற்கு நாங்கள் யாது கைமாறு செய்யவல்லோம்.

அநேக நூற்றாண்டு காலமாக நாங்கள் மிருகங்களைவிடக் கேவலமாய் நடத்தப்பட்டு வருகிறோமென்றும், ஜில்லாபோர்டு, தாலூகா போர்டு ஸ்தாபனங்களின் மூலமாய் எங்களின் குறைகளை நிவர்த்தி செய்யத் தங்களால் கூடுமாயினும், சுயநலமுள்ளவர்களால் அந்த ஸ்தாபனங்களின் மூலமாகக் குறைகளை நிவர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன.

அன்பு நிறைந்த அண்ணலே! தாங்கள் எங்கள் குறைகளை நன்றாய் அறிந்தவரென்றும், அவைகளைத் தீர்க்கத் தகுந்த ஆற்றல் உடையவரென்றும், இம்மகா நாட்டிற்குத் தலைமை வகிக்கத் தங்களை வேண்டிக்கொண்டோம். இம்மகா நாட்டின் சார்பாகவும், சகல பிரதிநிதிகளின் சார்பாகவும், இம்மகாநாட்டில் தலைமை வகித்து, எங்கள் மகா நாட்டை நடத்துமாறு தங்களைத் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஈ. வெ. இராமசாமி யாருக்கு வரவேற்பு.

கனவான்களே! சகோதரர்களே!!

இம்மகா நாட்டிற்கு விஜயம் செய்ய இசைந்துள்ள ஈ. வெ. இராமசாமிப் பெரியார் அவர்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லாமல் இருக்க என்மனம் வேறு ஒன்றைப்பற்றி பேச இடங்கொடுக்கவில்லை, அந்த பெரியாரைப் புகழ்ந்து பேச வேண்டுமானால் என்மனதிற் உள்ளான வேகத்திற்கேற்ற வார்த்தைகளே தமிழ் அகராதியில் இருக்காதென்று கருதுகின்றேன்.

ஜாதி என்னும் சண்டாளப்பேயையும், தீண்டாமை யென்னும் கொடிய நோயையும், அடிமைத் தனத்தையும், ஏழ்மைக் கொடுமையையும் இந்நாட்டைவிட்டுத் தொலைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு, தமது உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் தத்தம் செய்து இரவு, பகல் ஓயாமல் பல இடங்களுக்குச் சென்று பிரசங்கங்கள் மூலமாயும், பேப்பர்கள் மூலமாயும் மனு அதர்மசாஸ்திரக்கொள்கையை ஒழித்து சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நிலைநாட்டிய பெரியாரே! இம்மகா நாட்டின் சார்பாகத் தங்களை அன்புடன் வரவேற்கின்றேன்.

தங்களுடைய சமதர்மக் கொள்கைக்கு விரோதமாய் அநேக எதிர்ப்புகள் அடிக்கடி சம்பவித்தபோதிலும், எதிர்பாராத புதிய புதிய எதிரிகள் தங்களுக்குத் தோன்றியபோதிலும் தாங்கள் ஆரம்பித்தபுரட்சி இயக்கமானது உண்மை அன்பின் இயக்கமாக இருக்கிறபடியால் நாடெங்கும் காட்டுத் தீப்போல் பரவிக்கொண்டு வருகின்றது. தாங்கள் வீரதீரத்துடனும், அஞ்சாத நெஞ்சத்துடனும் தங்கள் ஆயுள் பரியந்தம் இந்த இயக்கத்தைப் பிரவசஞ் செய்து சர். டி. சதாசிவ ஐயர் சொல்லியதுபோல் தீண்டாமை என்னும் பேயை நமது தேசத்தைவிட்டு உதைத்துத்தாத்த முயற்சிப்பீர்களென்று நம்புகிறோம்.

தீண்டாமையும்ஜாதிவித்தியாசமும்

சகோதரர்களே! நாம் அநேக நூற்றாண்டுகளாக தீண்டாதவர்களாகவும் தாழ்ந்தசாதியர்களாகவும், பாவிக்கப்பட்டும், நடத்தப்பட்டும், வருகிறோம். இதற்கு ஆதாரமாக இந்து மதத்திலுள்ள ஸ்மிருதிகளும், சுருதிகளும் இருந்து இப்படிப்பட்ட தீண்டாமையையும், ஜாதிவித்தியாசத்தையும், கடவுளே உண்டாக்கினார் என்றுரூபித்துக் காட்டுகிறதின் மூலம் அவைகளுக்கு பலத்தைக் கொடுத்து வருகிறது.

இப்படிப்பட்ட வித்தியாசங்களை போதிக்கும் சாஸ்திரங்களை பொய்யென்று ரூபிக்க நான் சாமர்த்தியமுடையவனல்லவென்று சொல்லக் கூடுமாயினும், கடவுளே சாதிவித்தியாசத்தை உண்டாக்கினவர் அல்லவென்று நான் தைரியமாய்ச் சொல்லக்கூடும்,

எவ்வாறெனில் ஆடு, மாடு, கழுதை, பன்றி, நாய் முதலிய மிருகங்கள் தனித்தனி ஜாதியாக உண்டாக்கப்பட்டிருக்கின்றன. நாயும் பன்றியுமோ, கழுதையும் ஆடுமோ சேர்ந்து ஒரு ஜெந்துவை ஜெனிப்பிக்க முடியாது; அதுபோலவே தாழ்த்தப்பட்டவர்கள் என்றுங்கடவுளால் இழிவுற்ற ஜாதியாக உண்டாக்கப் பட்டவரென்றும் சொல்லப்பட்ட நம்மவர்களில் ஒரு மனிதன் அல்லது மனுஷிக்கும், சகல ஜாதிகளுக்கும், உயர்ந்த ஜாதியாக மதிக்கப்படும் ஒருகூட்டத்தைச் சேர்ந்த ஒரு மனுஷனுக்கும், மனுஷிக்கும் ஒற்றுமை இருக்கக்கூடாது. இவர்கள் சேர்க்கையால் புதிதாக ஒரு ஜந்து ஜெனனமாகக்கூடாது அல்லவா? அப்படிமுடிகிறதா?

மேலும் நம்மில் ஒருவனுடைய கண்ணை நன்றாய்க் கட்டிவிட்டு பலவித மிருகங்களைக் கொண்டு வந்துவிட்டால் தடவிப் பார்த்து அந்த மிருகங்களின் அவயவங்களின் வித்தியாசத்தை நன்றாய் உணர்ந்து பேதாபேதத்தைக்கண்டு அவைகளை இன்னின்ன மிருகமென்று திட்டமாய்ச்சொல்லக்கூடும்.

ஆனால் நம்மில் ஒருவனையும், உயர்ந்த ஜாதியென்று சொல்லப்பட்டக் கூட்டத்தில் உதித்த ஒருவனையும், கொண்டுவந்து விட்டு தடவிப்பார்த்து வித்தியாசம் கண்டுபிடிக்கச்சொன்னால், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றதைக்கொண்டு உறுதிப்படுத்தக் கூடும்? உண்மையில் கடவுளே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று உண்டாக்கி இருப்பாரானால் அப்படிப்பட்ட வித்தியாசம் காட்டுவதற்கு சரீரத்தில் ஏதேனும் ஓர் அடையாளம் உண்டாக்கி இருக்கவேண்டும். வாஸ்தவத்தில் நான் ஒரு தாழ்த்தப்பட்டவன், தீண்டப்படாதவன் என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள். என்னை அறியாத ஓர் இடத்திற்கு நான் போக நேரிட்டால் என்னைப்பார்த்து நீர் என்ன ஜாதிமனிதனென்று ஏன் கேட்க வேண்டும்? ஆடு, மாடு மற்ற மிருகங்களைப்பார்த்து, இது ஆடா? நீ என்னஜாதி என்று கேட்கிறோமா?

கடவுள் என்னை ஒரு வித்தியாசமான ஜாதியான் என்று உண்டாக்கி இருந்தால் என்னைத்தடவிப்பார்த்தோ அல்லது முகர்ந்துப்பார்த்தோ ஏன் என்னைத்தெரிந்துகொள்ளக் கூடாது?

மேலும் இந்துமத சாஸ்திரங்களின் படி நாம் "முன்ஜென்மத்திலேபாவம் செய்ததினால் நாம் எல்லோரும் தாழ்ந்தவர்களாகவும், ஏழைகளாகவும், சண்டாளர்களாகவும், (அல்லது) நீசர்களாகவும் பிறந்து இருக்கிறோம்" என்றும்,

ஆதலால் நம்மை மற்றவர்கள் தொடக்கூடாதென்றும், "தொட்டால் பாவம், அந்தப்பாவத்தை அல்லது தோஷத்தைப்போக்க ஸ்நானம் செய்யவேண்டு"மென்றும் சொல்லுகிறார்கள். அவ்வாறே முன்ஜன்மத்தில் பாவத்தைச் செய்து நாம் நீசர்களாக இருப்பது சரிதான். நம்மை தொடக்கூடாதுதான், தொட்டால் தோஷந்தான் என்பதாகவே வைத்துக் கொள்ளுவோம்.

ஆனால் நம்மைப்போல் முன் ஜன்மத்தில் அதிகபாவத்தைச்செய்துவிட்டு, நம்மைவிடக்கேவலமான மிருகங்களாகப்பிறந்து இருக்கும் நாய், பன்றி

தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க.

லால்குடி தாலூகா மூன்றுவது
சுயமரியாதை மகா நாடு.

கதரைக்கண்டித்துத் தீர்மானம்.

S. இராமநாதன் M. A. B., L., தலைவர்.

T. V. சோமசுந்திரம் B.A., B.L., வரவேற்புத்தலைவர்

நீலாவதி அம்மையார் மகாநாட்டைத் துவக்கியவர்.

——:0:——

லாலுகுடி தாலூகா 3-வது மகாநாடானது இவ்வருஷம் லாலுகுடிக்கு அடுத்த நகர் கிராமத்தில் நடத்துவதாக திருவாளர்கள் ஆரோக்கியசாமி, இரங்கசாமி முதலாகிய கனவான்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததானலும் லாலுகுடி பூவாளூர் முதலிய இடங்களின் வாலிபர்கள் அம்மகாநாட்டை லாலுகுடியிலேயே நடத்தவேண்டுமென்று ஆசைப்பட்டு ஷியார்களுக்கு தெரிவித்துக் கொண்டதை உத்தேசித்து லாலுகுடியில் நடத்தப்பட்டது. இவ்வருஷ மகாநாடானது மூந்திய வருஷத்திய மகாநாட்டைவிட மிகச்சிறப்பாகவும், பெருமையாகவும் நடைபெற்றது

31—5—31 தேதி காலை 9 மணிக்குத் தலைவாவர்களைத் திருவாளர்கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் புதிய பங்களாவிலிருந்து வாத்தியங்களுடன் மகாநாட்டு மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்துடன் சுமார் ஆயிரம் பேர்கள் பின் தொடர்ந்து வந்தார்கள். ஊர்வலம் சரியாய் 10 மணிக்கு மண்டபம் அடைந்ததும் ஜன நெருக்கடி மண்டபம் இடம் கொள்ளவில்லை. லாலுகுடி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு நடந்த இடத்திலேயே இம்மூன்றுவது மகாநாடு நடந்தது என்றாலும் இவ்வருஷம் கூடிய ஜனங்கள் முன்னையை விட ஒரு பங்கு அதிகம் என்றே சொல்லலாம். அரைவாசி ஜனங்களாலேயே மண்டபம் நிறைந்துவிட்டது. அனேகம் பேர்கள் வெளியிலும் சுற்றுப்புற ஜன்னல்களண்டையும் நின்று கொண்டு பார்த்தார்கள். தீண்டாதவர்கள் என்று சொல்லப்படும் சமூகத்தார் ஏராளமாய் விஜயம் செய்திருந்தார்கள்.

திருவாளர்கள். திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்ட் ராவ்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை லாலுகுடி தாலூகாபோர்ட் பிரசிடெண்ட் கிருஷ்ணசாமி ரெட்டியார், வைஸ் பிரசிடெண்ட் பரமசிவம் பிள்ளை, ஷியார் தமயனார், ராஜா. சிதம்பரம், உரையூர் பரமசிவம், உரையூர் துரைராஜும் கே, முசிரி கந்தசாமி என். எஸ், துரைசாமி நாயுடு, ஈ. எஸ். ரெங்கசாமி, கலியபெருமாள், தேவேந்திரகுல வேளாளர்சபை காரியதரிசி ஜி. சந்நாசி, மணிகை ரெங்கசாமி என். முசிரி வி. மாணிக்கம், கே. பி. சுப்பிரமணியம் (மகாதேவி) எல். கே. சம்பந்தமுதலியார், கூத்தப்பெருமான், பொன்மலை துரைசாமி, பரிபணம் பிள்ளை, எல். எம். சப்பாணி முதலியார், கூத்தப்பெருமாள், நடேசன், சதாநந்தன் (பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கக்காரியதரிசி] தலைவர் எஸ். ராமநாதன், ஈ. வெ. இராமசாமி, முருகப்பா, மரகதவல்லி, ராமசுப்பிரமணியம், நீலாவதி, சுப்பையா, விசாலாட்சி, பொன்னம்பலனார், சுலோசனா, டி. வி. சோமசுந்திரம், அவரது தாயார், கே.எம். பாலசுப்பிரமணியம், கதிரேசன், செல்லக்கணபதி, அவரது மனைவியார், குருநாதசாமி, தாத்தையார், ராஜகோபால், எல். பீ. ராதா, எல். சி. ராஜகோபாலன், டி. சி. சிங்காரம், உரையூர் மருதை (ஆதி திராவிடசபைக் காரியதரிசி) குரும்பலூர் குலாம்மொய்தீன், எஸ். எஸ். ராமானுஜம், பீமநகர் சின்னசாமி, எம். சாமிநாதன், வரகனேரி பெருமாள், செல்லதுரை, எஸ். அபிமன்னன், சுப்ரமணிய பிள்ளை, பி. பேரமன்னன், கூகூர் குருநமசிவாயம் பிள்ளை, ஸ்ரீரங்கம் காமாட்சியா பிள்ளை, ஷியூர் லட்சுமணன், டி. துரைசாமி, பீமநகர் பாலகிருஷ்ணன், எஸ். ஆரோக்கியசாமி, வரகனேரி வாலிப சங்கத் தலைவர், எஸ். பிரான்சிஸ், எல். டீ. ராஜு, (யூனியன் உதவித் தலைவர்] பாலக்கரை அற்புதசாமி, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, வாசுதேவன், சிவபிச்சை, ஆறுமுகம் முதலியவர்களாவார்கள்.

கூட்டம் மண்டபத்தில் நிறைந்தவுடன் வரவேற்புத்தலைவர் திரு. டி. வி. சோமசுந்திரம் அவர்கள்மகாநாட்டைத்துவக்கும்படி திருமதி நீலாவதியம்மையாரைக் கேட்டுக்கொண்டார்.

நீலாவதி.

திருமதி நீலாவதியம்மையார் பெருத்தகரகோஷத்தினிடையில் எழுந்து நின்றுபேசியதாவது:—

சகோதரிகளே! சகோதரர்களே!! இந்த லாலுகுடி தாலூகா சுயமரியாதை மகாநாட்டைத் துவக்கும்போது நான் ஏதாவது சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். என்ன புதிதாகச் சொல்லுவது என்பது எனக்குத்தெரியவில்லை. அன்றியும் சாயலாவில் இந்த நான்கு நாளாய் படுக்கையில் இருந்து இவ்வியக்கத்தில் எனக்குள்ளபைத்தியத்தினால் இங்கு வந்து நிற்கின்றேன்.'

நமதுபரிசுத்தஅறிவு இயக்கம்சுயமரியாதைஎன்னும்பேரால் தோன்றி இன்றைக்கு ஐந்து வருஷங்கள் ஆகின்றது. இந்த இயக்கமும் இந்த இயக்கக் கர்த்தாவாகிய பெரியாரும், அடுப்பூதிக்கொண்டும், சட்டி சுரண்டிக்கொண்டுமிருக்கவேண்டியஎன்போன்றபெண்களை இம்மாதிரிமேடையில்வந்து நின்று 'கடவுளாக' மதிக்கப்படவேண்டிய புருஷர்களுக்குப்புத்திமதி சொல்லக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டுவிட்டது. ஆகவே அப்பெரியார்களுக்கு பெண் உலகம்சார்பாக என்னுடைய நன்றியறிதலைமுதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நண்பர்களே! நமது இயக்கம் யாரையும் எவ்விதக் கஷ்டத்தைப்படும்படியாகவும், தியாகத்தைச் செய்யும்படியாகவும், காசு பணத்தைக் கொடுக்கும்படியோ, செலவு செய்யும்படியோ கேட்பதில்லை. "உங்கள் பகுத்தறிவைப் பயன்படுத்துங்கள். வீணைக்காசுபணத்தைப் பாழாக்காதீர்கள். கடவுள், மதம், மோட்சம், ஆத்மா, சடங்கு, பூசை, உற்சவம், பண்டிகை முதலாகிய அர்த்தமற்ற விஷயங்களுக்காக உங்கள் அறிவையும, பணத்தையும், நேரத்தையும் செலவாக்காதீர்கள்" என்றுதான் சொல்லுகின்றது. இதனால் யாரும் கோபித்துக் கொள்ளவேண்டியதில்லை. யாராவது கோபித்துக் கொள்ளவேண்டுமானால் மேற்கண்டவைகளின் பேரால் பாடுபடாமல் வயிறுவளர்க்கும்--வரும்படி சம்பாதிக்கும் சோம்பேறிகளும், சூட்சிக்காரர்களும்தான் கோபித்துக் கொள்ள வேண்டும். உலகமே முன்னேற்றி—ஆகாயத்தில் பறந்துகொண்டு இருக்கும் இந்தக் காலத்தில்நாம்இன்னும்இந்தசோம்பேறிவயிற்றுப்பிழைப்புஆசாமிகளின்கோபத்திற்குபயந்துகொண்டு இருப்பதுஇந்தநாட்டிற்கேமானக்கேடாகும். இந்நாட்டுப் பெண்மணிகளை வெறும் அடுப்பூதிகளாகவும், சட்டிசுரண்டும் அடிமைகளாகவும் ஆக்கியது மேல்கண்ட மதம் சாஸ்திரம் என்கிற பேய்களல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள். உலக மனித சமூகம் என்றால் ஆணும், பெண்ணும் சேர்ந்துதானா? அல்லது ஆண்கள் மாத்திரமா? என்று யோசித்துப்பாருங்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்த விதத்தில் உயர்வு தாழ்வு கற்பிக்க முடியும்? ஒரு சரீரத்திற்கு இரண்டு கண்களும் பிரதானம் போலவே உலகத்திற்கு ஆண், பெண் என்கின்ற இரண்டு கண்களுமே பிரதானம். அப்படி இருக்க ஆண்கள் மாத்திரம்தான், படிக்க சுதந்திரமாய் இருக்க, சொத்துக்கள் அடைய உரிமை உடையவர்களாகவுமிருக்கிறார்கள். பெண்கள் படிக்கக்கூடாத, சுதந்திரத்துடன் இருக்கமுடியாத, சொத்து உரிமை அடையமுடியாத அடிமைகள். வேலைக்கு விலைக்கு வாங்கும் மிருகங்கள் எனப்பாவிக்கப்பட்டால் ஒரு கண்ணுக்கு வெண்ணையும், ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பும்இட்டதுபோல் ஆகவில்லையா? இப்படிப்பட்ட "பெருமைகளை" உடைய நாடு ஒரு கண் பொட்டையான நாடாய் குருட்டு நாடாய்த்தானே விளங்கும்.

இந்தக்கொடுமையை மக்கள் செய்துவிட்டு இதை மதத்தின் பேரிலும் கடவுள் பேரிலும் சுமத்திக்கொண்டிருந்தால் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் கேட்டுக்கொண்டு பெண்கள் அடுப்பூதிக்கொண்டிருப்பார்கள்?

இனி ஒரு நிமிஷமும் பொருக்க எங்களால் முடியாது. எங்களை அடுப்பூதிக்கொண்டிருக்கும்படி சொல்லும் எந்தக்கடவுளானாலும் எந்த மதமானாலும் அது ஒழிக்கப்பட்டாகவேண்டும் என்றுதான் சொல்லுகின்றேன். அல்லது அப்படி "கொடுமைப்படுத்துவது கடவுளும் அல்ல மதமும் அல்ல. ஆண் மனிதசமூகம்தான். தங்கள் சுயநலத்திற்குகாக அப்படிச் செய்கின்றது" என்று சொல்வதானால் அந்த மனிதசமூகமும் அடியோடு ஒழிக்கப்படவேண்டும்என்றுதான் சொல்லுகின்றேன். ஆகையால் சகோதரர்களே! மனிதர்களை, மனிதர்கள் தாழ்மைப்படுத்திக் கொடுமைப்படுத்தி அடிமை கொள்ளுவதை விட்டொழிக்கவேண்டும். இதுதான் எனது அருமையான சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாகும்.

இப்படிப்பட்ட ஒரு பெரிய இயக்கத்தின் சார்பாக இங்கு நடைபெறும் இம்மகாநாட்டை எனது மனப்பூர்வமான ஆசையுடன் துவக்குகின்றேன் என்று சொல்லி அமர்ந்தார்.

பிறகு திருவாளர். டி. வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல். அவர்கள் தனது வரவேற்பு உபன்யாசத்தைப் படித்தார். அது பின்வருமாறு:-

டி. வி. சோமசுந்தம் பி.ஏ., பி. ல்., அவர்களின் வரவேற்பு உபன்யாசம்.

சகோதரிகளே! சகோதரர்களே!!

உங்களுக்கு மனப்பூர்வமான நல்வரவு கூறுகின்றேன். அன்பர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக!

தலைவருக்கு வாழ்த்து.

இம்மகாநாட்டை நடத்திக்கொடுக்க ஆற்றலும், அறிவும், கல்வியும், விசால நோக்கமும், எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற தலைவராகிய உயர். திரு. எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல்., அவர்கள் நமக்கு இச்சந்தர்ப்பத்தில் கிடைத்ததைப்பற்றி அளவற்ற மகிழ்ச்சி அடைவதுடன், எங்களுடைய மனமார்ந்த நன்றியறிதலை அவருக்குச் செலுத்துகிறோம். அரசியல் உலகத்தில் தலைவரவர்கள் செய்ததீவிரமானதொண்டைப்பற்றியும், தியாகத்தைப்பற்றியும், சுயமரியாதையின் சார்பாக உண்மையான தர்மங்களுக்காக அவர் காட்டும் ஊக்கம்,

உழைப்பு முதலியனபற்றியும் நான் உங்களுக்கு எடுத்துக் கூறவேண்டிய அவசியம் இல்லை.

நமது இயக்கமும் நாட்டின் நிலைமையும்.

உலகில் நேற்றுப்பிறந்த நாடுகளெல்லாம் நாகரீகம், செல்வம், கல்வி, அறிவு முதலியவற்றால் சிறந்து முன்னேற்றமடைந்துவிட்டன. உலக முழுவதிலும் சுற்றிப்பார்த்தாலும் நம் நாடு இருக்கும் தாழ்வுற்ற நிலைமையைப்போல் மற்றொரு நாடு இருப்பதாகத் தெரியவில்லை என்று சொல்லப்படுகிறது. ஏழ்மைத்தனம், கல்வியின்மை மூடப்பழக்க வழக்கங்கள் இவைகளெல்லாம் நம் இந்திய தேசத்தில் மட்டும் ஸ்திரமாகக்குடிகொண்டிருக்கின்றன. எல்லா வழிகளிலும் நம் நாடு தாழ்வுற்று, பிறர் பழித்து புத்தகங்களை எழுதிக் கைக்கொட்டிச் சிரிப்பதற்கு இடமாயிருக்கிறது. நமது நாடு புத்துயிர்கொண்டு நன்மணம்பெற்று, புகழ்வீசி எழுவதற்கு ஆணிவேராக இருப்பது இன்று நிறுவப்படுகின்ற சுயமரியாதை மகாநாடு போன்ற மகாநாடுகளும், சீர்திருத்த சுயமரியாதைச் சங்கங்களும், அவற்றில் ஆற்றலும், பொறுப்பும் உடைய மக்களுமேயாகும். இனியும் இத்தகைய தொண்டர்கள் சேர்ந்த பல்லாயிரம் சங்கங்களும், மகாநாடுகளும் தோன்றவேண்டும். அவைகளே எண்ணிய கருமம் துணிந்து கடமையைக் கைப்பற்றி காரியத்தில் ஒவ்வொன்றையும் செய்துகாட்டி இடைவிடாது உழைத்து வெற்றியைக் கொடுக்கவல்லன. அன்னிய ஆட்சியை விடுத்து விடுதலை பெறவேண்டுமாகில், முதலில் நமது அறிவுக்கு ஊறு விளைவித்துவரும் மூடப்பழக்க வழக்கங்கள் நம் ஜனசமூகத்தை விட்டு அறவே தொலையவேண்டும். படிப்பு, ராஜரீக தந்திரம், உறுதி, தைரியம், தன் மதிப்பு முதலியவைகளை நாட்டின் ஒவ்வொருவரும் அறியவேண்டும். இதைத்தான் நமது இயக்கம் செய்விக்க அரும்பாடுபடுகிறது. ஜனசமூகங்கள் எவ்வளவு நிர்பந்தத்தில் அகப்பட்டுக் கிடந்தாலும் தம்மை மாத்திரம் இரட்சித்துக்கொள்வதற்கு ஆயுதமாக இழிந்த தந்திரம், வஞ்சகம், கபடம் இவற்றைக் கையாளும் சுயநலக்காரர்களையும், தம்மைவிடபலசாலிகளின் பாதங்களைத் தாங்கித் தன்னைவிட பலஹீனர்களைத் தாக்கும் ஒவ்வொருவருடைய பேய்க்குணங்களையும் உலகறியச்செய்வதும், உண்மை தேசாபிமானிகளை நாடெங்கும் பரவச் செய்வதும்தான் நமது நோக்கம். பொது ஜனங்களின் நன்மைக்கு அடிப்படையான சீர்திருத்த நிலையங்களும் உண்மைக்குழைக்கும் சங்கங்களும் வேஷத்திற்கின்றி வயிற்றுப்பிழைப்புக்கன்றி உண்மைத்தொண்டுபுரியும் உத்தம வீரர்களும், முன்னேற்றத்திற்காக உழைக்கும் பத்திரிகைகளும் தான் நம் நாட்டிற்கு உண்மை வழிகாட்டிகள். மக்களுடைய சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், அன்பையும், ஒற்றுமையையும் பெருகச் செய்வதும், ஆதரவற்றவர்களுக்கும், கஷ்டப்படுபவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவருக்கும் உதவிபுரிவதும், ஜனசமூகத்தில் கல்வி, சுகாதாரம், கைத்தொழில் பெருகச்செய்வதும்தான் நமது இயக்கத்தின் லக்ஷியங்கள். இதற்காக உலகத்தில் இவன்உயர்ந்தவன் அவன் தாழ்ந்தவன் என்று வெறும் பந்தயம் போட்டுக்கொண்டு ஜாதிவித்தியாசக் கொடுமைகளை நிலைநாட்டி சமூக முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் தடையாயிருக்கும் சாஸ்திரங்களையும் புராணங்களையும் சுட்டெரிக்க வேண்டுமென்றுதான் சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள். மதப்புரட்டுகளெல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காக அயோக்கியர்களால் சுயநலம் கருதும் தூர்த்தர்களால் ஏற்படுத்தப்பட்டதென்பதில் என்ன சந்தேகம்? மக்கள் முன்னேற்றத்திற்கு மதம் வந்து தடைசெய்தால் அது எந்த மதமாயிருந்தாலும் அதை ஒழித்துத்தான் ஆகவேண்டும் என்பதே நமது உறுதி. நம்நாட்டைக்கேவலஸ்திதிக்கு கொண்டுவந்தது கடவுளானாலும் சரி, அந்தக்கடவுளைத்தான் ஒழிக்கவேண்டுமென்றும், மதத்திலும் ராஜியத்திலும் சம உரிமை உண்டென்பதைத் தடுப்பதற்கு எந்த மனிதனாவது, எந்த சமூகமாவது, எந்த ஜாதியாவது, எந்த தேசமாவது எந்தக் கொள்கையாவது வழக்கமாவது எதுவானாலும் சரி அதை உடைத்தெறியுங்கள் என்றும்தான் சொல்லுகிறது நம் சுயமரியாதை இயக்கம். மக்களின் அடிமை விலங்கை அறுத்தெறிந்து, ஜாதிக்கொடுமைகளை ஒழித்து, சமத்துவம் நிலைநாட்டி "எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்திய மக்கள்" என்ற ஒற்றுமையைக் காட்டி மக்களில் தாழ்த்தப்பட்டோர் தீண்டாதார் என்ற சப்தமே காதிற் படாமல் செய்வதற்காகத்தான் சுயமரியாதை இயக்கம் தோன்றி பாடுபடுகின்றது.

மோட்சலோக வழிகாட்டிகள் யார்?

சுயநலக்காரர்களும் குறுகிய நோக்கமுடையவர்களும் நம்மையும் நம் இயக்கத்தையும் குறை கூறித்தான் திருவார்கள். இகலோக சாதனத்தை மாத்திரமே சதா விரும்பும் நாஸ்திகர்களென்று நம்மை ஏளனம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட அன்பர்களுக்கு இங்கு சிலவார்த்தைகள் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. பரலோக சாதனத்திற்குச் சீட்டுக்கொடுக்கும் மோக்ஷவழிகாட்டிகள் யார்? ஆதீனமடம், விபசார விடுதிகள், சோம்பேறி மடங்கள், கோவில் இவைகளையும் இவை போன்றவைகளையும் உண்டாக்கிக் கொடுக்கும் வள்ளல்களா? அல்லது லக்ஷக்கணக்கான சோம்பேறிகளுக்கு போஜனம் செய்விக்கும் புண்ணியவான்களா? அல்லது யானை, விருது; கொடி, தப்பட்டம், மேளவாத்தியம், பாதகுறடுமுதல் பிள்ளையார் வரை வெள்ளியும் தங்கமுமாய் பல பக்தகோடிகளுக்கு பாதகாணிக்கைகள் வைத்து மோக்ஷ சாதனத்திற்கு வழிகாட்டிக்கொடுக்கும் தன்னலம் கருதும் தம்பிரான்களா? வர்ணாச்சிரம தர்ம மகாநாடுகள், சைவ சித்தாந்த மகாநாடுகள், ராமாயண பாரத பாகவத பெரியபுராணக்காலக்ஷேபங்களா? இந்த மோட்ச வழிகாட்டிகளால் நம் நாட்டிற்கு இதுவரை ஒரு செல்லாக் காசளவாவது பிரயோஜனம்உண்டா? இவ்விதமான பக்தர்கள் பெருகப்பெருக நாடு பாழாகிறது. இவர்களை நாம் ஒழிக்கவேண்டுமென்று சொல்லிவிட்டால் "நம்மை நாஸ்திகர்கள், மதத்துவேஷிகள், புராணங்களின்மகிமை அறியாதவர்கள்! திக்விஜயத்தின் தத்துவத்தை அறியாதவர்கள்! மோட்சலோக துறவிகளின் பெருமை அறியாதவர்கள்! மேல்நாட்டு நாகரீக பக்தர்கள்! சீர்திருத்தப் பைத்தியம் பிடித்தவர்கள்! பண்டைக்கால வழக்கங்களை மாற்ற முயற்சியெடுக்கும் புரட்சிக்காரர்கள்! பிராமணத்துவேஷிகள்! சைவ வைணவத்ரோகிகள்" என்று தூற்றுகிறார்கள். நம் நாட்டின் ஆபாசங்களை எல்லாம் எடுத்து வெளிக்குக் காட்டிவிடுகிறோமென்று நம்மை நிந்திக்கிறார்கள். இந்தப்படி நம்மைக் குறைகூறும் முரட்டு வைதீகர்களுக்கும், கோபம் கொண்டு சீறிவிழுகின்ற பத்திரிகைகளுக்கும், சுயநலக்காரர்களுக்கும்நாம் ஒருக்காலும் அஞ்சப்போவதில்லை. "பொது மக்களுக்கு நன்மை பயக்காதது எதுவும் தேவையில்லை. மன்னுயிர்க்குச்செய்யும் தொண்டே கடவுளுக்குச்செய்யும் தொண்டு" என்ற உயரிய நோக்கத்தை கடைபிடித்துத் "தமக்கெனவாழாது பிறர்க்கென வாழ்ந்துபொதுஜனஊழியத்தை நடத்துவோர்களே உண்மையான பெரியார்கள்." இந்த நூற்றாண்டில் தென்தேயத்தில் உண்டான அறிவின் பயனை எல்லாரும் அனுபவிக்கவும், பகுத்தறிவை உபயோகிக்கவும், வழிகாட்டியாக உதித்த தீரபுருஷர் நம்இராமசாமி பெரியார். சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக தீண்டாமை விலக்கு, சாதிசமய சடங்கு பூசல்களின் அழிவு, பால்யவிவாஹ மறுப்பு, விதவாவிவாஹம், கலப்பு மணம் ஆதரிப்பு முதலிய உண்மையான தர்மங்களுக்காக தனிமுயற்சிக்கும் பெரியார். இவரும் இவரைப்போன்றவர்களும் தர்மவீரர்கள்! புண்ணியமூர்த்திகள்! அவதாரபுருஷர்கள்! தியாக சொரூபிகள்! ஆழ்ந்த அறிவும் அகன்ற மதிநலனும் வாய்ந்த சான்றோர்களாகிய இவர்கள்தான் நமக்கு விடுதலை என்னும் மோக்ஷலோகவழிகாட்டிகள். ஆகவே இவர்கள் போன்றோர்களே நாடெங்கும் தோன்றித் துணையும்தொண்டும்புரியவேண்டும். உழைப்பு என்ற "தவமும்," அறிவு என்ற "தெய்வமும்," சகலரும் சமம் என்ற "வேதமும்," கல்விசாலை என்ற "கோயில்களும்," கைத்தொழில் சாலையென்ற "மடங்களும்," ஜனசமூக ஊழியமென்ற "யாகங்களும்" இருந்தால் நமக்கு மற்ற எந்தத் தவமும், தெய்வமும், வேதமும், கோயிலும், மடமும் யாகமும் அவசியமில்லை. தன் மதிப்பும், தன் நம்பிக்கையும், தாங்கள் யாருக்கும் எவர்க்கும் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லவென்ற உண்மை ஞானமுமிருந்தால் நமது அறிவு இந்த நிலைமையில் அடிமையாச்சுப்பட்டு, பழக்கவழக்கத்தால் சூழ்ந்து பிரயோஜனமற்ற ஆராய்ச்சிகளில் தலையிட்டுக் கொண்டிருக்குமா? பொதுஜனங்களின் நன்மைக்கான அடிப்படையான சீர்திருத்த சங்கங்களும், உண்மைக்காக உழைக்கும் "குடியரசு" "குமரன்" போன்ற பத்திரிகைகளும், வேஷத்திற்கின்றி, வயிற்றுப் பிழைப்புக்கின்றி உண்மைத்தொண்டுபுரியும் உத்தமர்களின் தியாகமும் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ச்சியடைந்துகொண்டு வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நம்நாடு முன்னேறி செழிப்படைந்து இன்பவாழ்வடையுமென்பதில் என்ன சந்தேகம்? எனவே இவைகள்தான் நம் நாட்டில் உண்மை மோட்ச வழிகாட்டிகள் என்று திரும்பவும் சொல்வது குற்றமாகுமா?

அடிமையில் மோகம் ஏன்?

மனிதனுக்கு மனிதன் அடிமை என்பதை உடைதெறிவதுதான் சுயமரியாதையின் முக்கிய தத்துவம். தீண்டாமை என்பது ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை நசுக்கி, அடிமையாக்கித் தாம் மட்டும் வாழ்வதற்காக ஏற்படுத்திக்கொண்ட பெரும்பித்தலாட்டம் ஆயிரக்கணக்கான வருஷங்களாக மதத்தின் பேராலும், சாஸ்திர புராணங்களின் பேராலும், ஒரு பெரிய சமூகம், அடிமைபடுத்தப்பட்டு வந்திருக்கிறது. தீண்டாமை ஒழியவேண்டும். ஜாதி வேற்றுமை அழியவேண்டும். இந்து மதம் இதற்கு இடம் கொடுக்கவில்லையாகில் மதத்தைத் தொலைக்கவேண்டியதுதான். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் இல்லாத ஒரு மதத்தில் ஒரு சமூகம் எத்தனைநாட்கள்தான் இருப்பது? சுயமரியாதை இயக்கம் தோன்றியபின் ஆதிதிராவிடர்களிடையே பெரு உணர்ச்சி உண்டாகிவிட்டது. அவர்களின் உணர்ச்சியில்லா வாழ்க்கை இனிமுற்றுப்பெற்றது. அவர்கள் இனி இழிவுக்கும், அடிமைக்கும் இடம் கொடார். ஆரியப்பார்ப்பனர்களின் நயவஞ்சகமும், உயர்ஜாதி சைவ, வைணவ ஆஷாடபூதிகளின் சூழ்ச்சிகளும் இனிபலிக்காது. தீண்டப்படாதார்! சண்டாளர்கள்! என்ற நாகரீகமற்ற எண்ணங்கள் ஒழிந்துவிடும். இனி நம் இயக்கம் முக்கியமாக ஆதிதிராவிடர்களுக்கு மும்முரமாக போர் செய்யவேண்டும். அர்த்த புஷ்டி நிறைந்தஅழகிய தீர்மானங்களாலும் அலங்காரப் பேச்சுகளாலும் இனி ஏமாற்ற முடியாது. வாயளவில் காந்தி கோஷ்டியார்போன்று, ஆதி திராவிடர்கள் முன்னேற்றத்தை பாராயணம் செய்யவிரும்பும் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் சுயமரியாதையில் இனி இடமில்லை. எனவே பொது ரஸ்தாக்களிலும், கோவில்களிலும், தெருக்களிலும் தாராளமாக ஆதி திராவிடர்கள் உரிமைகொண்டாட சத்தியாக்கிரஹப்போர் தொடங்கவேண்டும். அ

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க

லால்குடி தாலூகா மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டுத்தலைவர் திரு. S. இராமநாதன் எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமை பேருரை.

பிறகு திரு எஸ். இராமநாதன் அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடைபேஎழுந்து முகவுரைப் பிரசங்கம் செய்தார். அதாவது:—

சகோதரிகளே! சகோதரர்களே!! பெரியோர்களே!!! இன்று நீங்கள் எனக்குச் செய்த வரவேற்பு ஆடம்பரங்களுக்கும், வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்தின் புகழ் உரைகளுக்கும் நான் தகுதி யுடையவனல்லன். இவ்வியக்கத்தில் உங்களுக்கு இருக்கும் அளவிலாப் பற்றுதலாலும், ஆர்வத்தாலுமே இவ்வியக்கத்திற்கு ஒரு சிறு தொண்டாற்றும் என்னை நீங்கள் இவ்வளவு தூரம் கௌரவித்திருக்கின்றீர்கள் என்றுதான் நான் கருதி அதற்காக எனது பணிவான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கின்ற முறையில் இவ்வியக்கத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லக் கடுப்பட்டிருக்கின்றேன். அந்தப்படி நான் சொல்லுபவைகளைத் தாங்கள் கவனமாய்க் கேட்டு ஜாக்கிரதையாய் அலசிப்பார்த்து தங்களின் மேலான அபிப்பிராயத்திற்குச் சரி என்றுபட்டதை மாத்திரம் எடுத்துக் கொண்டு மற்றதைத் தள்ளிவிடுங்கள். நான் சொல்பவைகள் எனக்குத் தோன்றும் எனது சொந்த அபிப்பிராயங்களேயாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சுயமரியாதை இயக்கமென்றால் என்ன?

நாட்டில் வேறு பல இயக்கங்கள்வெகு செல்வாக்காகவும், வெகு வேகமாகவும் பேய்க்கொண்டிருக்கையில் அவைகளில் அநேகத்தைக் குற்றம் சொல்லிக்கொண்டும், அதன் தலைவர்களைக் கண்டித்துக் கொண்டும் இவ்வியக்கம் ஏன் இந்தமாதிரி நடை பெற்றுக் கொண்டு இருக்கவேண்டும்? உலகத்தில் மகாத்மா காந்தியையும், காங்கிரசையும் முன்பின் அறியாதவர்கள் கூட அதன் பெயரைக் கொண்டே போற்றுகின்றார்கள்.

ஆனால் நமது இயக்கமும், நமது பெரியாரும் ஏன் பலவித எதிர்ப்புக்கும், பழிச்சொல்லுக்கும் ஆளாக இருக்கவேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள். நமது இயக்கமானது காங்கிரசுக்கும், திரு. காந்திக்கும் எதிரான அபிப்பிராயமுடையதாக இருப்பதே இதற்குக் காரணம். எந்தவிதத்திலும் காங்கிரசுக்கு எதிராகவே நமது இயக்கம் நடைபெற்றுக வேண்டியிருக்கிறது. காங்கிரசின் கொள்கை ஒவ்வொன்றிலும் நம் இயக்கம் மாறுபட்டிருக்கின்றது என்பதைக் கேட்க அநேக மக்கள் சகியார்கள். ஆனபோதிலும், சிறிது காலமாக ஆங்காங்கு கூட்டப்பட்டு நடைபெற்றுவரும் மகாநாடுகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களினாலும், குடி அரசு பத்திரிகையில் அவ்வப்போது வெளிவரும் அபிப்பிராயங்களாலும், நமது கொள்கைகள்வெளியாகிக்கொண்டுதான்வரப்படுகின்றன.

முக்கியமாக மூன்று கொள்கைகளில் காங்கிரசினோடு நமது இயக்கம் மாறுபட்டிருக்கின்றது. அதாவது, 1. மதம், 2 ஜாதி, 3. தொழில்.

மதம்.

முதலாவதான மதம் விஷயத்தில் நமது நாட்டுப் பொதுத்தொண்டு இயக்கத் தலைவர்கள் எல்லோருமே மதப் பைத்தியங்கொண்டவர்கள். அதோடு மதசம்பந்தமான குற்றங்கள் அனைத்தையும் ஒப்புக்கொண்டவர்களுமாவார்கள். ஆனால் மதத்தைச் சீர்திருத்தவேண்டும் என்பதை மாத்திரம் ஒப்புக்கொள்ளுகின்றவர்கள் மகாத்மா காந்தியைப்பற்றியோ வென்றால் அவர் இந்துமதத்தைக் காப்பாற்றுவதற்கே இந்தியாவுக்கு சுயராஜியம் வேண்டுமென்பதோடு, அதற்காகவே உயிர் வாழ்வதாகவும் எண்ணிக்கொண்டிருப்பவர். அவர்களது சிஷியர்களிலும்பெரும்பாலோர் வெளியில் தைரியமாய்எடுத்துச் சொல்லாவிட்டாலும், மனதில் அதே அபிப்பிராயத்தையே யுடையவர்கள் சுயமரியாதை இயக்கக்காரர்களோ மதத்தைப்பற்றி சிறிதும் லட்சியம் செய்யாதவர்கள். அதுமாத்திரமல்லாமல் மதங்களை ஒழிக்கவேண்டும் என்கின்ற கொள்கைகளையும் உடையவர்கள். ஏனெனில் மதங்கள் உள்ளவரை மக்கள் ஒற்றுமைப்படவும், முன்னேற்றமடையவும் முடியாது என்று கருதுகிறார்கள். மதத்தின் பேரால் பல மக்களைச் சிலர் ஆட்சி புரிவதே உலகில் மதமாக இருந்து வருகின்றது.

உதாரணமாக கிறிஸ்துவமதமும், பாதிரிகளாலும், சர்ச்சுகளாலுந்தான் முதலாளிகளும், அரசர்களும் பாமரமக்கள்மீது திக்கமும், ஆட்சியும் செலுத்திவருவதாயிருக்கிறது.

இஸ்லாம் மார்க்கமும் சமீபகாலம் வரை மதத்தின் பேரால் (அதாவது கலிபாவாக) மக்களை ஆட்சி புரிந்து வந்தது என்பது மாத்திரமல்லாமல் அநேக இடங்களில் மதக்கொள்கைகளும் மௌல்விகள் ஆதிக்கங்களுமே பாமர மக்கள் மீது தாண்டவமாடுகின்றன. கமால்பாஷா வினாலேயேதான் சில முஸ்லீம் தேசங்கள் மதப்பிடிப்பைவிட்டு கொஞ்சங்கொஞ்சமாக முன்னேறி வருகின்றது.

நம்மக்களும் இவ்வளவு பெரிய சமூகமாயிருந்தும ஒரு சிறு கூட்டத்தாரின் ஆதிக்கத்திலும் ஆட்சியிலும சிக்குண்டு இருப்பதற்கு மதமும் அதற்குத் தர்மகர்த்தாக்களான பார்ப்பனரும்தான் காரணமாகும்.

இந்தியர் முற்போக்கடைய வேண்டுமானால் முதலில் இந்துமதம் ஒழிந்தாகவேண்டும். மற்ற நாட்டார்களும் தாங்கள் தாங்கள் முற்போக்கடைய வேண்டுமானால் தங்கள் தங்கள் நாட்டு மத ஆதிக்கம் ஒழிந்தாகவேண்டும் என்பதை அறிந்து அதையேகடைப்பிடித்து நடந்து வருகின்றார்கள். துருக்கியையும், ரஷியாவையும், சைனாவையும் பாருங்கள். அவை மதப் பைத்தியம் கொண்டிருந்த காலத்தில் எப்படி இருந்தன? சில தேசங்கள் இப்போது மதத்தை அலட்சியம் செய்து மதத்தை அடியோடு அழிக்க ஆரம்பித்ததின் பிறகு அவைகள் எப்படி இருக்கின்றன என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள்.

மதத்தை அழிக்கவோ அல்லது அதற்கு இருக்கும் பிரதானத்தை ஒழிக்கவோ முற்பட்டிருக்கா திருந்திருக்குமானால் வெள்ளை தேசங்களில் உள்ள தரித்திரத்தையே "கடவுள் செயலாய்"க் கொண்ட ஏழை மக்களும், அடிமைத்தன்மையையும் சிறைவாசத்தையும் கடவுள் செயல்களாய்க்கொண்டு கொடுமைப் படுத்தப்பட்ட பெண்சமூகமும், தாழ்த்தப்பட்டவர்களும் இன்று அந்நாடுகளில் அடைந்துள்ள நிலைமை—விடுதலையை அடைந்திருக்க முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இவ்வளவுக்கும் காரணம் என்ன? மத முச்சர்ச்சும் ஒழியவேண்டும் என்கின்ற கொள்கையாலல்லவா அந்நாடுகளைக் கண்டால் உலகமே திடுக்கிடுகின்றன. குடிகளை அடிமைப்படுத்தி ஆக்ஷிபுரியும் அரசாங்கங்கள் ஒலிகின்றன. ஏழைகளை வஞ்சித்துக் கொழுத்து வாழும் பணக்காரர்களும், சோம்பேரிகளும் நடுங்குகின்றனர்.

ஸ்பெயின் தேசமும் சென்ற மாதத்தில் உண்மையான விடுதலை அடைந்துவிட்டது என்பது உங்களுக்குத்தெரியும். அடிமைப்படுத்தி ஆக்ஷிபுரிந்த அரசர் வெளியாக்கப்பட்டு விட்டார் என்பதும் உங்களுக்குத்தெரியும். இவை எதனால் என்பது தெரியாதா? மதங்களை ஒழிக்கக் கங்கணம் கட்டி கோயில்களையும, மடங்களையும் இடித்தெறிவதனாலல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள். சைனாவும், மதத்தை வீசி எறிவதல்லாமல் சாமிகளையெல்லாம் உருக்கி பீரங்கிக் குண்டுகள் வார்க்க ஆரம்பித்து விட்டது என்பது நீங்கள் அறியாததா?

ஆகவே அக்கிரமங்கள் செய்யும் அரசாங்கங்களுக்கும், ஏழைகளை வஞ்சிக்கும் பணக்காரர்கள். முதலாளிகள், மிராசுதாரர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் மதந்தான் அனுகூலமாயிருந்து அவர்களைக் காப்பாற்றி வருகின்றதா இல்லையா, என்பதை யோசித்துப்பாருங்கள். ஆதலால் தான் சுயமரியாதை இயக்கம் மக்கள் உண்மையான விடுதலையும், சமத்துவமும் அடைவதற்கு மதங்கள் ஒழிந்தாகவேண்டும் என்கின்றது.

ஜாதி.

இரண்டாவதான ஜாதி என்கின்ற விஷயத்திலும், மற்ற இயக்கங்களுக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் அடிப்படையான வித்தியாசம் உண்டு. சாதாரணமாக எல்லா காங்கிரஸ் கூட்டங்களிலும் ஒரு சடங்கு தீர்மானம் செய்வதுண்டு. அதென்னவென்றால் "தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும்" என்பதாகும். எந்தமகாநாடுகளிலும் இதைப்பற்றி வாயளவு வாயில் பேசி எழுத்தில் எழுதி விடுவதுடன் அத்தீர்மானத்தின் தத்துவம் நின்றுவிடுமே யல்லாமல் காரியத்தில் சிறிதும் செய்ய முடியாது. இதுவரை செய்யப்பட்டும் இருக்காது.

இந்த விஷயம் நாடு பூராவுக்குமே தெரியும். ஆனாலும் அதற்கு ஏதோ வேறு காரணங்கள் அல்லது முன் பின்னாகச் செய்யும் வரிசை கிரமம் என்கின்ற தடைகள் இருக்கலாம் என்றே அநேக மக்கள் கருதிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் காங்கிரசானது தீண்டாமை விலக்கைப்பற்றி செய்கையில் யாதொரு காரியமும் செய்யாமல் இருப்பதற்கு இவையல்ல முக்கிய காரணம் என்றே நான் சொல்லுவேன். மற்றென்ன என்றால் தீண்டாமையானது ஜாதி வித்தியாசத்தின் ஆணிவேராயும், ஜாதி வித்தியாசம் என்பது இந்து மதத்தின் ஜீவநாடியாயும், வருணாச்சிரம தர்மத்தை காக்கவேண்டிய கீதையின் முக்கிய உபதேசமாயும் இருப்பதே தீண்டாமையை ஒழிக்ககாந்தியை ஏகநாயகராய் கொண்ட காங்கிரசுக்கு முடியாதகாரியமாய் இருந்து வருகின்றது.

ஆகையால் கீதையும் மதமும் எதுவரை மதிக்கப்படுகின்றதோ-முக்கியஸ்தானம் கொடுக்கப்படுகின்றதோ அதுவரை தீண்டாமையோ,ஜாதி வித்தியாசமோ சிறிதும் அசைக்கப்பட முடியாத உச்சநிலையில் இருந்தேதீரும். தீண்டாமை என்பது பறையன், சக்கிலி, பள்ளன் என்கின்ற மக்களை மாத்திரம் பொருத்ததென்று கருதிவிடாதீர்கள். க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என்று சொல்லப்பட்டும் அதனுள் சேர்க்கப்பட்டும் இருக்கின்ற நம் எல்லோரையுமே பொருத்தது என்பதை நினைவில் வையுங்கள். ஆதலால் இந்த வருணாச்சிரமம் என்பதும்கீதை மனுதர்ம சாஸ்திரம் மதம் என்பவைகளும் தீண்டாமையையும் ஜாதி வித்தியாசத்தையும் ஒழிக்கும் பிரசாரத்திற்கு சிறிதும் இடம் கொடுக்க முடியாது என்பதை மனதிலிருத்துங்கள்.

(தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

காந்தியின் ராம ராஜ்யம்.

(பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்)

மே மீ 16ந்தேதி மதுரையில் சிவகெங்கை வக்கீல் திரு எஸ் ராமச்சந்திரன் பி.ஏ.பி.எல். அவர்களின் தலைமையில் நடைபெற்ற பார்ப்பனரல்லாதாரின் வாலிப சங்க ஆண்டு விழாவில் மதுரை பாரிஸ்டரும், ஒத்துழையாமையின்போது பல தடவைகளில் சிறை சென்றவரும், திரு. மோதிலால் நேரு அவர்களால் நடத்தப்பட்டு வந்த 'இண்டிப்பெண்டண்ட்' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்தவரும் திரு காந்தி அவர்கள் சிறையிலிருக்கும் பொழுது அவரால் நடத்தப்பட்டு வந்த "யங் இந்தியா" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராகவிருந்தவருமான உயர் திரு. ஜார்ஜ் ஜோசப் எம். ஏ. *Bar-at-Law* அவர்கள் நிகழ்த்திய தான "காந்தியின் ராமராஜியம்" என்பதைப்பற்றிய சொற்பொழிவு:—

சகோதரர்களே! திரு காந்தியவர்கள் இந்திய ராஜியபாரமானது வரப்போகும் சுயராஜியத்தில் எப்படி இருக்குமென்று பொதுமக்களுக்கு விளக்கும் முறையில் தான்கோரும் சுயராஜியமானது ராமராஜியம் என்பதாகச்சொல்லிக்கொண்டு வருகிறார். ஆகலால் அந்த "ராமராஜியம்" என்பது மிகவும் முக்கியமாய்கவனிக்கப்பட வேண்டிய விஷயமென்பதாக நான் கருதுவதோடு இன்றைய நிலையில் பொதுமக்களும் அதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமெனவும், கருதுகிறேன்.

ஆனால் அந்த விஷயமானது எப்படி முக்கியமானது, எந்தவிதத்தில் முக்கியமானது என்று உங்களுக்குத் தெளிவுபடுத்துவது, எனக்குச்சற்று கஷ்டமான வேலையாக காணப்படுகின்றது. ஏனெனில் ராமராஜியமென்பதாக திரு காந்தியவர்களால் சொல்லப்படுவதிலிருந்து நமதுநாட்டு லட்சக்கணக்கான மக்களுக்கு ஏதோ ஒரு பெரிய அனுகூலமான ராஜியபாரம் வரப்போகிறதாக நினைத்துக் கொள்ளுவதன் மூலம் தங்களை அறியாமல் ஒரு ஆவேசமேற்பட்டு ஆனந்தபரவசத்தில் மூழ்கியிருக்கிறார்கள் என்பதோடு சமூகத்துறையிலும், பொருளாதாரத்துறையிலும், அரசியல் தர்மங்களிலும், ஆட்சி முறையிலும், நமது நாட்டுபபண்டைய பெருமைகளைப் புதுப்பிக்கப்போகின்றோம் என்கின்ற ஆசைகளும்; மக்கள் மனதில் முக்கியமாய்ப் புகுந்துகொண்டிருக்கிறது.

அன்றியும் ராமராஜியமென்பது பெரும் சக்தி வாய்ந்த ராஜியபாரமென்றும், அதற்கு நிகராகவோ எதிராகவோ, உலகத்தில் வேறு ராஜியபாரமிருக்க முடியாதென்றும், கருதப்பட்டு வருகின்றதாகையினால் பொது மக்களுக்கு இந்தவிதமான எண்ணமுள்ள ராமராஜியத்தைப்பற்றி நான் விளக்குவதும், அதில் மறைந்துள்ளதும் சந்தேகபடத்தக்கதுமான விஷயங்களையும், அதனால் ஏற்படும் பலன்களையும், தாராளமாய் எடுத்துச்சொல்லுவதும், சற்று கடினமான காரியமாயிருக்கிறது.

பொது மக்களிடத்தில் ஒருவிதமான மதிப்பும், கீர்த்தியும் யுடையவரான திரு காந்தியவர்களால் சொல்லப்படுவதன் மூலம் ராமராஜியம் என்னும் வார்த்தைக்கு எவ்வளவுதான் இச்சமயத்தில் செல்வாக்கும், விளம்பரமுமிருந்தாலும் இந்த ராமராஜியமானது நமக்கு சரிபற்றாதும், குற்றமுடையதும், அபாயகரமானதும்; தற்காலத்துக்குச் சிறிதும் தகுதியற்றதுமாயிருப்பதோடு அதற்குப் புத்துயிர் அளித்து அதைக் கோறுவதென்பது குருட்டுத்தனமாகப்பின்னேபோகக்கூடியதும், கெடுதிகளை உண்டாக்கக்கூடியதுமான தற்கொலைமுயற்சியேயாகும் என்பதாகக்கருதுகிறேன்.

ராமராஜியத்தின் யோக்கியதையைப்பற்றி ஆராய்ச்சிசெய்து அதன் அபாயத்தை எடுத்து வெளியிடவேண்டிக்கும் இந்த வேலையானது இன்றைய நிலையில் பெரும்பான்மை மக்களால் வெறுக்கக்கூடியதும், குற்றம் சொல்லக்கூடியதும், தொந்திரவுகளை உண்டாக்கக்கூடியதுமான காரியமென்பது எனக்குத்தெரியும்.

ஆகவே இதைப்பற்றிய அதாவது ராமராஜியம் என்பதைப்பற்றிய ஆராய்ச்சிவேலையும் கண்டிக்கும் வேலையும், கஷ்டமானதென்று நான் உணர்ந்தாலும், இரண்டு காரணங்களால் அதைச்செய்துதீரவேண்டியவனாக இருக்கிறேன்.

முதலாவது காரணம், ராமராஜியமென்னும் தத்துவம் நாட்டின் ஆக்கிக்கு செல்லாததும், அனுபவத்திற்கு முடியாததுமான ஒரு பைத்தியக்காரத்தனமான யோசனை என்பதாக எனக்குகாணப்படுவதாகும்.

இரண்டாவது காரணம், அது உலக சரித்திரத்திற்கே நேர்விரோதமானது என்பதாகும்.

ஆகவே திரு காந்தியால் சொல்லப்படும் ராமராஜியமென்பது என்ன என்பதாக முதலில் கவனிப்போம் திரு காந்தியவர்களே ராமராஜியமென்ற பதத்திற்கு சிலசமயத்தில் "தர்மராஜிய" மென்றும் சில சமயத்தில் "சுயராஜிய"மென்றும் மற்றும்சிலசமயத்தில் "பூரண சுயராஜிய"மென்றும் சொல்லிவருகிறார். ஆனால் அவைஅனைத்திற்கும் நியாயமாக என்ன தாத்பரியம் கொள்ளலாம் என்றால் "அஹிம்சையோடு கூடியதும் சத்தியத்தைக் கொண்டதுமான காந்தி ராஜியமாகும்" என்றுதான் சொல்லலாம்.

ஆனால் அதன் தத்துவம் என்னவென்றால் நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும் இயந்திரங்களினுடைய உதவியே சிறிதுமில்லாமல் பழையகால கொள்கைப்படியே ஆண்கள் உழுவதின் மூலமும், பெண்கள் நூல்நூற்பதின் மூலமும் வேலை செய்து தங்களைத்தாங்களே நம்பிக்கொண்டிருக்க வேண்டியதுடன் எங்கும் சுதேசியமே தாண்டவமாடவேண்டும்' என்னும்படியான மாதிரியில் ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய சாமான்களை தானே உற்பத்திசெய்து கொண்டும், அவைகளை உற்பத்தி செய்யவும், ஆங்காங்குள்ள அரைகுறையான தொழிலாளிகளின் வேலைபளவைக்கொண்டே திருப்தி யடைந்து கொண்டும் இருக்கவேண்டியதோடு ஒவ்வொரு மாகாணமுங்கூட இந்த முறையிலேயே கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைந்து கிராமங்களுக்கும் மாகாணங்களுக்கும் சிறிதும் சம்பந்தமில்லாமல் இருக்கவேண்டியதுடன் இந்தியா தேசம் உலகிலுள்ள மற்றநாடுகளுடன் எவ்வித சம்பந்தமுமில்லாமல் பிரிக்கப்பட்டும் மற்ற தேசங்களின் நட்புரிமை இல்லாமலும் பொருளாதார விருத்தியில்லாமலும் இருக்கும் என்பதாக நன்றாய் புலப்படசெய்கின்றது.

இந்த நிலை ஏற்படுவது என்பதானது இந்தியாவுக்கு இது சமயம் பலவிதமான கெடுதிகளுக்கு ஆதாரமாயிருக்கும் ஐரோப்பா கண்டத்தின் சம்பந்தமானது ஏற்படுவதற்குமுன் இந்தியா தேசம் எந்த நிலைமையில் இருந்ததோ அந்த நிலைமையிலும், சைனாவில் அபினி இறக்குமதியை தடுக்கும் சண்டை ஏற்படுவதற்குமுன் சைனா தேசம் எந்தநிலைமையில் இருந்ததோ அந்த நிலைமையிலும் ருஷிய யுத்தவீரர் கமோடர் பெரி என்பவர் ஜப்பான் தேசத்து கடற்கரைகளை அடுத்த சண்டைக் கப்பல்களிலிருந்து குண்டுகளைப் பொழிவதற்குமுன் எந்த நிலைமையில் ஜப்பான தேசம் இருந்ததோ அந்த நிலைமையிலுந் தான் நமது இந்தியதேசம் (ராமராஜியத்தில்) இருக்கக்கூடும்.

இதுமாத்திரமல்லாமல் அயல் நாட்டாருடன் வியாபார சம்பந்தமென்பதே சிறிதும் இந்தியாவில் இருக்க முடியாது என்பதுடன் வியாபாரப் பெருக்காலும் கைத்தொழில் முன்னேற்றத்தாலும் நமது நாட்டுக்கு செல்வ பெருக்கு என்பது சிறிதும் ஏற்படஇடமுமிருக்காது.

இயந்திரங்களின் தன்மையையும் பயனையும் தேவைப்படுத்துவதனாலும் அஹிம்சை என்பதே இந்திய மக்களின் முக்கியக் கொள்கையாக இருக்கப்போவதினாலும், இந்திய யுத்தசேனைகளுக்கு (எல்லாவித இம்சைகளுக்கும் பரிகாரமாக அஹிம்சை என்னும் ஆயுதத்தையே கொடுக்கப்போவதாலும்) அன்னியர்களால் ஏற்படக்கூடிய யுத்தங்களுக்கும் குழப்பங்களுக்கும் தற்கால யுத்த முறைகளுக்கு ஏற்ற முஸ்திப்புகளுடன் இருந்து கொண்டு இந்தியாவைக் காப்பாற்ற முடியாது. மேலும் மக்கள் எவ்வாறு மத விஷயங்களில் பிடிவாதமும் வெறியும் கொண்டு இருக்கின்றார்களோ அதுபோல் தற்கால விஞ்ஞான சாஸ்திரத்திலும் (சைன்சிலும்) இயந்திரங்களிலும் வெறியும் பற்றும் கவலையும் கொண்டு இருக்கின்றவர்கள்தான் தற்கால யுத்தமுறை சம்பந்தமான ஆயுதங்களின் அவசியத்தையும் பிரயோஜனத்தையும் அறிந்து அவற்றை சரியான முறையில் திருத்தியும். ஏற்படுத்தியும் நாட்டின் பாதுகாப்புக்கு பயன் படுத்த முடியும்.

அடுத்தபடியாக தற்காலம் நமது நாட்டில் இருந்துவரும் ஆஸ்பத்திரிகளும்கூட ராமராஜியம் என்பதில் இல்லாமல் போய்விடும். ஏனெனில் (புதிய ஆராய்ச்சியும் இயந்திரங்களும் அலட்சியப்படுத்தப்படும் என்பதோடு) மக்களும் பிராணிகளும் வியாதிகளினால் அவஸ்தைப்படுவதைக் கண்டு மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து அவ்வாராய்ச்சியின் மூலந்தான் மருந்துகளும் ரணசிகிச்சைமுறைகளும் கண்டு பிடிக்க நேர்ந்தது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மேலும் ராமராஜியத்தில் நியாயவாதிகளும் நியாயஸ்தலங்களும்கூட இல்லாமல் போய்விடும். ஏனெனில் தற்காலம் நியாயம் வழங்கும் முறையானது அன்னிய நாட்டு முறையேயாகும் என்பதுடன் நமதுநியாயவாதிகளும் (வக்கீல்களும்) சமூகத்திற்கு ஒரு தொத்து நோய் மாதிரி இருக்கிறார்கள் என்று கருதப்படுகின்றார்கள். ஆகலால் ராமராஜியத்தின் தத்துவம் நியாயங்களையும் விவகாரங்களையும் கிராமங்களிலேயே ஆலமரத்தடியில் கூடும் பஞ்சாயத்தின் மூலம் தான் தீர்த்துக்கொள்ளவேண்டிவரும்.

அரசாங்கத்தைப்பொறுத்த வரையிலும் அதன் நிர்வாகமானது ஏழைகளையும் தாழ்த்தப்பட்டவர்களையும் அடிக்கடி கவனித்து ஆதரிக்கக்கூடியவர்களாலும் நியாயமாக நடுநிலையில் இருந்து நடந்து கொள்ளுபவர்களாலும் அறிவுள்ள மக்களாலுந்தான் நிர்வகிக்கப்படும் என்பதோடு இவர்களுக்கு மேலாக எல்லோரையும் விட அறிவாளியும் நியாயவானுமான ஒருவர் நியமிக்கப்படுவார் என்பதுமாகும்.

தற்கால ஐரோப்பிய நாகரீகத்தைப்போன்ற ஆடம்பரங்களும் நாகரீக கொள்கைகளும் ராமராஜியத்தில் அனுமதிக்கபபடமாட்டாது. ஆனால் அதற்கு மாருக அளவுக்கு மீறின சிக்கனமுறைகளை கையாடி மிகவும் சாதாரண வாழ்க்கையையே கைகொண்டு வாழவேண்டியதாகும்.

மதவிஷயங்களிலுங்கூட சுதேசியம் என்பது ராமராஜியத்தில் தாண்டவமாடியே தீரும்.

அதாவது மக்கள் எந்த மதத்தின் பேரால் பிறக்கின்றார்களோ அந்த மதக்கொள்கைகளையே தான் (வர்ணாச்சிரமமுட்பட) முடிவுவரை பின்பற்றித்தீரவேண்டியதாகும்.

மக்களின் எதிர்கால நிலைமை.

உயர்திரு சிக்ஸ்மெண்ட் பூருட் என்பவர் ஒரு உலகம்போற்றும் தத்துவ ஞானியாவார். அவரால் அநேகமான தத்துவ ஞான புஸ்தகங்கள் எழுதப்பட்டு உலக அறிஞர்களால் போற்றப்பட்டும் இருக்கின்றன. அப்படிப்பட்ட பெரியார், ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்ததாவது:—

"நான் அநேக விஷயங்களைப் பற்றி யோசித்து யோசித்து பல புத்தகங்களையும் எழுதியிருக்கிறேன். பல அபிப்பிராயங்களையும்வெளியிட்டிருக்கின்றேன். இவைகளில் ஒரே ஒருவிஷயத்தைத்தவிர மற்ற எல்லா விஷயங்களிலும நான் ஒரு சமயம் தவறி இருந்தாலும் இருக்கக்கூடும. அவைகள் எல்லாம் சரியாகவே இருக்கும் என்று நான் நினைத்துக்கொள்ளுவதுமில்லை. அவைகளைப் பற்றி உலகமக்கள் எந்தவிதமான அபிப்பிராயம் கொண்டாலும் நான் கவலைப்படவோ, எதிர்க்கவோ போவதுமில்லை. ஆனால்ஒருவிஷயத்தில் மாத்திரம நான உறுதியாய் இருக்கின்றேன். அதை மாத்திரம் திருத்த யாரையும அனுமதிக்க மாட்டேன். அதாவது 'வஞ்சனையின் எதிர்காலம்'' என்னும் புத்தகத்தில் நான் விளக்கி இருக்கும் முக்கிய விஷயமாகும். அது என்னவென்றால், "மனிதசமூகம் மதத்தை ஒழித்தாகவேண்டும்', "மதங்களில் இருந்து மனிதனை விடுதலைபெறவேண்டும்' என்பதேயாகும். ஏனெனில் மதமானது பாமரமக்களை ஆட்டுவிப்பதற்கு ஒரு வலிமை பொருந்திய கருவியாக இருக்கின்றது. அதற்கு அதிகமான சக்தி ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் அது கெடுதியை உண்டுபண்ணத்தக்க விசையே (சக்தியே) தவிர நன்மையானதல்ல. வீரர்களை வணங்குவது என்பதாகிய உருவ வழிபாடும் மிகவும் கெடுதியானது-இது மக்களுக்கு ஒரு வியாதி போன்றது. இதைக்கட்டாயம்ஒழிக்க வேண்டும் என்பதாகும். இந்த அபிப்பிராயங்கள் என்னுடைய உறுதியான அபிப்பிராயமாகும். இதை திருத்த மாத்திரம் நான் எவரையும் அனுமதிக்கமாட்டேன். அது என்டைய உறுதியான அபிப்பிராயம்'' என்று சொல்லியிருக்கிறார். "இந்து''

உதாரணமாக ஒரு இந்துவானவன் இஸ்லாம் மார்க்கததின தன்மையைப் பார்த்து திருப்தி யடைந்து தனது நடை முறையில் அதை பற்றுக்கோடாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டு தன்னை ஒரு இஸ்லாம் என்பதாக கூறிக்கொள்ளவேண்டுமென்று கருதினால் அது கண்டிப்பாய் முடியாத காரியமாகிவிடும். இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்றால் மதவிஷயத்தில் 'ஒவ்வொரு மதமும் மற்றமதங்களைப் போன்ற நன்மையானதேயாகும்' என்ற அபிப்பிராயமும் கடவுள் விஷயத்தில் 'ஒவ்வொரு மதகடவுளும மற்ற மத கடவுளுடைய தன்மைக்கு கொஞ்சமும இளைததல்ல' என்கின்ற அபிப்பிராயமுமேயாகும். ஆகையினால் அரசாங்கமும் சமுதாயமும் மத கலப்பையும் மத மாற்றத்தையும் சிறிதும அனுமதிக்க முடியாது என்பதோடு இதர மதபோதகஸ்தர்களால் நம் நாட்டில் நடைபெற்று வரும் வைத்தியசாலைகளும், கலாசாலைகளும் பள்ளிக்கூடங்களும் தொழில் சாலைகளும ஆகியமதஸ்தாபனங்களும்கூட அனுமதிக்கப்படாததாகிவிடும்.

(தொடரும்)

தினசரி தமிழ் பத்திரிகை.

சுயமரியாதைத்தலைவருக்கு வேண்டுகோள்.

தலைவர்களே!

நமது சுயமரியாதை இயக்கம் காட்டுத்தீபோல் பறவி பொது ஜனங்களைக்கவர்ந்து கொண்டுவருகிறது. தற்காலத்தில் காங்கிரஸ் என்ற பெயரைச் சொல்லி பார்ப்பனரும், அவர்களது அடிகளான பார்ப்பனரல்லாதாரும், நமது இயக்கத்திற்கு விரோதமாகப்பொய்பிரசார மூலமாகவும், தினசரிப் பத்திரிகை மூலமாகவும், கூலிகளின்மூலமாகவும், எதிர்பிரசாரம் செய்கிறார்கள்.

இன்று தமிழ் நாட்டில்உலவும் தினசரிப் பத்திரிகைகள் எல்லாம் நமது இயக்கத்திற்கு விரோதமானவைகளாகும் என்று யாவரும் அறிந்தோம். ஆதலால் அவைகள் மூலம் நமது இயக்கத்தைப் பறப்பவும், நமது மக்கள் நமது இயக்கச் செய்திகளை உள்ளது உள்ளபடி உண்மையை உணரவும் முடியாமல்நடப்பிற்கு மாறானவைகளையே அப்பத்திரிகைகளில் படிக்க நேரிடுகிறது. ஆதலால் நமது இயக்கத்திற்கென தனிதினசரிப் பத்திரிகை ஒன்று இன்றியமையாததாகும்.

எனவே தினசரிப்பத்திரிகை ஒன்று "சுயமரியாதை'' என்ற பெயரால், ஒரு லிமிடேட் கம்பெனியின் மூலம் பங்கு 1க்குரூ100 வீதம் 200பங்குகள் சேர்த்து ஷேர்தாரர்களை ஆரம்பிப்பது சிறந்தது என்று என்னுகிறோம். தாங்கள் இதுவிஷயத்தில் பாராமுகமாயில்லாமல் சற்று கவனம் செலுத்தினால் இது கூடிய சீக்கிரம் கைகூடுமாதலால் தயவு செய்து இவ்வேண்டுகோளை குடிஅரசில் பிரசுரித்து தாங்களும் ஓர் வேண்டுகோள் உடனே வெளியிட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

N. S. M. செல்வக்கணபதி.
R. ரெங்கசாமி.
S. ஆரோக்கியசாமி.
M. K. பெருமாள்.
முதலியவர்.

அகப்படியர் மகாநாடு.

மூன்றாவது அகப்படியர் மகாநாடு ஜூன்-மீ 28, 29-ந் தேதி சனி, ஞாயிறுகளில் பட்டுக்கோட்டை உயர்திரு. நாடிமுத்து பிள்ளை எம். எல். சி. அவர்களின் தலைமையில் மதுரையில் நடைபெறும். சிவகெங்கை, உயர்திரு. எம். கற்பூரசுந்தர பாண்டியன் பி. ஏ. அவர்கள் உபசரணைத்தலைவராவர்.

அதே தேதிகளில் அதே இடத்தில் இளைஞர் மகாநாடு சிவகெங்கை எஸ். இராமச்சந்திரன் பி.ஏ. பி. எல். அவர்களின் தலைமையில் நடைபெறும.

V. சீதாராமன் சேர்வை பி.ஏ. அவர்கள் இளைஞர் மகாநாட்டின் உபசரணைத்தலைவராவர்.

இம்மகாநாடுகளுடன் பெண்கள் மகாநாடும் நடத்த யோசனை செய்து வரப்படுகிறது.

K. R. நடராஜன்,
ராமசாமி சேர்வை,
விளம்பர அதிகாரிகள்.

ஜனாப் எம். ஜமால் முகம்மது.

தென்னிந்தியா பிரபல வியாபாரி, ஜனாப். எம். ஜமால் முகம்மது சாயபு அவர்கள் தென்னிந்திய வர்த்தக சங்கத்திற்கு மறுபடியும் தலைவராகத் தேர்ந்தெடுக்கபபட்டார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் சுயமரியாதைத் திருமணம்.

மதுரை பிராமணரல்லாதாரின் வாலிபர்கள் சங்கத்தினரால் 10-5-31ல் திருமதி தாயம்மாளுக்கும் திரு சுப்பிரமணியத்துக்கும் பிராமணியத்தைஅறவேநீக்கிசுயமரியாதை சீர்திருத்த திருமணம், குவாப்பரேட்டிவ்சொசைட்டி ரிஜிஸ்தார் உயர் திரு சி. டி. நாயகம் அவர்களாலும், திருமதி சி. டி. நாயகம்அம்மாள் அவர்களாலும்நடத்திவைக்கப்பட்டது. தம்பதிகளிருவரும் இம்மணத்திற்குமுழுமனதுடன் இசைந்ததுடனின்றி, தங்களுடைய தாய்பாஷையிலேயே ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையும், சம்மதத்தையும் சபையின்முன்மற்றவருக்கெடுத்துரைத்து, தங்களுடைய மாலைகளையும் அவ்வாறே மாற்றிக் கொண்டார்கள். இவ்விவாகமானது வெகு சிக்கனமாக நடந்தேறியதுடன் சம்பந்தி போஜனம்ஒன்றும்நடந்தேறியதைக்குறிப்பிடத்தக்கதென ஒருநிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதை திருமணம்.

3-வது சுயமரியாதை மகாநாட்டின் விளம்பர அதிகாரியாகிய விருதுநகர் திரு உத்தண்டன் அவர்களுக்கும் திரு ஓ.டி,எஸ். சங்கரலிங்கநாடார் குமாரத்தி திருமதி ராஜம்மாளுக்கும் 7-6-31 தேதி விருதுநகரில் திருமணம் நடைபெறும்.

சீர்திருத்த திருமணங்கள்.

சென்னைக் கொன்னூர் மேலையம்மதி மங்கள விலாசத்தில், 24-5-31 ந்தேதி காலை 9மணிக்கு ஆதிதிராவிட சபைத்தலைவர் திரு. அ. முருகேசம் அவர்கள்தலைமையில்திரு வி. வேலாயுதம் குமாரன் திரு. வி. வி. ஆறுமுகமூர்த்திக்கும், திருவள்ளூர் திரு. சு. குப்புசாமி குமாரத்தி பாலாம்பிகைக்கும், யாதொரு வைதீகச் சடங்குமின்றி, சீர்திருத்த முறையில் திருமணம் நடந்தேறியது. அதுகாலை ஆனரெரி மாஜிஸ்ட்றேட்டும் சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை அங்கத்தினருமாகிய ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத்தாயாரம்மாள் எம். எல். சி. தலைமையில் ஆதிதிராவிட பஞ்சாயத்து தலைவர் உயர் திரு. ஆர். டி. அய்யாக்கண்ணு, செம்பியம் யூனியன் போர்டு மெம்பர் பார்த்தசாரதி பு. மு. வேலாயுதபாணி ஆகியவர்களால் சுயமரியாதையின் கொள்கைகளைப்பற்றி சிறந்த உபன்னியாசங்களும் நிகழ்பெற்றன. இரவு முருகேசர்பாகவதரால் மதுவிலக்கு நாடகம் நடத்தப்பட்டது.

-மாதபுரம் முனுசாமிக்கும், கோவிந்தராஜுலு குமாரத்தி பாஞ்சாலை அம்மாளுக்கும், 28-5-31ல் திரு.ஆர். டி. அய்யாக்கண்ணு தலைமையில் சீர்திருத்த திருமணம் நடந்தேறியது. தலைவர் அவர்கள் சுயமரியாதையின் தத்துவங்களைப்பற்றியும், அதனால் நம் நாட்டிற்கு விளைந்துவரும் நன்மைகளைப் பற்றியும், சுமார் 1-30மணிநேரம் விரிவுரை நிகழ்த்திய பின் வி. வி. முருகேசமவர்களால் முடிவுரை கூறியபின், 'சுயமரியாதைக்கு ஜே!'' திரு.ராமசாமிப்பெரியாருக்ஜே! என்ற கோஷத்துடன் திருமணம் நிறைவேறியது. அநேக பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

குடி அரசு

[illegible] 1931௵ ஜுன்௴ 7உ.

சுயமரியாதை இயக்கமும் காங்கிரசும்.

—:0:—

சுயமரியாதை இயக்கமானது இப்போதுநடைமுறையில்இருக்கும் காங்கிரசுக்கொள்கைகளைக்கொண்ட தேசியத்திற்கும் திரு. காந்தியவர்களின் தத்துவமாகிய காந்தியத்திற்கும் நேர் மாற்றமானது என்பதை நாம் மறைக்க முயலவில்லை.

எப்படியெனில் இன்றைய காங்கிரசு திட்டங்கள் காகிதத்தில் என்ன இருந்தபோதிலும் தேசியத்தின் பேரால் நடைமுறை திட்டங்கள் என்பவைகளாக,

1. கதர்.
2. ஹிந்தி.
3. கள்ளுக்கடை ஜவுளிக்கடை மறியல் என்பவைகளேயாகும்.

மேற்கண்ட இந்த மூன்று திட்டங்களிலும் சுயமரியாதை இயக்கம் மாறுபட்டேயிருக்கின்றது என்கின்ற விபரம் ஏற்கனவே குடி அரசு வாசகர்கள்உணர்ந்ததுவேயாகும்.

கதர் விஷயத்தில் 1928ம் வருஷத்திற்கு முன்னிருந்தே அதாவது திரு காந்தியவர்கள் தென்னாட்டிற்கு கதர் பண்டு வசூலுக்கு வந்த காலத்திலேயே கதரின் தத்துவத்தைக் கண்டித்து வந்திருக்கின்றோம். அதையேகுடி அரசிலும் திராவிடனிலும் பல தடவை எழுதி வந்திருப்பதோடு அனேக மேடைகளிலும் கதர் கொள்கையைக் கண்டித்துப்பேசியும் வந்திருக்கிறோம்.

ஆதலால் கதரைப்பற்றிய நமது அபிப்பிராயம் என்பது இப்போது புதிதாக ஒன்றும் ஏற்பட்டதல்ல. இதை அனுசரித்தேதான் இவ்வாரம் லால்[illegible]யில் நடந்த 3வது சுயமரியா[illegible] மகாநாட்டில் கதர் கொள்கையைக் கண்டித்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது.

அதாவது,

'2 (அ) தற்காலம் இ[illegible]த்தில் காங்கிரஸ் மகா சபையின் ஆதரவில் மகாத்மா காந்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்துவரும் கதர்ப் பிரசாரமும் கதர் உற்பத்தி, விற்பனை வேலைகளும் இந்திய நாகரீக அபிவிர்த்தியை தடைப்படுத்துகிறபடியாலும்,

(ஆ) மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அவரவர் தேவைக்கு அவரவர்களே தனித்து நின்று உழைத்து மற்றவர் கூட்டுழைப்பை எதிர்பாராதிருக்கவேண்டுமென்றும் பிற்போக்கான கொள்கை கதர் வேலைக்கு அடிப்படையாயிருந்து (மற்ற தேசத்து மக்கள் கூட்டுழைப்பு மூலம் தொழில்களை அபிவிர்த்தி செய்து முன்னேறும் இக்காலத்தில்) நமது நாட்டு மக்களைத்தனித்து வாழ்க்கையின் மூலம் மிருகப்பிராயத்தை அடையும்படி செய்வதாலும்,

(இ) இயந்திரசாலைகளைப் பகைத்து தொழில்விவசாயத்துறைகளில் இயந்திர[illegible] மனிதப்பிரயாசையை அதிகப்படுத்தும் முறைகளைக் கையாளுவதின் மூலம் கதர் வேலை மனித வாழ்க்கையில் [illegible], அறிவுவளர்ச்சிக்குமான நோக்கத்தைக் குறைப்பதாலும்

(ஈ) இக்[illegible] கதர் இயக்கத்தைக் கண்டிப்பதோடு இந்திய மில் துணிகளை உடுத்தவும் இயந்திரங்களை வளர்க்கவும், கூட்டுத்தொழில் முறை கொள்கையாளவும் மக்களிடை தீவிர பிரசாரஞ்செய்ய தீர்மானிக்கிறது'

என்பதாகும். ஏனெனில்

காங்கிரசின் கதர் கொள்கையானது இந்திய பொருளாதாரம், கைத்தொழில், வியாபாரம்ஆகிய மூன்றையும் பற்றியதாகஇருக்கின்றதென்பதோடு ஒவ்வொரு மனிதனும் தனக்கு வேண்டியதை அவனவனே உற்பத்திசெய்துகொள்ளவேண்டும் என்னும் தத்துவத்திலும் இந்தக் கதரானது இந்திய நாகரீகத்தையும் பண்டையப் பெருமையையும்பற்றியதாகவும் கருதப்பட்டிருக்கின்றது.

ஆகையால்இந்தத்தன்மையிலுள்ள கதரின்ஒவ்வொரு நிலையையும்கவனித்துப் பார்த்தோமானால் இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கும் நாகரீக வளர்ச்சிக்கும் இந்தவித அபிப்பிராயங்கள் கொண்ட கதர் தத்துவம் எவ்வளவு தூரம் கெடுதியை உண்டுபண்ணத் தக்கதாயிருக்கின்றது என்பது விளங்கும்.

முதலாவதாக பொருளாதாரத்துறையை எடுத்துக்கொண்டு கதர் எந்த விதத்தில் அதற்குப் பயன் அளிக்கக்கூடியதாயிருக்கின்றது என்பதை யோசித்துப் பார்ப்போம். பஞ்சு விலை எவ்வளவுக்கெவ்வளவு குறைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு விவசாய மக்களுக்கு கஷ்டம் ஒருபுறமிருந்தாலும் பஞ்சு விலையைப் பற்றிய அதாவது மூலப்பொருளைப்பற்றிய லட்சியமே இல்லாமல்கதரின்உற்பத்தி,நூற்பு,நெசவு ஆகியவற்றின் செலவுகளே அதாவது அசல் விலையே மிகவும் கூடுதலாகவே அடங்கும் படியாக ஆவதோடு அதை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு நிலையும் கஷ்டமானதும் முன்னேற்றத்திற்கு உதவாததுமாகவேஇருக்கின்றது.

அதாவது யார்எவ்வளவுபாடுபட்டாலும் கதர் நூல் விஷயத்திலும் நெசவு விஷயத்திலும் துணிரகம் விஷயத்திலும் இன்று காணப்படும் தன்மையிலிருந்து இனி சாதாரணத்தில் எவ்வித மாற்றத்தையாவது செய்துவிடக்கூடும் என்று சுலபத்தில் எண்ணுவதற்கில்லை. ஏதாவது ஒரு சிறு மாற்றமாவது ரகம் முற்போக்குத் தன்மையில் செய்யலாம் என்றாலோ அதற்கேற்படும் கூலி முற்போக்கின் தகுதிக்கு மேற்பட்டதாக செலவழித்தாகவேண்டிவரும். இது தவிர விலை விஷயத்தில் இனி இதை விட குறைக்கும்படியான நிலைமை சுலபத்தில் ஏற்படப்போவதில்லை.

ஏனெனில் கதர் தொழிலோ கதர் வியாபாரமோ மக்களின் சாதாரணப் பழக்கத்தில் உள்ள தொழிலாயும் வியாபாரமாயும் இல்லாமல் வேறு ஏதோ ஒரு தத்துவத்திற்காக தியாகம் செய்து தீரவேண்டிய முறையில்- மற்றவர்கள் நிர்பந்தத்தின் மீது நூற்றல், நெய்தல்,விற்பனை வியாபாரம் செய்தல், வாங்கிக் கட்டுதல் ஆகிய காரியங்கள் முழுவதும் நடைபெறவேண்டியதாக இருந்து வருகின்றது. இவ்வளவு கஷ்டப்பட்டும் உத்தேசித்தக் காரியமாகிய பொருளாதாரம் என்பது வாங்கி விற்கின்ற மத்திய மனிதன் என்கின்ற முதலாளி தவிர மற்ற யாருக்கும் அது சிறிதும் பயனபடாததாயிருப்பதுடன் உண்மையிலேயே வாங்கிக் கட்டுகிறவன் அதிக பொருள் அதாவது 100க்கு 250 பங்கு நஷ்டமடைவதற்கும் தயாராயிருக்க வேண்டியவனாகவேயிருக்கிறான். அப்படிச் செய்தும் தொழிலாளியாகிய நூற்புக்காரன் மணிக்கு ஒருதம்பிடி அல்லது ஒன்னரைத் தம்பிடி அதாவது ஒரு அணாவில் 12-ல் ஒரு பாகம் அல்லது 8ல் ஒரு பாகமே பெறமுடிகின்றது. நெசவுக்காரனும் சாதாமில் நூல் நெசவு நெய்வதைவிட இரண்டு மடங்கு கஷ்டமும் கவனமும் செலுத்தி வேலை செய்து பழைய கூலியையே தான் பெறவேண்டியதாயிருக்கின்றது.

இவ்வளவும் தவிர முன்குறிப்பிட்டது போல் கதர் வாங்குகின்றவனும் ஒன்றுக்கு இரண்டரையாய் விலை கொடுத்தும் சாதாரண சரக்கைவிட மிகக் கேவலமான தென்று சொல்லும்படியான சரக்கையே வாங்கி வேறு ஒரு காரியத்தின் பொருட்டு சமாதானம் செய்து கொள்ள வேண்டியதாயிருக்கின்றது.

ஆகவே பொருளாதாரத்துறையில் கதர் எந்தவிதத்தில் பயன் அளிக்கின்றது என்பது இதிலிருந்தே அறியத்தகுந்ததாகும்.

இனிக் கதர் தத்துவம் கைத்தொழில்துறையில்எப்படிப்பயன்படுகின்றது என்று பார்ப்போம். கதர் கைத்தொழில் உலக கைத்தொழில் முறைக்கு நேர்விரோதமானதாக இருக்கின்றது. எப்படியெனில் கைத்தொழில என்பது வேலை செய்கின்றவன் கொஞ்ச நேரத்தில் அதிக சரக்கு உற்பத்தி பண்ணக்கூடியதாகவும், அதுவும் சரீரப்பிரயாசை தேவையின் பாகம் நாளுக்குநாள் குறைந்து கஷ்டமில்லாமல் செய்யக்கூடியதாகவும், சாமான் மாதிரியும் நாளுக்கு நாள் உயர்ந்த தரமானதாகவும் இருக்க வேண்டியதோடு அதை வாங்கி உபயோகிக்கும் மக்களுக்குஅந்தசாமான்கள் அதிக சரசமாய் இருப்பதாகக் காணக்கூடியதோடு அச்சாமானின் வேலைப்பாடானது மக்களை வாங்கும்படி தூண்டக்கூடியதாகவும் இருக்க வேண்டியதாகும். இந்த முறையில்,பார்த்தாலும் கதர் தத்துவம் முதல்பிரிவுக்கு சொல்லப்பட்ட காரணங்களால் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு நிலையிலும் விபரீதமாகவே இருந்து வருகின்றது.

மூன்றாவதாக வியாபாரத்துறையில் பார்த்தாலும் மூலப்பொருளை அதிகமாக செலவு செய்து அதாவது ஒரு வேஷ்டிக்கு எவ்வளவு மூலப்பொருள் (பஞ்சு) வேண்டுமோ அதற்குமேல் இரண்டு அல்லது மூன்றுபங்குவீதம் பஞ்சைசெலவுசெய்து (அதாவது மொத்தமான நூலில் முரட்டு துணியாகத்தான் பெரிதும் நெய்ய முடிவதால் இரண்டுமூன்று வேஷடிக்காகும்படியான பஞ்சு ஒருவேஷ்டிக்கே செலவாகும்படியாகச்செய்து) அதுசம்மந்தப்பட்ட தொழிலாளிகளையும் கசக்கிப்பிழிந்து விற்கின்றவனையும் வாங்குகின்றவனையும் வேறு காரணத்திற்காக அதாவது வியாபாரத்தில் நம்பிக்கையோ விருப்பமோ இல்லாமல் நிர்பந்தத்தின பொருட்டு ஜனங்கள் இந்த விற்றல் வாங்கல்

வியாபாரம் செய்யும்படியாக இருப்பதால் கதர் தத்துவம் வியாபாரமுறைக்கும், அதன் முற்போக்குக்கும் நேர் விரோதமானதாகவே இருக்கின்றது.

தவிர ஒருநாட்டின் பொருளாதாரம், கைத்தொழில், வியாபாரம் ஆகியவை மூன்றும் முற்போக்கடையவேண்டுமானால் இம்மூன்றும் மற்ற நாடுகளில் எப்படி முற்போக்கடைந்து இருக்கின்றது? மற்றநாட்டுக்கும் நமது நாட்டுக்கும் உள்ள வியாபார சௌகரியம் எப்படி இருக்கின்றது? அதன் போட்டியின் தத்துவம் என்ன? உலகப் போக்கு என்ன? என்பவைகளை யோசித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொருநாடும் நவீன ஆராய்ச்சி இயந்திர சௌகரியம் வியாபார தந்திரம் ஆகிய காரியங்களைக்கொண்டேயொழிய பண்டைய காலத்தின் கைத்தொழில்முறையைபுதுப்பித்ததாலோ ஆராய்ச்சியை அலக்ஷியம் செய்து இயந்திரங்களை வெறுத்ததாலோ அல்லது மறியல் செய்து நிர்பந்தப்படுத்தி வியாபாரம் செயச் செய்ததினாலோ அல்ல வென்பது விளங்கும்.

இந்தியா தேசத்தின் மக்களை ஜாதிவாரியாகப் பிரித்து ஒவ்வொரு ஜாதிக்கு இன்ன இன்ன தொழில் என்று கற்பித்து அந்தத்தொழிலை அந்தந்த ஜாதித் தலைமுறை தலைமுறையாகச் செய்ய வேண்டியது தான் மனிததர்மம்என்கின்றதான நிர்பந்தம் இங்கு இருந்து வருவதாலும்இந்தத்தொழிலாளி ஜாதியல்லாதவர்களே "இந்நாட்டின் நலத்தை கோருகின்ற தலைவர்கள்" என்பதாக ஆகிவிட்டதாலும் அதுமாத்திரமல்லாமல் இந்த மாதிரியான வருணாச்சிரமதா்ம தொழில் முறையில் நம்பிக்கை உள்ளவர்களும் அதை மேலும் நிலைநிறுத்தப்பாடுபடுகின்றவர்களுமே தொழில் முறையைசீர்திருத்தம் செய்கின்றவர்களாக இருப்பதினாலும் பண்டைய தொழில் முறையை புதுப்பிக்க வேண்டுமென்றும் புதிய நாகரீக இயந்திரங்கள் கூடாது என்றும் ஒவ்வொரு வரும் ஓய்வு நேரத்தில் வேலைசெய்ய வேண்டும் என்றும் அவனவனுக்கு வேண்டியதை அவனவனே செய்துகொண்டு தனித்தனி தொழிலாளியாய் இருக்க வேண்டுமேயொழியகூட்டுத்தொழிலாளிகளாய் இருக்கக்கூடாதென்றும் சொல்ல வேண்டியதாயிற்று. ஏனெனில் இந்தப்படி ஒவ்வொருவனும் தனித்தனித் தொழிலாளியாக இருந்தால்தான் அதோடு 'அவனவனுக்கு வேண்டியதை அவனவனே செய்துகொள்ளவேண்டும்' என்கின்ற வேலையில் அமர்ந்திருந்தால்தான் தொழிலாளிகள் ஒன்றுசேரவோ அவர்கள் நிலையைப்பற்றி கலந்து ஆலோசிக்கவோ அல்லது தங்கள் துயோக்கியதையைசற்று உயர்த்திக்கொண்டு தொழிலாளி தன்மையில் இருந்து நழுவிக்கொள்ளவோ அவர்களது பரம்பரை தர்மத்தில் இருந்து விலகவோ முடியாததாயிருக்கும் என்று கருதியே இச்சூட்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆதலாலேயேதான்புதியநாகரீகமும் இயந்திர சௌகரியமும் கூட்டு வேலையும் தொழிலாளிகள் முன்னேற்றமும் கதர் தத்துவத்தில் சிறிதும் இல்லாமலிருக்க வேண்டியதாகி விட்டது.

ஆகவே, வருணாச்சிரம கட்டுப்பாட்டை உடைத்து மனிதவர்க்கத்தின் சரீரப்பிரயாசையைக் குறைத்து குறைந்த நேரத்தில் அதிகக் கூலி கிடைக்கும்படி செய்து மூலப்பொருள்களை வீணாகாமல் விவசாயிகளுக்கும்அதிகப் பணம் வரும்படி செய்து எல்லா மனிதருக்கும் எல்லா தொழில் செய்யவும் எல்லாவித பதவியடையவும் தகுந்தபடியாக ஆக்கவேண்டும் என்றால் கண்டிப்பாக இத்தகைய கதர் திட்டம் ஒழிந்தேயாகவேண்டும் என்பது நமதபிப்பிராயமாகும்.

தவிர, இந்தியாவுக்கு எந்த விதமான ஆட்சி முறையோ, அல்லது சுயேச்சையோ பூரண சுயேச்சையோ, அல்லது ராம ராஜியமோ, தர்ம ராஜியமோ வருவதானாலும் இந்தியா உலக முற்போக்கில் கலந்து கொள்ளவும் புதிய ஆராய்ச்சியின் பயன்களை அனுபவித்து மனித சமூகம் இன்பமும் திருப்தியும் யடையவும் தகுந்ததாக ஆவதற்குத்தக்கதாய் இருக்கவேண்டுமேயொழிய மற்றபடி அவனவன் வயிற்றுப் பாட்டிற்கும் அவனவனுக்கு வேண்டிய இன்றியமையாத அவசியங்களுக்கும் அவனவனே அவனது வாழ்நாள் நேரம் முழுவதையும் செலவு செய்து கொண்டிருக்கும்படியான தத்துவங்கள் கொண்டதாக இருக்கக்கூடாது என்பதே நமதபிப்பிராயம்.

இந்தக் காரணங்களாலேயே திரு. காந்தியவர்களின் தத்துவமானது இந்தியாவை ஒரு நாளும் விடுதலையுள்ள நாடாகவோ மனித சமூகத்தின் முற்போக்கிற்கும் நாகரீக அபிவிருத்திக்கும் சரீரப் பிரையாசையைக் குறைத்துக்கொண்டு வாழும்படியான நாடாகவோ ஒரு நாளும் ஆக்க முடியாதென்றேசொல்லுவோம்.

ஏனெனில் அவரது நோக்கமெல்லாம் பண்டையநிலைகளையே பெருமையாய்க் கருதுவதிலும் பண்டைய முறைகளை புதுப்பிப்பதிலும் இருக்கின்றதேயொழிய இன்றைய உலகம் என்பது என்ன என்பதில் கவலையோ, கருத்தோ என்பது சிறிதும் இல்லை. பண்டைய நிலைமையை பெருமைப் படுத்தி, பண்டைய முறைகளை புதுப்பிப்பதில் யாருக்கு அனுகூலம் என்று பார்ப்போமேயானால் மக்களை ஏமாற்றிக்கொண்டு சோம்பேறி வாழ்க்கை நடத்தும் பார்ப்பனர்களுக்கும் பாடுபடுவோரின் பலனை அனுபவிக்கும் பிரபுக்களுக்கும், சரீரப்பிரயாசை இல்லாமல் வாழ்வை நடத்த விரும்பும் படித்த கூட்டத்தார் என்பவர்களுக்கும் அனுகூலமாகவும், தங்கள் ஆதிக்கத்திற்கேற்ற அரசியலை ஸ்தாபித்துக் கொண்டுசுகத்திலிருக்கவும், அதற்கு பயன்படக்கூடியதாகவும்யிருக்ககலாம். இந்தக் கூட்டத்தார் முன் திரு. காந்தி அவர்களும் மகாத்மாவாய், அவதார புருஷராய், தெய்வத்தன்மை பொருந்தியவராய், உலகம் போற்றும் உத்தமராய் உலகுக்கே பெரியோராய் விளங்கலாம்.

ஆனால் பாடு பட்டும் கூலியில்லாமல் பட்டினி கிடப்பவனுக்கும் தலைமுறை தலைமுறையாய் ஏழையாய், கூலிக்காரனாய் இருப்பவனுக்கும் தெருவில் நடக்க, குளத்தில் குடிக்க யோக்கியதை இல்லாமல் பன்றியிலும், கழுதையிலும், நாயிலும் கேடாய் மதிக்கும் இந்நாட்டுப் பழங்குடி மக்களுக்கும் திரு. காந்தியவர்கள் "எமனாய்" இல்லாமல் வேறு யாராய் இருக்கமுடியும் என்பதைப் பகுத்தறிவுடன் நடுநிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

மற்றது மற்றொருசமயம்.

சுயமரியாதைச் சங்க நிர்வாகசபை மீட்டிங்.

கொடைக்கானல்

—(‿)—

1931ம் வருஷம் ஜூன் மாதம் 18தேதி பிற்பகல் 2 மணிக்குக்கொடைக்கானலில் எனது பங்களாவில் நடைபெறும். நிர்வாக சபை அங்கத்தினர்கள் யாவரும் தயவு செய்து வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விஷயங்கள்.

1. விருதுநகர் மகாநாடு.
2. பிரசாரவேலை திட்டம்.
3. தினசரி பத்திரிகை விஷயம்

W. P. A. சௌந்திரபாண்டியன்,

தலைவர்.

தினசரி.

சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு தமிழ் தினசரி பத்திரிகை.

லால்குடி தாலூகா சுயமரியாதை மகாநாட்டுக்கு வந்திருந்த சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள் சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு தினசரி பத்திரிகை வேண்டி இருக்கின்ற அவசியத்தைப்பற்றி நெடுநேரம் பேசினார்கள் திருவாளர் ஈ. வெ. இராமசாமி, தினசரி அவசியமில்லை என்றும் தன்னால் அதை நிர்வகிக்க முடியாதென்றும் சொல்லியும் மற்றவர்கள் கண்டிப்பாக ஒரு பத்திரிகை இருந்துதான் ஆகவேண்டுமென்றும் நீங்கள் முன் வந்து நடத்தாவிட்டாலும் மற்றவர்கள் நடத்த முன்வருவதை தடுக்காமலாவது இருந்து பத்திரிகை கொள்கைக்கு மாத்திரம் பொறுப்பாளியாய் இருந்தால் போதுமென திரு. இராமசாமிக்குச் சொன்னதின் பேரில் அப்படியானால் அந்த விஷயத்தில் தனக்கு ஆக்ஷேபனையில்லை யென்றும் சொன்னார். அதன்பிறகு 500 ரூ. வீதம் கொண்ட 50 ப

ங்குகள் ஏற்பாடு செய்து திருச்சியிலேயே தினசரி பத்திரிகை நடத்துவது என்ற முடிவுக்கு வரப்பட்டது. பத்திரிகையின் நிர்வாகத்திற்கு திரு சொ. முருகப்பா பொறுப்பாளியாய் இருக்கவேண்டும் என்றும் பேசப்பட்டது. மற்றும் இரண்டொரு தனவணிக கனவான்கள் ஆதரவளிக்க முன்வந்தார்கள். சிலருக்கு தினசரி திருச்சியில் நடத்த முடியுமா என்கிற சந்தேகம் தோன்றியபோது 6 மாதம் திருச்சியில் நடத்திப் பார்த்து முடியாவிட்டால் சென்னையிலேயே நடத்தலாம் என்றும் பேசப்பட்டது. பத்துபங்குகள் அதாவது 5000 ரூ. க்கு அங்கேயே விதாயம் ஏற்பட்டது. சமீபத்தில் நடைபெறும் நன்னிலசுயமரியாதைமகாநாட்டிலும் அடுத்தவாரம் போல் கொடைக்கானலில் நடைபெறப் போகும் சுயமரியாதை சங்க நிர்வாகக்கமிட்டியின் போதுசங்கத் தலைவரைக்கலந்தும் இவ்விஷயம் மேற்கொண்டு யோசிக்கப்படும்

மதுவிலக்கு நாடகம் -

தேசியத்தின் பேரால் ஏதாவது ஒரு நாடகம் நாட்டில் நடந்து கொண்டிருக்காவிட்டால் மக்கள் காங்கிரசையும், காந்தியையும் அடியோடு மறந்து விடுகின்றார்கள்.

ஆதலால் தேசிய தொழில்காரர்களுக்கு ஏதாவது ஒரு வேலை நடத்திக் கொண்டிருக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கின்றது. அதற்கு ஏற்றாப்போல் காங்கிரஸ் பக்தர்களுக்கும் பொதுஜனங்களின் காணிக்கைப் பணம் தாராளமாய் இருக்கின்றது. அதற்கேற்றாப்போல் வேலையில்லாத் தொந்திரவால் கஷ்டப்படும் வாலிபர்களும் நாட்டில் ஏராளமாய் இருக்கின்றார்கள். ஆகவே இவ்விரண்டும் சேர்ந்தால் பெற்றோல் எண்ணெய்க்கும், நெருப்புக்கும் உள்ள சம்மந்தம் போல் ஒன்றுக்கொன்று வெகு சுலபமான சம்மந்தம் ஏற்பட்டு விடுகின்றது.

ஆகையால் இவை இரண்டையும் வைத்துக்கொண்டு என்ன வேலை செய்யலாம் என்று பார்த்தால் பொது ஜனங்கள் சீக்கிரம் ஏமாறுவதற்கு அனுகூலமாக கள்ளுக்கடை மறியல்கள்தான் தென்படுகின்றது. ஆகவே இதன் மீது தலைவர்கள் என்பவர்கள் வாலிபர்களை ஏவி விடுவதால் ஏதாவது ஒரு கலகம் ஏற்படுகின்றது. அக்கலகத்தை பிரமாதப்படுத்தி விளம்பரம் செய்வதே பெரிய தேசீயப் பிரசாரமாகக் கருதப்பட்டு விடுகின்றது. இந்தமுறையிலேயே மதுவிலக்கு நாடகம் நடைபெறுகின்றது.

விளம்பரக்காரர்களும், ஸ்தலஸ்தாபனம். சட்டசபை, முதலியவைகளில் ஸ்தானம் பெறக் காத்துக்கொண்டிருக்கின்றவர்களும் இந்த நாடகத்திற்கு சில சமயங்களில் பாத்திரங்களாய் இருக்கவேண்டியவர்களாகவும் ஆகிவிடுகின்றார்கள் இதன்பயன்களை நாடகக் கம்பெனி சொந்தக்காரர்களாகிய தலைவர்கள் என்பவர்களே அடைகின்றார்கள்.

உதாரணமாக திருப்பூரில் நடந்த மறியலில் அடித்தவர்களும், அடிபட்டவர்களும், அதாவது அடித்ததாகக் கெட்டபேர் வாங்கினவர்களும், அடிபட்டு அவஸ்தைபட்டதாகச் சொல்லப்பட்டவர்களும் ஒரே ஊர்க்காரர், ஒரே கூட்டத்தார்கள், ஒரே ஜாதிசொந்தக்காரர்கள் என்றுகூடச்சொல்லலாம். ஆனால் இதன் பலன் பெருமை அசோசியேட் பிரஸ், பிரீ பிரஸ் சேதிப் பெருமை சமாதானம் செய்துவந்த பெருமை முதலாகிய கௌரவங்களெல்லாம் உயர்திரு, சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களது "பாத சன்னிதானத்திற்கு"ப்போய்ச் சேரவேண்டியதாகி விட்டது.

நம்மவர்கள் மூடத்தனமாக நடந்து, பட்டதுதான் பயன். ஒரு சமயம் யாராவது கொஞ்சம் இவ்வித இயக்கத்தால் பிழைக்க வேண்டியவர்களல்லாதவர்கள் ஒருவர், இருவர் இதில் சேர்ந்து அடிபட்டதாகப் பேர்வாங்கியிருந்தாலும் அவர்களுக்கு அடுத்த தேர்தலில் ஏதாவது ஒரு ஸ்தானம் ஒதுக்கி வைக்கப்படுவதுமல்லாமல் மற்றபடி இதனால் என்ன பயன் என்பது விளங்கவில்லை.

இந்த மறியலில் சம்மந்தப்பட்ட வாலிபர்களைப் பற்றி நாம் இங்கு பேச வரவில்லை. மற்றபடி பெரியவர்கள், தேசபக்தர்கள், பொதுநலசேவைக்காரர்கள் என்பவர்களை ஒன்று கேட்கின்றோம்.

அதாவது இந்தக் கள்ளுக்கடை மறியல் செய்வது என்பது இதனால் அதாவது இவர்களது மறியலில் கள்ளுக்குடி நின்று விடும் என்று கருதுகின்றார்களா? அல்லது வெள்ளைக்காரனை இந்த நாட்டைவிட்டு ஓட்டுவதற்கு அல்லது "சுயராஜியம்" பெறுவதற்குப்பயன் படக்கூடியது என்று கருதுகிறார்களா என்று கேட்கின்றோம். கள்ளுக்கடை ஏலத்தில் எடுத்திருப்பது திருப்பூர் பிரபுக்கள். மறியல் செய்வது திருப்பூர் பிரபுக்கள். கள்ளுக்கு மரம் வளர்த்து குத்தகைக்கு விடுவது அக்கம் பக்கத்திய பிரபுக்கள்: இந்தக்கள்ளைக் குடிப்பது திருப்பூர் தொழிலாளிமக்கள். அரசாங்கத்தில் மாதம் ரூ. 5000 வாங்கிக் கொண்டு கள்ளு நிர்வாகம் பார்ப்பது இந்த மாகாணப் பிரபுக்கள் (ஜனப்பிரதிநிதிகள்). மேலும் ஜனப்பிரதிநிதியாக இந்தவேலைக்குப் போட்டிபோடுவதும் இதேஜில்லா பிரபுக்கள். மற்றும் இந்த இலாகாவில் மாதம் ரூ. 2500 சம்பளம் முதல் ரூ. 12 சம்பளம் வரையில் வாங்கி ஜீவனம் செய்து கொண்டு வேலை பார்க்கும் சுமார் 10000பேர்களும் இந்த மாகாண இந்திய (படித்த) மக்களேயாவார்கள், மற்றும் இந்தக் கள்ளு, சாராய வியாபாரத்தால் தொழிலால் பிழைக்கும் சுமார் 20000 மக்களும் இந்த மகாண இந்திய மக்கள். இடபடியெல்லாம் இருந்தாலும் இந்தத் தொழிலும் சட்டத்தில் குற்றமானதல்ல. மதத்தில் குற்றமானதல்ல: 'ஒழுக்கத்திலும்' குற்றமானதல்ல (அளவுக்கு மீறினால் குற்றம் சொல்லலாம்.) இந்த நிலையில் யாரோ இரண்டுபேர் ஏதோ காரணத்திற்காகக் கள்ளுக்கடைக்குப்பக்கத்தில் போய் நின்று கொண்டு யாரோ இரண்டொருவனை 'அப்பா,சாமி கள்ளுக் குடிக்காதே' 'காந்தி கட்டளை இட்டு இருக்கிறார்' 'ராஜகோபாலாச்சாரி கட்டளையிட்டிருக்கிறார்' 'சத்தியமூர்த்தி கட்டளையிட்டு இருக்கிறார்' என்று சொல்லி விடுவதாலேயோ அல்லது அந்தக் குடிகாரனிடமோ, கள்ளு வியாபாரக்காரனிடமோ இரண்டு அடி வாங்கிக்கொண்டு அதை ஒன்று பத்து நூறாகப் பெருக்கிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விடுவதாலேயோ கள்ளுக்குடி நின்று போகுமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

சத்தியாக்கிரகம், மறியல் என்பவைகள் வீண் சண்டித்தனமேயல்லாமல் அதில் ஏதாவது கடுகளவு நாணயமோ, யோக்கியப் பொறுப்போ, இருக்க முடிகின்றதா? என்றுகேட்கின்றோம். உண்மையாய் யோக்கியமாய் கள்ளை நிறுத்த சத்தியாக்கிரகம் செய்பவர்கள் கள்ளு மந்திரி வீட்டில் கள்ளு இலாகா அதிகாரி வீட்டில்—மரம் கள்ளுக்குவிடும் குடியானவன் வீட்டில்—கள்ளு இறக்கும்போதுமரத்தடியிலும் மற்றும் இது முதலாகிய ஆரம்ப நிலையிலிருந்து ஏதாவது ஒன்றில் செய்தால் சிறிது அர்த்தமாவதுஉண்டு. அவைகளை விட்டு விட்டு எல்லாக் காரியமும் நடந்தும், செலவாகும் பணமெல்லாம் செலவாகி, செய்யவேண்டிய சடங்கெல்லாம் செய்யப்பட்டு கள்ளுக்கடைக்குள் கள்ளு வந்து விற்பனைக்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் போது "காந்திக்குஜே" "கள்ளு குடிக்காதே" என்று சொல்லுவதால் எப்படி நிற்கமுடியும் என்பதை அனுபவ ஞானமுள்ள மக்கள் யோசித்துப்பார்த்தால் விளங்காமல் போகாது.

மேலும் இந்துக்களில் இருக்கும் அவ்வளவு விகிதாச்சார குடிகாரரும், கிறிஸ்துவர்களில் இருக்கும் அவ்வளவு விகிதாச்சார குடிகாரரும் போல அவ்வளவு விகிதாச்சார குடிகாரர்கள் மகமதியர்களில் இருக்கின்றார்களா என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஒருக்காலமும் அவ்வளவு குடிகாரர்கள் இல்லை என்றே சொல்லுவோம். இதன் காரணம்என்னவென்றால் அவர்களது மதமானது கள்ளை அவ்வளவு கடினமாகவெறுக்குகின்றது. மற்றபடி இந்துக்கள் என்பவர்களிலும் மற்றும் சற்று கல்வி அறிவுமேல் ஜாதிகாரர்கள் என்கின்றஎண்ணத்துடன்சீரப்பாடுபடாமல் சோம்பேரியாய் இருக்கும்சைவ வேளாளர்தொண்டைமண்டல வேளாளர்பெருவாரியான வியாபாரிகள் வைசிய செட்டிமார்கள் என்பவர்கள் முதலியவர்களிலும் குடிக்கின்ற மக்கள் விகிதாச்சாரம் மிகவும்சுருக்கமானதேயாகும். அந்த சுருக்கமும் ஏதோ ஒருவித நாகரீகப்பைத்தியக் காரணமாக,செயர்க்கைவாசனை காரணமாகஇருப்பதல்லால் மற்றபடி குடிகாரர்கள் என்கின்ற முறையில் ஏற்படுவதுகிடையாது. ஆகவேஇன்றைய குடிகார மக்களின் குடிக்கு காரணம் என்ன என்பதை அறிவாளிகள்இப்போதாவதுயோசித்துப்பார்த்தால் உண்மை உணராமலிருக்கமுடியாது.

சாதாரணமாக கள் இலாகா சனப்பிரதிநிதிகள் ஆதிக்கத்திற்கு வராமலிருந்து சர்க்கார் இடமே இருந்திருந்தால் அது சம்மந்தமாக சட்டம் முதலியவைகள் செய்யவாவது சற்று இடமிருக்கும் இப்போது அதுவும் இல்லாமல் போய்விட்டது ஏனெனில் ஜனப்பிரதிநிதிகளில்யார் மெஜாரிட்டியார்யாரோ அவர்களே அந்த

இலாகாவை நடத்தும் வேலையை ஒப்புக்கொள்ளும் மந்திரியாகிவிட்டதால் மந்திரிவேலை கிடைக்காதவர்களும் அடுத்த தடவை அதை அடையலாம் என்று காத்திருப்பவர்களும் அதைப்பற்றி ஏதாவது பேசிக்கொண்டும்இவ்வித பிரசாரம் செய்துகொண்டு மிருக்கலாமே யொழிய மற்றபடி இனால் எல்லாம் கள்ளுக் குடியை ஒழிக்க காரியத்தில் ஒரு துரும்பை அசைத்துவிடமுடியுமா? என்று கேட்கின்றோம். வீணாக இது பொதுஜனங்களில் பதவி வேட்டைக்காரருடைய சுயநல வஞ்சகத்தையும் பாமரமக்களின் முட்டாள் தனத்தையும் கைமுதலாகவைத்துக்கொண்டு நடத்தும் போலிநாடகமே யொழிய மற்றபடி கள்ளு மறியலில் சிறிதும்பயனும நாணயமும், யோக்கியப் பொறுப்பும், புத்திசாலித்தனமும் இல்லையென்றே சொல்லுவோம்.

அன்றியும் அரசியல் கருத்துக் கொண்ட மறியல்களை நிறுத்தி விட்டு பொருளாதாரத்திற்கும் சன்மார்க்கத்திற்குமான தனிப்பட்ட சீர்திருத்தத்துறையில்மறியல் செய்வதாய்சொல்லி ராஜி பேசிக்கொண்டு ஜெயிலிலிருந்து வெளியில் வந்த பிறகு மறுபடியும் அரசியல் கருத்தில் செய்யும் மறியலில் எவ்வளவு தூரம் பயனும் நாணயமும் உண்டாகும் என்பதைப் பொதுஜனங்களே யோசித்துப் பார்ப்பதன்மூலம் இந்திய தேசியத்தின் நாணயத்தையும் தலைவர்களின் நாணயத்தையும் அறிந்துகொள்ளட்டும் என்றே விட்டு விடுகின்றோம்.

ஜவஹர்லால்.

உயர்திரு. ஜவஹர்லால் நேரு உடல் சுகத்திற்கென்று தென்னிந்தியாவிற்கு வந்து ஒரு சரியான நாடகமாடி விட்டு ஊருக்குத் திரும்பினார். எப்படித்திரும்பினார்? சமதர்மக் கொள்கைகளையும் பொதுவுடைமைக்கொள்கைகளையும் பல்லவியாக வைத்துக்கொண்டார்.

"யோக்கியர்களுக்கு அரசியல் உலகம் வெறுப்பைக்கொடுக்கின்றது. சீக்கிரம் அதை விட்டு விலகிக்கொள்ளுவேன்" என்றார். ஆனால்தான் கடைசிவரை அரசியல் பிரசாரமே அதுவும் அரசியல்காரர்கள் முறையைப் பின்பற்றியே செய்தார். சமூக இயல் விஷயத்தில் தீண்டாமையைப்பற்றி உண்மையைத் தைரியமாய் பேசுவதற்கு ஒவ்வொரு நிமிஷமும் நடுங்கினார். ஏதாவது ஒரு சமயத்தில் தீண்டாமையொழியவேண்டுமென்று பேச நேர்ந்தாலும் உடனே அதற்கு பந்தோபஸ்தாக எந்த ஜாதியாரின் உரிமைகளையும் பாதிக்க விடமாட்டேன் என்றும் ஒருகரணம்அடித்துக்கொண்டே பார்ப்பனர்களின் கோபத்திலிருந்தும் தப்பித்துக்கொண்டார்.

காங்கிரசிலும் தீண்டாமையைப்பற்றி ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார். ஆனால் இப்போது செய்யவேண்டிய வேலை அதுவல்ல. கள்ளுக்கடை, ஜவுளிக்கடை மறியல் தான் என்று ஒரு பல்டி அடித்துத்தப்பித்துக் கொண்டார்.

ஆகவே அவர் கூடியவரையில் திரு. இராஜகோபாலாச்சாரியாரைவிட சாமர்த்தியமாகவே நடந்து கொண்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

ஒவ்வொரு ஜாதி மதக்காரருடையவும் உரிமைகள் பாதிக்கப்படாமலும் ஒரு ஜாதியாரால் மற்றொரு ஜாதியாருடைய உரிமை பாதிக்கப்படாமலும் இருக்கவேண்டுமென்று கருதி வேலை செய்பவர்களால் தீண்டாமையை ஒழிக்கவோ, பொதுவுடைமையும், சமதர்மமும் கொண்ட கொள்கையை ஏற்படுத்தவோ முடியுமா? என்பதை அறிவுள்ள வாசகர்கள் தான்யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஜாதியின் உரிமையென்று எப்பொழுது பாகுபடுத்திக்கொண்டாரோ அப்பொழுதே திரு. ஜவஹர்லால் ஒவ்வொரு ஜாதியையும், கீழ் ஜாதி மேல் ஜாதி என்ற பாகுபாடுகளையும் படிகளையும் ஒப்புக்கொண்டு அவர்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற ஒபபுக்கொண்டார் என்பதில் யாரும் சந்தேகப்பட முடியாது.

ஆகவே இன்றையதினம் நாட்டிலுள்ள பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தீண்டாதார், இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர்கள் ஆகியதகளுருகள்ஜாதிமதத்தைஆதாரமாய்க்கொண்டுசிலசௌகரியங்களைதங்கள் தங்கள்ஜாதிமத உரிமைஎன்றுகருதி அதுவும் குர்ஆன், பைபிள், வேதம், தர்மசாஸ்திரம் ஆகியவைகளின்படி கடவுள் கட்டளையாக அனுபவித்து வருவதாகவே கருதிவருகிறார்கள். இவற்றிற்குப் பாதகமில்லாமல் பார்த்துக்கொள்ள வீரர் ஜவஹர்லாலுடைய தயவு எதற்குஎன்றுதான்கேட்கின்றோம், இப்பொழுதேஅப்படித்தானே நடைபெற்று வருகின்றது? இதுபோதாதா? இதைக்காப்பாற்ற காங்கிரசும்,காந்தியும்,நேருவும் எதற்கு? .இதற்குஒருஇரும்புப்பூண் போட்டு இனியாராலும் எந்தக்காலத்திலும் அசைக்காமல் இருக்கலா? என்று கேட்கின்றோம்.

ஒவ்வொரு ஜாதி உரிமையையும், ஒவ்வொரு மத உரிமையையும், ஒவ்வொரு வகுப்பு உரிமையையும் காப்பாற்றுவது, காங்கிரஸ் கொள்கையானால், காந்தி கொள்கையானால், நேரு கொள்கையானால், இவைகளைவிட வெள்ளைக்கார கொள்கை ஆயிரம் மடங்கு மேலானதென்று கல்லின் மேல் செதுக்கி வைப்போம்.

மற்றும் தீண்டாமையை ஒழிப்பதைப்பற்றிதிரு. ஜவஹர்லால்நேருகூறினது எவ்வளவுஏமாற்றுகரமானது என்பதை தீண்டாமையொழிப்பதில் கவலையுள்ளவர்கள் உணரவேண்டும்.

"தீண்டாமையொழிப்பதும் காங்கிரஸ் திட்டங்களில் ஒன்றுதான். ஆனால் கள்ளுக்கடையும் ஜவுளிக்கடையும் மறியல் செய்யும்வேலைதான் இப்போது காரியத்தில்செய்யவேண்டியது" என்று கூறினால்இதன் யோக்கியத்தன்மை என்னஎன்றுகேட்கின்றோம்.

தீண்டாமையானது பறையர், சக்கிலியர் பள்ளர் என்று சொல்லப்படுபவர்கள் முதலிய சிலருடைய கஷ்டம் என்று மாத்திரமே சிலர் கருதியிருக்கிறார்கள். இந்தக்கருத்தேதான் நமது மக்களின்சுயமரியாதை யற்றதன்மைக்கு ஒரு உதாரணமாகும்.

திரு. ஜவஹர்லால் நேருவை நேற்று கன்யாகுமரி கோவிலுக்குள் சென்று "கடவுளை" தரிசிக்க அனுமதிக்காமல் போலீஸ் பந்தோபஸ்துடன் விரட்டி அடித்து விட்டார்கள். திருவனந்தபுர பட்டணத்தின் சில தெருக்களில் திரு. ஜவஹர்லால் ஊர்வலம் போவது கூடாது என்று காவல்மூலம் தடுத்து விட்டார்கள். இந்தக் கதி திரு. லஜபதிக்கும் திரு. காந்திக்கும் கூட ஏற்பட்டது தான் என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

ஆகவே "சக்கிலியர் பறையர் பள்ளர்" ஆகியவர்களுக்கு கோவிலிலும், குளத்திலும், தெருவிலும் தீண்டாமை தத்துவப்படி என்ன உரிமை மறுக்கப்பட்டு இருக்கிறதோ அதே உரிமைகள் தான் "சமதர்ம" ஜவஹர்லால் நேருவுக்கும்அவர் "பாட்டனார்" "மகாத்மா" காந்திக்கும், அவர் பூட்டனான "பாஞ்சால தெய்வம்" லாலாலஜபதிக்கும் மறுக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் தங்களை "நல்ல ஜாதி" என்றுகருதிக் கொண்டிருக்கும்"நாயக்கர்,செட்டியார்,பிள்ளை,முதலியார்" முதலிய"பெரிய ஜாதி"என்றுஎண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கும் தங்களை விஸ்வ, தேவாங்க, சௌராஷ்டிர பிராமணர்கள் க்ஷத்திரியர், வைசியர், சற் சூத்திரர் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கும்நடந்துகொண்டுதான்வருகின்றது. இதில் செய்யப்படவேண்டும் என்று கருதும் எவ்வித சிறு மாறுதலும் ஜவஹர்லால் நேருவின் திட்டப்படி ஏதாவது ஒரு ஜாதியாரின் உரிமைக்கு விரோதம் செய்ததாகவே தான் ஏற்பட்டுத்தீரும். அதனால் தான் திரு. காந்தி முதல் எல்லோருமே "அந்தக்கோவிலில் சாமியில்லை" என்று சொல்லி விட்டு ஓடிப்போய் விடுவதுடன் அல்லாமல் மற்றபடி அங்கு ஒரு நிமிஷ நேரமாவது தங்கியிருந்து எவ்விதமானகாரியமும் செய்ய முடியாதவர்களாகப் போய் விட்டார்கள். இது போலவேதான் முதலாளி-தொழிலாளி நிலைமையைப்பற்றியும், ராஜாக்கள், ஜமீன்தாரர்கள், குடி ஜனங்கள் நிலைமையைப்பற்றியும் இந்த "சமதர்மக்" கூட்டம் நினைத்துக்கொண்டு முதலாளிகளும் ராஜாக்களும் கலந்த — அவர்களுடைய உரிமைகள்பாதிக்கப்படாதசுயராஜ்யம் (சமஷ்டி ஆட்சி) சம்பாதிக்க ராஜி பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இதை திரு. காந்தியவர்கள் இர்வின் பிரபுவிடம் ஒப்புக்கொண்டதோடு திரு. காந்தியவர்கள் இப்போதே முதலாளிகளின் (வர்த்தக) சங்கத்தின் (கௌரவ, அங்கத்தினராகவும் தன்னைத் தெரிந்தெடுத்துக்கொண்டார்.

இனி ராஜாக்கள் சங்க கௌரவ அங்கத்தினர் பதவி மாத்திரம் அவருக்குக்கிடைக்கவேண்டியது பாக்கியிருக்கின்றது. இது இதுவரையில் அவருக்குக் கிடைக்காமல் இருப்பதற்கு சில ராஜாக்களுக்கு திரு. காந்தியிடம் இன்னும் பூரண நம்பிக்கை ஏற்படாததுவே தான் காரணமாகும். அதுவும் ஏற்படும்படி சிறிது சிறிதாய் ராஜாக்களைப்பற்றிபேசி உறுதி மொழி கொடுத்துக்கொண்டுதான் வருகிறார். அதுவும் சீக்கிரம் முடிந்து விடும் என்றே கருதி விடலாம். இந்த நிலையில் இந்த தேசத்தின் தேசீய இயக்கம் நடைபெறுவதும் இதன் தலைவர்களாகியதிரு. ஜவஹர்லால்

பொதுவுடைமைக் காரராயிருப்பதாகவும் திரு. காந்திசமதர்மக்காரராயிருப்பதாகவும் பாமரமக்களுக்குவிளம்பரப்படுத்தப்படுகின்றது.

ஆகவே திரு. ஜவஹர்லால் பொதுவுடைமைத்தத்துவம் ஒவ்வொரு ஜாதி உரிமையையும் காப்பாற்றுவதும் திரு. காந்தியின் சமதர்ம தத்துவம் ராமராஜியத்தை ஏற்படுத்தி முதலாளிகளையும் ராஜாக்களையும் காப்பாற்றுவதும் என்கின்ற பார்ப்பனீய முதலாளி தத்துவ ஆட்சி என்பதை இப்போதாவது மக்கள் உணர்வார்களாக.

இந்துமதம்.

இந்துமதம், இஸ்லாமானவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும்கொள்கையில் எவ்வளவு கெடுதியோ அதைவிடப் பல மடங்கான கெடுதிகளை இந்துமதம் பார்ப்பனரல்லாத மக்களுக்கு காரியத்தில் விளைவிக்கின்றது. அதைவிடப் பன்மடங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் விளைவிக்கின்றது. இஸ்லாமானவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இந்துமதத்தால் யாதொரு கெடுதியும் இல்லை என்றுகூடச் சொல்லலாம். இஸ்லாமியரையும், கிறிஸ்தவரையும், இந்துக்கள் வேறாகக் கருதுகின்றார்கள். தங்கள் சமூகத்திற்கு எதிராய் கருதுகின்றார்கள் என்பதைத் தவிரவேறில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பயனாய் அவர்கள் பார்ப்பனரொழிந்த இந்துக்களைவிட சற்று அதிகமான நிலையில் லாபமே அடைந்திருக்கிறார்கள். ஆனால் இந்துமதம் காரணமாக பார்ப்பனரல்லாதாரும் "தீண்டாதாரும்" இழிவாய் நடத்தப்படுவதுடன் சுயமரியாதை இல்லாத முறையிலும், சுதந்திரமில்லாமலும் நடத்தப்படுகிறார்கள். மேலும் இவர்களைப் பார்ப்பனர்கள் அடிமையாக்கிக்கொண்டும் இவர்களது கஷ்டத்தின் பயன்களை அனுபவித்துக்கொண்டும்இவர்களை (பார்ப்பனரல்லாதாரையும் தீண்டாதாரையும்) தலையெடுக்கச் செய்யாமலும் செய்து வருகிறார்கள். இந்துமதம் என்பதாக ஒன்று இருப்பது இஸ்லாமானவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மற்றொருவிதத்தில் லாபகரமானதென்றே சொல்லலாம். எப்படியெனில் மேற்கண்ட இரண்டு மதமும் இரண்டு சமூக எண்ணிக்கையிலும் பெருக்க மேற்படுவதற்கு இந்துமதமே காரணமாயிருக்கின்றது. இந்தியாவில் இந்துமதமில்லாமல் வேறு புத்த மதம் கிறிஸ்து மதம் ஆகியவை இருந்திருந்தால் இஸ்லாம் மத சமூக எண்ணிக்கை இவ்வளவு பெருகி இருக்காது. அதுபோலவே வேறு மதங்கள் இருந்திருந்தால் கிறிஸ்து மத சமூக எண்ணிக்கையும் இவ்வளவு பெருகி இருக்காது. ஆகவே அவ்விஷயத்தில் இந்துமதம் இருப்பது முஸ்லிம்-கிறிஸ்துமதங்களுக்கு லாபமே யாகும். ஆகையால் இந்துமதத்தை ஒழிக்கவேண்டியதென்பதுஇந்தியபார்ப்பனரல்லாத மக்களுக்கும் அவர்களில் தீண்டப்படாதார் என்கின்ற மக்களுக்கும் தான் மிகவும் அவசியமானது என்று சொல்லுவோம். இதோடு ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்கும்கூட சமத்துவமும் பொது உடைமை தத்துவமும் ஏற்படவேண்டுமானால் முதலில் இந்துமதம் ஒழிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பிரசார போதனாமுறை பள்ளிக்கூடம்.

சுயமரியாதைக்கொள்கை பிரசார போதனாமுறை பள்ளிக்கூடம் இம்மாதம் 15ந்தேதி வாக்கில் ஈரோட்டில் துவக்கபடும். அதில் கலந்துகொள்ள இஷ்டமுள்ளவர்கள் 15உக்கு முன்னால் தெரிவிக்கவேண்டும்.

ஈ. வெ. இராமசாமி.

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள்ஈரோட்டைவிட்டு 6-6-31ல இரவு புறப்பட்டு நன்னிலம் தாலூகா சுயமரியாதை மகாநாட்டுக்குச் சென்றார்கள்.

மீண்டும் அடுத்தவாரத்தில் திருவாங்கூர் கோட்டாறுக்குச் செல்லுவார்கள்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவாகவே நமது நாட்டு காங்கிரஸ் என்பது மதப்பைத்தியமும், வருணாச்சிரமப்பைத்தியமும் கொண்டவர்கள் ஆதிக்கத்திலும் மதத்தின்பேரால் உயர்ந்த ஸ்தானம் கிடைக்கப்பட்டவர்கள் ஆதிக்கத்திலும் இருந்துவருவதால் அவைகளை அசைக்கும்படியான எந்தக் காரியமும் செய்ய காங்கிரசினால் முடியாது என்பதையும் உணருங்கள். ஆதலால் மதமும் மத தர்ம சாஸ்திரங்களும் கீதையும் அழிந்தாலொழிய நாம் தீண்டாமையையொழித்து ஜாதி வித்தியாசத்தை அழிக்க முடியும் என்பது முடியாத காரியமே யாகும்.

தொழில்.

நம் நாட்டின் விடுதலை திட்டத்தில் தொழிலும் ஒரு முக்கிய விஷயமாகும். அது இங்கு பலவகையாய் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் ஒவ்வொரு வகுப்புக்கு ஒவ்வொரு தொழில் என்பதாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

இதுவும் பிறப்பை உத்தேசித்தே பிரிக்கப்பட்டிருக்கிறபடியாலும் அந்தந்த வகுப்புக்குள்ள தொழிலையே அதாவது வர்ணாசிரம தர்மப்படி அவனவனது பிறவிக்கு ஏற்ற கருமத்தையே செய்யவேண்டியது என்பதுகீதையின் தர்மமாயிருக்கின்றபடியாலும், அதுவும் ஒவ்வொரு தொழிலும் பண்டைக்காலத்தில் நடந்தமாதிரியாகவே நடக்கவேண்டும் என்கின்ற கொள்கை கொண்ட மகாத்மா காந்தியிடமே தொழில் திட்டம் இருப்பதாலும் நமது நாட்டுத்தொழில்முறை ஒருநாளும் சீர்பட முடியாதென்றே சொல்லுவேன் என்றுசொல்லி இயந்திர மேன்மைகளைப்பற்றியும் கதரின் கெடுதியைப்பற்றியும் வெகு தெளிவாகவும் விஸ்தாரமாகவும் பேசினார்.

தீர்மானங்கள் முடிந்தவுடன் திரு ஈ. வெ. இராமசாமி இயக்கத்தின் நோக்கம் என்று பேசினார். பிறகு திரு. பொன்னம்பலனாரால் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு மகாநாடு இரவு 8 மணிக்கு இனிது நிறைவேறியது.

தலைவர் மறுப்பு.

லால்குடி சுயமரியாதை மகாநாடு சம்பந்தமாய் 'இந்தியா' 'திராவிடன்' பத்திரிகைகளுக்கு தலைவர் மறுப்பு:--

லால்குடி தாலூகா சுயமரியாதை மகாநாட்டைப்பற்றி சில பத்திரிகைகளில் வெளிவந்த விவரங்கள் சில உண்மைக்கு மாறுபட்டிருப்பதால் அவற்றைப்பற்றிய அடியில்கண்ட விவரங்களைப் பிரசுரிக்க வேண்டுகிறேன். கதர் மறுப்பைப்பற்றிய தீர்மானத்தின் வாசகம் பின்வருமாறு:-

[1] 'தற்காலம் இந்திய தேசத்தில் காங்கிரஸ் மகாசபையின் ஆதரவில் மகாத்மா காந்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்துவரும் கதர் பிரசாரமும், கதர் உற்பத்தி விற்பனை வேலைகளும் நமது தேசத்தின் நாகரீக அபிவிருத்தியைத் தடைப்படுத்துவதாலும்,

[2] மக்கள் வாழ்க்கையில் அவரவர் தேவைக்கு அவரவரே உழைத்து மற்றவர் கூட்டுழைப்பைக் கருதாமல் ஒவ்வொருவரும் தனித்து நிற்கவேண்டுமென்றும் பிற்போக்கான கொள்கை கதர் வேலைக்கு அடிப்படையாயிருந்து மற்ற தேசத்து மக்கள் கூட்டுழைப்பு மூலம் தொழிலபிவிருத்தி செய்து முன்னேறும் பொழுது நமது மக்களை தனி வாழ்வு மூலம் மிருகப் பிராயத்தை அடையும்படி செய்துவருவதாலும்,

3 யந்திரசாலைகளைப் பகைத்து தொழில் விவசாய முறையில் யந்திர வளர்ச்சியைத்தடுத்து மனிதப் பிரயாசையை அதிகப்படுத்தும் முறைகளைக் கையாள ஏவுவதால் கதர் வேலை மனித வாழ்க்கையில் ஓய்வுக்கும் அறிவுவளர்ச்சிக்குமான நேரத்தைக்குறைப்பதாலும்,

[4] இந்த மகாநாடு கதர் இயக்கத்தைக் கண்டிப்பதோடு இந்தியாவில் துணிகளை உடுத்தவும் யந்திரங்களை வளர்க்கவும் கூட்டுத்தொழில் முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்தவும் தீவிரமாக முயலவேண்டுமெனத் தீர்மானிக்கிறது".

மேற்கண்ட தீர்மானம் மகாநாட்டில் விவாதிக்கப்படும்பொழுது திரு. எல். எஸ். ஆறுமுகன் காந்தீயத்தை ஆதரிப்பதாக ஒரு தீர்மானத்தை எழுதியனுப்பினார். காந்தீயத்தை மறுக்கும் தீர்மானமொன்று விவாதத்திலிருக்கும் சமயத்தில் காந்தீயத்தை ஆதரிக்கும் தீர்மானமானது திருத்தமாகவாவது எதிர்ப்பாகவாவது விவாதிக்கப்பட வேண்டுமேயொழிய காந்தீயத்தை மறுக்கும் தீர்மானம் ஓட்டுக்கு விட்டு நிறைவேறிய பிறகு பிரேரேபிக்க முடியாது என்பது பொதுக்கூட்ட நடை முறைகளில் அனுபோகமுள்ளவர்கள் ஒத்துக்கொண்டே தீருவார்கள். திரு. ஆறுமுகன் அவர்கள் தனது தீர்மானத்தை திருத்தமாக பிரேரேபிக்காமலும் தனது தீர்மானத்துக்குவிரோதமான ஒரு தீர்மானம் விவாதத்திலிருக்கும்பொழுது தான் அதை எழுந்து எதிர்க்காமலுமிருந்துங்கூட அவருக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தினால்தான் அவருக்குப் பேச நாலாக வலிய அனுமதி கொடுத்தேன். அந்த சந்தர்ப்பத்தையும் உபயோகிக்க அவர் தவறிய பிறகு தலைமை வகித்தவரைக் குற்றஞ் சொல்லுவதற்கு இடமுல்லை.

மகாநாட்டில் சிலர் கூச்சல் போட்டதாகவும் வெளியேறினதாகவும் தங்கள் நிருபர் கூறுகிறார். காங்கிரசில் பற்றுக்கொண்ட சிலர் மகாநாட்டுக்கு வந்திருந்த போதிலும் ஆறுமுகன் உட்பட அவர்கள் யாவரும் கடைசிவரையில் அமைதியுடனும் மரியாதையுடனுமே நடந்து கொண்டார்கள்.

தங்கள் நிருபர் நான் லங்காஷயர் துணி உடுத்திருந்ததாகக் கூறுகிறார். திரு. இராமசாமியவர்கள் பேச்சில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தும் இம்மாதிரி திரித்துக் கூறுவது அழகல்ல. நான் அன்னியத்துணி அணிந்திருக்கவில்லை. இந்தியாவிலுள்ள ஆமதாபாத் நகரத்து சுதேசி ஆலையொன்றில் தயார் செய்யப்பட்ட துணியையே உடுத்தியிருந்தேன்.

தேசிய சுயமரியாதைச் சங்கத்தைப்பற்றிய விவரங்களை தங்கள் பத்திரிகையில் கண்டு சந்தோஷிக்கிறேன். காங்கிரஸ் தேசியமும் சுயமரியாதையும் ஒன்று சேர முடியாதென்பது எனது அபிப்பிராயம். ஆனால் அந்த பரீக்ஷையும் செய்து பார்க்க முன்வரும் வாலிபர்களை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எஸ். இராமநாதன்,
மகாநாட்டுத் தலைவர்.

ளைக் கூடிய சீக்கிரத்தில் செய்கையில் செய்துகாட்டாவிட்டால் சுயமரியாதைக்காரர்கள் ஆதி திராவிடர்களின்மீது அனுதாபம் இருப்பதாகச் சொல்வது அயோக்கியத்தனமாக முடியும்.

ஹிந்து முஸ்லீம் பிணக்குகள்.

தற்கால அரசியல் நிலைமையில் மிகவும் வருந்தத்தக்கதும், இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருப்பதும் ஹிந்து முஸ்லீம் பிணக்குகளே. சமீப காலமாகத்தான் இந்த சச்சரவுகள் அதிகப்பட்டு வருகின்றன. தற்காலத்தில் நம்நாட்டில் வழங்கப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களும், இனி வழங்கப்போகும் சீர்திருத்தங்களும்தான் இந்த இரண்டு சமூகத்தினிடையே பிளவுகள் உண்டாவதற்கு ஏற்பட்ட காரணங்கள் என்பதில் சந்தேகம் கிடையாது.

அடுத்தபடியாக நமது இயக்கம் இந்திய மாதர்களின் அடிமை விலங்கை அறுத்தெறிய இனி தீவிரமாகவும் மும்மரமாகவும் பாடுபடவேண்டும். மாதர்கள் விடுதலை அடையும்பொழுதுதான் பாரதமாதா விடுதலை அடைவாள். பெண்களின் உரிமைகளை அவர்களுக்குத் திரும்ப வாங்கிக்கொடுப்பதுதான் சுயமரியாதைக்காரர்களின்முக்கிய பிரச்சினையாகவேண்டும்.

சுயமரியாதை உணர்ச்சி உள்ள வாலிப உலக எழுச்சியினால் 1940ம் ஆண்டிற்குள் இந்தியாவானது நவீன இந்தியாவாகவும், சீர்திருத்தப்பட்ட இந்தியாவாகவும், உண்மைச் சுயமரியாதைததும்பும் இந்தியாவாகவும் தோன்றும். எனது வாலிப சகோதரர்களே! அந்த புனிதமான திருநாளை நாம் எதிர்பார்ப்போமாக.

பெரியோர்களே! இனித்தலைவர் அவர்களின் அருமையான பிரசங்கத்தையும் அன்பர் பலரின் அரிய சொற்பெருரைகளையும் ஆர்வமுடன் செவிமடுக்கக் காத்துக்கொண்டு இருக்கும் உங்கள் மத்தியில் மேலும்மேலும் பேச விரும்பவில்லை. மகாநாட்டிற்கு வந்திருக்கும் அன்பர்களுக்கு மீண்டும் நல்வரவு கூறுகின்றேன்.

இது முடிந்த உடன் திரு. எஸ். ராமநாதன் எம். ஏ., பி. எல்., அவர்களை, தலைவராக திரு. பொன்னம்பலம் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டு கரகோஷத்துடன் ஆசனத்தமர்ந்ததும் திரு. செல்வக்கணபதியார் அவர்கள் தலைவர் திரு. ராமநாதன் அவர்களுக்கு ஒருஉபசாரப் பத்திரம் படித்துக் கொ த்தார். திரு ராமநாதன் அவர்கள் உபன்யாசம் தனியாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

நிறைவேறிய தீர்மானங்கள்:

1. "திராவிடன்" கௌரவ ஆசிரியரும் சமூக சீர்திருத்த வாதியும் பார்ப்பனரல்லாதாரியக்க அன்பருமாகிய உயர் திரு மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களின் மரணத்தைக்குறித்து வருந்துவதோடு அவர் தம் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. (அ) தற்காலம் இந்திய தேசத்தில் காங்கிரஸ் மகா சபையின் ஆதரவில் மகாத்மா காந்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்துவரும் கதர்ப் பிரசாரமும், கதர் உற்பத்தி, விற்பனை வேலைகளும் இந்திய நாகரீக அபிவிர்த்தியை தடைப்படுத்துகிறபடியாலும்.

(ஆ) மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அவரவர் தேவைக்கு அவரவர்களே தனித்து நின்று உழைத்து மற்றவர் கூட்டுழைப்பைக் கருதாதிருக்கவேண்டுமென்றும் பிற்போக்கான கொள்கை கதர் வேலைக்கு அடிப்படையாயிருந்து மற்ற தேசத்துமக்கள் கூட்டுழைப்பு மூலம் தொழில்களை அபிவிருத்தி செய்து முன்னேறும் இக்காலத்தில் நமது நாட்டு மக்களைத்தனித்த வாழ்க்கையின் மூலம மிருகப்பிராயத்தையடையும்படி செய்வதாலும்,

(இ) இயந்திரசாலைகளைப் பகைத்துதொழில்விவசாயமுறைகளில் இயந்திரவளர்ச்சியைத்தடுத்து மனிதப்பிரயாசையை அதிகப்படுத்தும் முறைகளைக் கையாளுவதின் மூலம் கதர் வேலை மனிதவாழ்க்கையில் ஓய்வுக்கும், அறிவுவளர்ச்சிக்குமான நேரத்தைக்குறைப்பதாலும்,

(ஈ) இந்த மகாநாடு கதர் இயக்கத்தைக்கண்டிப்பதோடு இந்திய மில் துணிகளை உடுத்தவும். இயந்திரங்களை வளர்க்கவும், கூட்டுத்தொழில் முறைகளைக்கையாளவும் மக்களிடை தீவிர பிரசாரஞ்செய்யவும் தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர் செல்வக்கணபதி, ஆதரிப்பாளர்கள் பரமசிவம், ஈ. வெ. இராமசாமி.

3. "திருச்சினாப்பள்ளி தாலூகா கூத்தப்பார் கிராமத்தில் சில சுயநலக்காரர்கள் ஆதிதிராவிடர்களின் உரிமைகளை மறுத்து அவர்கள் நடை உடை பழக்கவழக்கங்களில் அக்கிரமமான கட்டுப்பாடுகள் ஏற்படுத்தி அவர்களுக்கு கொடுமைப் புரிவதை இந்த மகாநாடு கேள்விப்பட்டு வருத்தமடைகிறது. அரசாங்கத்தாரை உடனே இதை விசாரித்து ஆதிதிராவிடர்களின் உரிமைகளை பாதுகாக்கும்படி அரசாங்கத்தாரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

4. திருச்சினாப்பள்ளி ஜில்லா போர்டார் ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்கு அனுதாபம் காட்டுவதற்காக நன்றியை செலுத்துவதுடன் லாலுகுடி ஹைஸ்கூலில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு பள்ளிக்கூடஉபாத்தியாயர்களால் சம உரிமை வழங்கப்படவில்லை என்ற புகாரை தயவு செய்து கவனித்து இனிமேல் இவ்வித புகாருக்கு இடமில்லாமல் கவனித்துவேண்டுவனசெய்யவேண்டுமென்பதாகநாண்ட்டமைக் கழகத்தவரைஇந்தமகாநாடுகேட்டுக்கொள்ளுகிறது.

கோவை வேளாளர் சங்கம்

வருஷாந்திரப் பொதுக்கூட்டம்.

நமது சங்கத்திலிருந்து கவர்ன்மெண்டாருக்கும் ஜில்லாபோர்டுக்கும் கிராமபுனருத்தாரண பண்டிலிருந்து (Rural Reconstruction Fund) பணத்தை விவசாய அபிவிர்த்திக்காக உபயோகிக்கவேண்டுமென்று எழுதியிருந்த விஷயமாகவும் மேலு தேசத்தில் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் விவசாய கஷ்டங்களை நீக்குவதன் பொருட்டும், 8வது சர்க்கிள் விவசாய டிப்டி டைரெக்டரவர்கள் நமது சங்கத்து மெம்பர்களுடனும், ஜில்லா போர்டு மெம்பர்களுடனும் ஆலோசனை செய்ய ஆவலாயிருக்கிறார். கள து ஜூன் 1-ம் தேதி திருப்பூர் கண்காக்ஷி மண்டபத்தில் இதையும், செக்ரெட்டரியவர்கள் கொண்டுவரும் இதர விஷயங்களையும் யோசனை செய்யப்படும். மீட்டிங்கு சமயம் பகல் 4.30 மணி.

V. C. வெள்ளிங்கிரி கவுண்டர்
கௌரவ காரியதரிசி.

கோயமுத்தூர் முனிசிபல் சபை உயர் திரு. C. S. இரத்தினசபாபதி முதலியாருக்கு வாழ்த்து.

கோவை முனிசிபல் சபையின் சாதாரண கூட்டமொன்று 22-5-31, 5-மணிக்கு திவான் பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களின் தலைமையில் நடைபெற்று பல முக்கிய விஷயங்கள் வாதிக்கப்பட்டபிறகு அக்கூட்டம் மீண்டும் உபதலைவர் திரு. வி. அருணாசலம் செட்டியார் அவர்களின் தலைமையில் நடந்தது. அவ்வமயம் பின்வரும் தீர்மானம் திரு. கே. இராமசாமி ஐயர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

"இந்த சபைக்காக எலக்டிரிக் லைசென்சு பொறுப்பையும், தங்களுக்காக லைசென்ஸ் பெறுவதற்குச் செய்த தனிப்பட்ட காரியங்களையும் செய்வதற்கு திவான் பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கும், உழைப்புக்கும் இச்சபை மிகவும் நன்றி பாராட்டுகிறது"

சிவகெங்கையில் திரு. எம். சி. ராஜா.

குதூகலமான வரவேற்பு

இராமனாதபுரம் ஜில்லா தாழ்த்தப்பட்டவர் மகாநாட்டிற்கு தலைமை வகிக்க இராமனாதபுரத்திற்கு போட்மெயிலில் 22-5-31 தேதியன்று ராவ் பகதூர் எம். சி. ராஜா, எம். எல். ஏ. அவர்கள் செல்லும்பொழுது சிவகெங்கை, கொட்டகுடி முதலிய கிராமங்களிலுள்ள ஆதிதிராவிட ஆண், பெண் சிறுவர், சிறுமி முதலியவர்களும், மற்றும் பலரும் 'ஜே' சப்தத்துடன் அன்னாரை சிவகெங்கை ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்று சிவகெங்கை தாழ்த்தப்பட்டவர்களின் சார்பாக திருமதி முத்துலக்ஷ்மி என்னும் ஆதிதிராவிட மாணவியால் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

கோட்டாறு.

சுயமரியாதை வாசிப்புசாலை:—

ஷை வாசகசாலையின் கூட்டமொன்று 22.5.31ல் வாசகசாலையின் கட்டடத்தில் திரு ஆ சுப்பையா அவர்களின் தலைமையில் கூடி "சுதந்திரம் சத்தியாக்கிரகத் தொண்டரும், சிறந்த சுயமரியாதை வீரருமான திரு. கோ. கணபதி அவர்களின் அகாலமரணத்திற்காக இவ்வாசகசாலையார் வருந்துவதோடு, அவரது குடும்பத்திற்கும் தங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது" என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறி, கூட்டம் இனிது கலைந்ததென வாசகசாலையின் காரியதரிசி எழுதுகிறார்.

கருந்திட்டைக்குடி.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை:—

ஷை சங்கத்தார் ஓர் அனுதாபக்கூட்டம் கூடி, உயர் திரு. மணி-திருநாவுக்கரசு முதலியாரவர்களின் அகால மரணத்திற்காக வருந்துவதாகவும், அன்னவரது குடும்பத்தாருக்கும், அன்பர்களுக்கும் தங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுவதாகவும் ஓர் தீர்மானம் நிறைவேற்றியதாக ஷை சங்கத்தின் அமைச்சரொருவர் எழுதுகிறார்.

ஈப்போ.

சுயமரியாதைத்திருமணம்:—

3-5-31ல் ஈப்போ துரோணம் திரு. கோவிந்தசாமிக்கும் திருமதி. மாரிமுத்துக்கும் ஈப்போ ஆதிதிராவிட மகாஜன சார்பில் சிறப்பாக சுயமரியாதைத் திருமணம் நடந்தேறியது. அவ்வமயம் பல அறிஞர்கள் சுயமரியாதைத் திருமணத்தைப பற்றி சொற்பொழி வாற்றினார்களென ஷை சபையின் உபகாரியதரிசி எழுதுகிறார்.

மதுரை.

சர்வ ஜன சகாயசங்கம்:—

28-5-31ல் ஷை சங்கத்தின் நிர்வாகக்கூட்டமொன்று மதிச்சியம் ரோடு 62 நெ கட்டடத்தில் கூடி, அனாதைகளின் சிசுபரிபாலனம் கல்விவிர்த்தி, விவாக சுபகாரியம், பிரசவ உதவி ஆகிய தருமகைங்கரியங்களை விருத்திக்கு கொண்டுவரவேண்டுமென்றும்: அதற்காக சங்கத்தின் நிதியை விருத்தி செய்வதற்காக ஓர் அதிருஷ்ட சீட்டு நடத்துவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றிக் கூட்டம் இனிது கலைந்ததென ஷை சங்கத்தின் காரியதரிசி எழுதுகிறார்.

கிளியனூர்.

புரோகிதமில்லா இறுதிச்சடங்கு:—

திண்டிவனம் தாலூகா கிளியனூர் போர்டு ஆதிதிராவிட ஸ்கூல் தலைமை உபாத்தியாயர், திரு. கே. நாராயணசாமி அவர்கள் தமது மனைவியார் திருமதி செங்கம்மாள் 16-5-31ல் காலமானதை முன்னிட்டு, யாதொரு கிரியையும், புரோகிதச்சடங்குமின்

...நிறைவேற்றிய தாகவும் குடியரசுக்கு ரூ1-0-0 நன்கொடை அளித்ததாக ஒரு நிருபர் எழுதுகிறார்.

(வந்தனத்துடன், நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.) (ப.—ர்)

பாக முஸ்லீம் சமூகத்துக்கும் ஈடு செய்ய முடியாத பெரிதோர் நஷ்டம் என்றும் தெரிவித்து, இறந்துபட்ட அன்னார் குடும்பத்தினருக்கு மிக்க அனுதாபத்தைக் காட்டிக்கொள்ளுகிறது என செக்ரெட்ரி ஆ. ஜி. முகம்மதயூசுப் எழுதுகிறார்.

வாணியம்பாடி மனம் பதைக்கும் முஸ்லீம்களின் கண்டனக் கூட்டம். தீர்மானங்கள்

டிரிப்போலி என்ற இடத்தில் கிராமவாசிகளான அருமை அராபியர்கள் 80000 பேரை, குலை நடுக்குறும் வடிவங்கொண்ட கொலையாயுதங்களைக்கொண்டு ஈவு இரக்கம் பூததயை, பச்சாதாபம், எனும் மானிடஅம்சங்கள் குன்றி பெண்டு, பிள்ளை கிழம் கிட்டு என்ற பேதம் காட்டாது இரத்த தாகம் கொண்ட பிசாசுகளென உதிரம் குடிக்கும் வன மிருகங்களாய் நாகரீக உலகமஉளம்கொதித்து வெய்சிவிர்க்கும் கண்ணம் மான பங்கம், சித்திரவதை, கொலை, களவு, தீக்கிரையாக்கல், முதலிய பஞ்சமா பாதகங்களுள் பெரும் பகுதியாயின வற்றைச்செய்து, நாடுகடத்தி, மக்கள் வெய்யோன் கொடுமைக்கும், பசிப்பிணிக்கும் ஆளாகி வாடி, வதங்கி, பாலைவனத்தில் அகோரமரணத்தையடையச்செய்த மகா கொடூர செய்கையைமிகவும்வெறுத்துக் கண்டித்து அல்லல்படும் அராபிய வீரமக்களுக்கு அருள்புரியுமாறு அல்லா-ஹுத்தஆலாவை வேண்டி அம்மக்களுக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. இக்கூட்டம் காண்பூர்வாசியான தீர புருஷன் மௌலானா மௌல்வி அவ்ஹாஜ் முப்தி கிலா அஹமத்சாயபு அவர்கள் இறந்துபோனதற்கு தாங்கொணாபிரிவாற்றாமை என்றும், அப்பெரியாரது நீக்கம் பொதுவாக இப்பாரத நாட்டுக்கும், குறிப்...

சுயமரியாதைத் தலைவர்கள்.

நமது சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் உயர்திரு இராமசாமிப் பெரியார், உயர்திரு சௌந்திரபாண்டியன் ஆகிய இருவர்களின் போட்டோக்களையும் தனித்தனியாக 1¼" சைசில் (Real Photo) உண்மையான போட்டோ பேட்ஜுகளை செய்து வெளியிட்டிருக்கிறோம். இதர தலைவர்களின் போட்டோ பேட்ஜுகள் சமீபத்தில் வெளியிடப்படும். விலை விபரங்களுக்கு எழுதவும். மாதிரிக்காக தேவையுள்ளோர் 4 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால் மறுதபாலில் அனுப்பப்படும்.

விலாசம்:—

அ. ப. அர்த்தநாரி & பிரதர்
ஜலகண்டாபுரம்,
(சேலம் ஜில்லா)

M. S. சித்தர்பார்மஸி

இதில் சகல மருந்துகளும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.
எலி, நாய் முதலிய விஷப்பூச்சிகடிகளினாலுண்டாகும் புண், வீக்கம், தடிப்பு, ஊரல், சுரம் குணமடையும். விஷமை 3 நாளைக்கு ரூ. 2.
Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
கோவில்பட்டி, S. I. R.

ஓர் அதிர்ஷ்ட ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெயை உபயோகியுங்கள்.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்று தர்மார்த்தமாக குறைந்த விலைக்கு வெளியிட்டு வருகிறது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, சொப்,—வித்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, தொனரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, குதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் சொப் குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (விரிக்கின் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் கம், பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெ சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள் பாலிய தேகசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியக்ஷம்.

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள தூர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறைந்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் பிரம்ம முடிகோஷாயி மேக எண்ணெ கொண்ட சீசா 1க்கு ஏழைகளுக்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும் வேண்டும்.

பிரம்மமுடி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

தீர்வுக்கெனக்கில் துயமைப்பட்வதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதனம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல் அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல் குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0, தபால் கூலி அணா 4.

ப்ரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேத்தா & Co., 234, சைனாபஜார் ரோட் மதராஸ்.
வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

அகஸ்தியர் ஆராய்ச்சி.

அகஸ்தியர் ஆராய்ச்சி என்னும் புத்தகம் ஒரு தெளிவானதும் மிக்க ஜாக்கிரதையானதுமான ஒரு ஆராய்ச்சி நூலாகும். இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலை வல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும். மக்கள் இந்த ஆராய்ச்சி ஒன்றைப்படித்தாலே இந்துமத சம்மந்தமான எல்லாப் புரட்டுகளும், புராணப்புளுகுகளும், தமிழ் இலக்கண இலக்கிய சம்பந்தமான புரட்டுகளும் சங்க சம்மந்தமான புரட்டுகளும், பல பண்டிதர்கள் நூலாசிரியர்கள் ஆகியவர்கள் புரட்டுகளும் வெளியாகிவிடும். திரு. கா. நமச்சிவாய முதலியார் உருவப்படத்துடன் கூடியது.

விலை அணா 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யைத்தொடலாமா? அவைகளைத்தொட்டால், ஏன் ஸ்நானம் செய்கிறதில்லை?

இப்படிப்பட்ட வித்தியாசத்திற்கு கடவுள்தான் காரணம் என்று சொல்லுவதானால் உண்மையில் அப்படிப்பட்ட கடவுள் நமக்குவேண்டியதில்லை. அப்படிப்பட்ட ஓர்வஞ்சனையுள்ள கடவுளை நாம் வணங்க வேண்டியதுமில்லை.

இந்து மதமும் சமதர்ம கொள்கையும்

உலகத்திலுள்ள பல தேசங்களிலும் ஆங்காங்குள்ள பலமதங்களும், ஏழைகளுக்கு விடுதிகளும், ஏழைப்பிள்ளைகள் படிக்கப்பாடசாலைகளும் ஏற்படுத்தி, ஆதரித்து வருகிறார்கள். ஆனால் நமதுதேசத்தில் இந்து மதசாஸ்திரத்தின்படி ஒரு கூட்டத்தாருக்கு மாத்திரம் சத்திரங்கள், சாவடிகள் சொந்தமென பாவிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர்களாகிய நம்மை அடித்தாலும் பாவமில்லை. வேலைவாங்கிக்கொண்டுகூலிகொடுக்காவிட்டாலும் பாவமில்லையென்றும் நாம் அதிகதாகமாக இருக்கும்போது தண்ணீர்கொடுத்தால் மாத்திரம்பாவமென்றும்தோஷமென்றும் சாஸ்திரம் போதிக்கிறது. ஆனால் ஒரு ஜாதியாருக்கு மாத்திரம் மற்ற சகல ஜாதியர்களும் சம்பாதிக்கும் சகல சொத்துகளையும் கொடுக்க வேண்டும். அப்படிக்கொடாவிட்டால் பாவம், தோஷம் உண்டாகுமென்றும் சாஸ்திரம் போதிக்கிறது. இப்படிப்பட்ட பாழும் சாஸ்திரமும், அதர்மமும் எவ்வளவு காலத்திற்கு நிலைநிற்கும். இப்படிப்பட்ட அக்கிரமத்தை பொருமையுடன் கடவுள் ஏன் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

ஸ்தலயாத்திரைசெய்யவேண்டுமா?

அநேக ஸ்தலங்களுக்குப்போய் காசைக்கொடுத்து விட்டு ஏமாந்துபோய் வருகிறவர்கள் நம்மைப்போல் யாருமில்லை. நாம் சாமிக்கு சமீபத்தில்போனால் சாமி தீட்டாய்ப்போய்விடுமென்று அடிக்கிறார்கள். அந்த சாமிக்கு நமது காசு ஏற்குமா? நாம்நீசர்களாயிற்றே. நீசர்களுடைய சொத்து அந்த சாமிக்கு ஏற்குமா? நமக்கு வியாதி, துன்பம் வரும்போது அப்படிப்பட்டக்கஷ்டத்தை நீக்கிக்கொள்ள வேண்டிக்கொள்ளுகிறோம். காணிக்கை செலுத்துகிறோம். நமக்கு உண்டாகும் சகலவியாதிகளையும் காணிக்கை மூலமாய்த்தீர்த்துக்கொள்வதானால்வைத்தியர்கள் ஏன்? ஆஸ்பத்திரி ஏன்? இவைகளை ஏன் தேடவேண்டும்? நமக்கு உண்டாகும் வியாதியை நீக்கப்பிரார்த்தனைதலைமயிர்கொடுப்பது மூலமாகவும்செய்துகொள்ளுகிறோம். அவ்வாறு தலைநிறைய மயிர் வைத்துக்கொண்டு சுத்தம்செய்யாமல்சடைஉண்டாகிவிட்டால் சடையன் என்று பெயர் வைத்துக்கொள்ளுகிறோம். நமது வியாதியை நமது மயிர் மூலமாக சாமிபோக்கினால் பிராமணர்களுக்கு வரும்வியாதியை ஏன் மயிர் மூலமாகப்போக்கவில்லை?

அவர்கள் ஏன் மயிர் மூலமாக வேண்டுதல் செய்யவில்லை? இப்படிப்பட்ட மூடப்பழக்கங்களை பின்பற்றி நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை ஏன் உண்டியலுக்கும், ஆண்டிக்கும் போடவேண்டும்? மற்றவர்கள் சாப்பிட்டுக் கொழுக்கும்படி ஏன் செய்யவேண்டும்? ஓர வஞ்சனையுள்ள சுவாமியை வேண்டும் என்று தேடிக்கொண்டு போயும் அந்த சாமிகள் ஏன் நம்மைத்துரத்தி அடிக்கச்செய்கிறது? அடிப்பவர்களிடம், "அவர்களை அடிக்கக்கூடாது. அவர்களும் என்னால் உண்டாக்கப்பட்டவர்கள்தான், அடிக்கவேண்டாம்" என்று கனவிலாவது அவர்களிடம் சொல்லக்கூடாதா?

நம்மைவிடக்கேவலமானநாய், பன்றிமுதலிய மிருகங்கள் அந்த சாமிகளிடம போனால் தீட்டுப் படுகிறதில்லை. செத்துப்போவதில்லை. மலைகளிலுள்ள கற்களை வெட்டி மந்திரம் சொல்லி உயிர் கொடுக்கிறார்களே! அப்படிப்பட்ட வல்லமையுள்ளவர்கள் நம்மேல் அந்த மந்திரத்தை விட்டு நமது தீட்டைப்போக்கக்கூடாதா?

மகாத்மாகாந்தி ஒருகாலத்தில் பெங்களூரில் பேசியபோது "ஆதிதிராவிடர்களை நுழைய அநுமதிக்காத கோவில்களில் தெய்வம் இல்லை" யென்று சொன்னார். வடஇந்தியாவில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்து பிரச்சாரம் செய்யும்போது 'தெய்வம் ஒவ்வொருவனுடையமனதிலும் இருக்கிறது. ஆதலால் கோவிலுக்காக சத்தியாக்கிரகம் செய்யவேண்டியதில்லை' யென்று சொல்ல ஆரம்பித்து விட்டார். இப்படிப்பட்ட தேசியவாதியும் மகாத்மாவும் இருக்கிற வரையில் நாம் எவ்வாறு விடுதலையடைய முடியும்?

சுயராஜியமும், தாழ்த்தப்பட்டவர்களும்.

ஆங்கிலேயர்களுடைய அரசாட்சியை அடிமைத்தனமாகப் பாவித்து, அவ்வடிமைத்தனத்தில் இருந்து விடுதலையடைந்து சுயராஜியம் பெறவேண்டுமென்று கூவித்திரியும் காந்தியாரும், அவரது தொண்டர்களும் இந்தியாவில் 6 கோடி தாழ்த்தப்பட்டவர்களை மிருகங்களைவிடகேவலமாக நடத்திக்கொண்டு வருவது நியாயமா? இங்கிலீஷ்காரர்களிடம் சுயராஜியம் பெறுவதற்குமுன் தாழ்ந்த மக்களுக்குச் சுயராஜியம் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. நமது இந்தியாவுக்குப் பூரண சுயராஜியம் கிடைப்பதைப்பற்றி எங்களுக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் தீண்டாதவர்களென்றும், தாழ்த்தப்பட்டவர்களென்றும் 6 கோடி மக்களின் குறைகளைத் தீர்க்காமல் சுயராஜியம் பெறுவது சரியல்லவென்றும், பெற்றபோதிலும் அது நிலை நிற்காது என்றும் நாங்கள் சொல்லக்கூடும். இந்திய சட்டசபையில் நமது மாபெரும் தலைவர் எம். சி. ராஜா கடந்த 4 மாதங்களுக்குமுன் கூறியதின் கருத்து என்னவென்றால்:—

"தீண்டாமையை ஒழிக்காமல் சுயராஜியம் பெறமுடியாது. அவ்வாறு சுயராஜியம் வந்தபோதிலும் நிலைக்காது என்று திரு. காந்தியவர்களும், லாலாலஜபதிராய் முதலியவர்களும் திட்டமாய்ச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஆனால் திரு. காந்தியாரும், அவரது தொண்டர்களும் தீண்டாமை விலக்கல் என்னும் திட்டத்தை மறந்து விட்டார்கள்." வெள்ளைக்காரர்களிடம் சுயராஜியம் பெற இந்தியர்கள் எவ்வாறு சத்தியாக்கிரகம் செய்துகொண்டு வருகிறார்களோ, அதைப்போல் தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவம் பெற எவ்வாறு போராடவேண்டுமென்று இந்தியர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டார்கள். ஆகையால் வெள்ளைக்காரர்களிடம் சுயராஜியம்பெறபோராடுவதுபோல் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்தியர்களுடன் சத்யாக்கிரகம் செய்து போராடத்தயாராக இருக்கிறார்கள்.

சுயராஜ்யம் பெற விரும்பும் கனவான்களே! சுவாமி விவேகாநந்தர் சொல்வதைக் கேளுங்கள்:—

"ஒரு இரத்தத்தில் இரத்தமும், சதையில் சதையுமாகிய நமது இந்தியசகோதரர்களில் ஒரு கூட்டத்தாரை தீண்டாதவர்களென்றும், தாழ்த்தப்பட்டவர்களென்றும், ஒதுக்கிவைத்து கொடுமைப்படுத்திக்கொண்டு வருகிறோம். அவர்கள் படும் கஷ்டத்தையும், நிலைமையையும், ஆழ்ந்த கருத்துடனும், பரஸ்பர அன்புடனும், நினைக்கும்போது தூங்கமுடியவில்லை. இளைப்பாற நேரமில்லை" என்று சொல்லியிருக்கிறார். சுயராஜியம், சுயராஜ்யம், என்று கத்தி திரியும் காங்கிரஸ் வாதிகளே! சுவாமி அவர்கள் சொல்வதுபோல் உண்மையில் நீங்கள் நாங்கள் நடத்தப்படுவதும், நாங்கள் படும் துயரமும், உணர்ந்தவர்களாயிருந்தால் எங்களை மறந்து சுயராஜ்யம் சுயராஜ்யம் என்று பேசுவீர்களா?

நமது முன்னேற்றம்.

நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால் நமது சுயமுயற்சிகளே நம்மை முன்னேற்ற மடையும்படி செய்யும். நம்மிடத்திலுள்ள கோழைத்தனத்தை நீக்கி நாமும் மற்றவர்களைப்போல் மனிதர்கள்தான் என்பதையும், இந்திய சகோதரர்கள்தான் நம்மைத் தாழ்த்தப்பட்டவர்களாகச்செய்தார்களே யொழிய வேறு நாட்டாரோ கடவுளோ நம்மை ஒரு தாழ்ந்த ஜாதியாகச் செய்யவில்லை என்பதையும் நமது மனதில் பதியச்செய்துகொண்டு அவர்களோடு போராடவேண்டும். நம்மைத் தாழ்ந்தவர்கள் என்றும், கேவலமானவர்களென்றும் காட்டுவதற்காக மற்றவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நகைகள் அணிதல், நெற்றியில் பச்சைகுத்துதல், நடை உடை, பாவனை முதலியவைகளை நாம் மாற்ற வேண்டும். "கந்தையானாலும் கசக்கிக்கட்டு கூழானாலும்குளித்துக்குடி" என்னும் பழமொழிப்படி நாம் சுத்தத்தை அநுசரிக்கவேண்டும். கோமாமிசம் புசித்தலை அடியோடு ஒழிக்கவேண்டும். "எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியில் கற்றோரை மேல்வருக என்பார்" என்பதைப்போல் நமது பிள்ளைகளை கட்டாயம் படிக்கவைக்கவேண்டும். கலியாணத்தில் வீண்செலவு செய்வதை அடியோடு ஒழித்து கடன்வாங்கி நமது பிள்ளைகளை காலமெல்லாம் அடிமைத்தனத்தில் இருக்கும்படி செய்வதை அடியோடு ஒழிக்கவேண்டும். நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை சுவாமிபேரைச்சொல்லிக் கொண்டு உண்டியில் போட்டு மற்ற ஜாதியாரைத்தின்று கொழுக்கும்படி செய்யும் வழக்கத்தை அடியோடு நிறுத்த வேண்டும். குடியை அடியோடு ஒழிக்கவேண்டும். நமது சுவாமிகளின் பெயரால் சுவாமிக்கு வைத்துப் படைத்துக் குடிக்கும் வழக்கத்தையும், மற்றும் பல வீண்செலவுகளையும், அடியோடு நிறுத்த வேண்டும். என்று பேசினர்.

தலைவர் திரு. T. M. நாராயணசாமிபிள்ளை அவர்களின் முன்னுரை.

சகோதரிகளே! சகோதரர்களே!!

என்னைத்தலைவராக எடுத்ததற்கு வந்தனம், நான் அதிகமாகச் சொற்பொழிவாற்றத் தயாராயில்லை. வரவேற்புப் பிரசங்கம் நன்றாக இருக்கிறது. தற்காலம் சொற்பொழிவுகளுக்குக் குறைவேயில்லை, இதனால் பயனில்லை; காரியத்தில் நடத்த வேண்டும்.

சுயராஜியக்கிளர்ச்சி

நாடு உங்களுடையது, மற்றகுடிகளுக்குள்ள பங்குஉங்களுக்குமுண்டு. ஆனால், உங்கள் சுதந்திரங்களை நீங்கள் அடையவில்லை-காரணம் நீங்கள் அல்ல. வரப்போகும் சுயராஜியத்தில் உங்களுக்குத்தக்க ஏற்பாடு செய்து இருந்தால் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். தாழ்த்தப்பட்டவர்கள் சுதந்திரத்துக்கு புதிய அரசியல் சீர்திருத்தத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தியாவில் பெரும்பான்மையோர்களால்துன்பப்படும்உங்களுக்கும்,சிறுபான்மைவகுப்பாருக்கும்பாதுகாப்பு இல்லாவிட்டால் சுயராஜியத்தில் பிரயோஜனமில்லை. இதுவரை உங்கள்மீது யாதொரு கவனமும் செலுத்தப்படவில்லை. கிறிஸ்துவபாதிரிகள் தங்கள் மதத்தினரை உயர்த்துகிறார்கள். வெள்ளைக்காரர் வந்தும் பெரும்பான்மை சுதந்திரம் கிடைக்கவில்லை. காரணம்—நம்நாட்டிலுள்ள மேல்ஜாதிக்காரர்கள்தான். 1919 வரையில்சட்டசபையில்உங்களுக்குப் பிரதிநிதித்துவமில்லை. புதிய சட்டத்திலும் மற்றவகுப்பார் உங்களுக்கு விரோதமாகவேலை செய்தார்கள். புதிய கான்ஸ்டிடியூஷனில் உங்களுக்கு நாமினேஷன் வேண்டுமா? அல்லது மற்றவழியா யோசித்தால் தேர்தல் மூலமாய் பிரதிநிதித்துவம் வேண்டும். நாமினேஷன் ஏற்பட்டபோது ஒப்புக்கொண்டும் பிறகு குடியேற்றநாட்டு அரசு

ரோஜா முத்தையா
ய்ச்சி நூலக அறக்கட்டளை

கழியை ஒட்டி நாமினேஷன் வேண்டாம் என்றும்; தேர்தல் முறையில் வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள். தற்கால நிலையில் தனித்தொகுதி தேர்தல்தான் வேண்டும். எம். சி. ராஜாவும் இப்போது அப்படித்தான் சொல்லுகிறார். அதனால் நீங்கள் முன்னேற்றமடையலாம். கலப்புத்தொகுதியில் உங்கள் உரிமைகள் பிறரால்தான் அனுபவிக்கப்படும். கிளர்ச்சிசெய்து தனித்தொகுதியைபெறவேண்டும். சுயராஜியமுழக்கத்தால் சுயராஜியம்வருவதானால் தாழ்த்தப்பட்டவரே இல்லாமல் எல்லாரும் ஒரேநிலையில் இருக்கவேண்டும். நிலைமையை செம்மைப்படுத்த கிளர்ச்சி செய்ய வேண்டும். பழக்கம் வழக்கம் என்பதில் பிரயோஜனமில்லை. படிப்பு கொடுக்கவேண்டும். இது அவசியம். இந்த ஜில்லாவில் 6 லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். 150 ஸ்கூல்கள் இருக்கிறது. அவைகள் போதாது. தாய் தந்தையர் குழந்தைகளை படிக்கவைக்கவேண்டும், படிப்பு உத்தியோகப்பற்றுக்கல்ல வென்றாலும், அவைகளும்தானாகவேக்கிடைக்கும். வகுப்புவாரிஉத்தியோகம் உங்களுக்கும் பின்னால் கிடைக்கும். வரப்போகும் காலத்தில் இவ்வித இடையூறுகள் இருக்காது. நீங்கள் முன்னேற்றமடையவேண்டும். சமூக சீர்திருத்தம்வேண்டும். வருஷத்தில் 1 முறை கூடினால்போதாது. பலசங்கங்கள் வேண்டும். பலத்துடன் வேலை செய்யவேண்டும். சர்க்கார் சட்டசபையிலும் பிரசமூகத்தார் உதவிசெய்யவேண்டும். இவ்வருஷ பட்ஜட்டில் உங்களுக்குப்போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை. சர்க்கார் உங்கள் உரிமைகளை கவனிக்கவில்லை. ஹிந்துமத பரிபாலன சட்ட திருத்தத்தில்நீங்கள் கோவிலுக்குப்போகலாம் என்றதிருத்தம்வந்தும் சர்க்கார் அதை அசட்டை செய்தார்கள். சர்க்கார் பக்ஷபாதமில்லாமல் நடக்க வேண்டும். வேண்டியவைகளை சட்டம் செய்யவேண்டும். உங்களுக்கு சுதந்திரம் அளிக்கவேண்டும். உங்கள் உரிமைகளை நீங்கள் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். லேபர் ஆபீசால் முன்னேற்றமடையலாம். உங்கள் முயற்சியும் வேண்டும். அறிவும் வேண்டும். நாடு நீடூழி வாழவேணடும்.

தலைவர் பின்னுரை.

ஈ. வெ. ராமசாமியார் சொன்னபடி நடக்கவேண்டும். (கரகோஷம்) அவர் வார்த்தை சிக்கைப்போக்குவது போலிருந்தது. உங்கள் ஆனந்தத்தைக்காட்டினீர்கள். தாலூகா போர்டார் கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்ற உத்தரவிட்டதைப்பற்றி வருந்துகிறேன். மேல் ஜாதியார் குற்றம் செய்கிறார்கள் ஆனால் அக்காலம் மலையேறிவிட்டது. உணர்ச்சியும் மாறிவிட்டது. மதுரையில் வர்ணாச்சிரம மகாநாடு கூடியது விசனிக்கத்தக்கது. அவர்கள் காலம் குறுகி அவர்கள் இல்லாமல் போய்விடுவார்கள். பொதுமக்களுக்கு உங்கள் மேல் அனுதாபம் வளர்ந்து கொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களின் முற்கால நிலையையும், தற்கால நிலையையும், விட எதிர்காலம், நல்லகாலம். அப்பொழுது உங்களைப்புறக்கணிக்கமுடியாது. ஹிந்துக்கள் பிறரிடத்தில் சுயராஜியம் கேட்டால் ஆதிதிராவிடர்களை நீங்கள் ஒடுக்குவதால் உங்களுக்கு சுயராஜியமில்லை என்ற கிளர்ச்சி ஆரம்பித்து விட்டது. முயற்சியால்முன்னேறுங்கள். மகாத்மாகாந்தி மாளவியா முதலியோர் செய்கையில் ஒன்றும் செய்யாவிட்டாலும் இப்போது உணர்ந்து செய்து வருகிறார்கள். உங்களிடம் பெரியபலம் இருக்கிறது. உண்மையாகப் பாடுபடுகிறீர்கள். 6 கோடி மக்களாகிய உங்கள் துயவு இல்லாமல் சுயராஜியம் வாங்கமுடியாது. திருவாளர் ஈ. வெ. இராமசாமி உங்களுக்குத் துணையாய் இருக்கிறார் என்று பேசிய பிறகு

தீர்மானத்தைப்பற்றி:—

காந்தி காங்கிரசுக்கு வேண்டு கோள்.

1. பேச்சேடு நிறுத்தாமல் காரியத்தில் செய்யுங்கள். இந்து முஸ்லீம் விஷயம்போல் எங்கள் குறை தீர்க்கப்படாமல் மகாத்மா காந்தி லண்டன் செல்லவேண்டாமென்பது சரியான தீர்மானமா அல்லவா என்பதை நான் சொல்லவரவில்லை.

2. தனித்தொகுதி ஓட்டுரிமையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும் என்பது இப்போது அப்படியல்ல, சொத்துள்ளவர்கள் மெம்பராகிறார்கள். இது மிகவும் அவசியமான தீர்மானம். இம்மாகாணத்திலுள்ள 6 லக்ஷம் பேரும் ஓட்டுப்போடுவதில்லை. அது சரியான பிரதிநிதித்துவமல்ல, எல்லோரும் போடவேண்டும்.

3. லால்குடி ஹைஸ்கூல் ஹாஸ்டல்விஷயத்தைப்பற்றி ஜில்லா போர்டுக்கு விண்ணப்பம் செய்யுங்கள். ஆதிதிராவிடர் 130 படிக்கிறார்கள். அவர்கள் மார்க்கு அதிகம் வாங்குகிறார்கள். அவர்கள் நல்ல பதவிக்கு வருவார்கள். நாங்களும் அவர்களுக்கு உதவிகள் செய்ய தீர்மானித்துள்ளோம். உங்கள் தைரியத்தைக் கொண்டு தான் போர்டு மீட்டிங்கில் வைத்து நான் பாஸ் செய்வேன்.

4. கோவில்கள் வருமானத்தை கல்வி முதலியவைகளுக்கு செலவழிக்கவேண்டும் என்பது. சட்டப்படி வரும்படியை டிரஸ்டிகள் மனம்படி தான் செலவு செய்யலாம். சட்டத்திருத்தம் செய்தால் தான் நல்லது இது நல்ல தீர்மானம்.

5. சுயராஜியத்தை ஒத்துக்கொண்டு உங்கள் பங்கு என்ன என்பதை தெரிவித்ததற்கு சந்தோஷம். நான் வெறுப்பிடித்த ஜாதியில் பிறந்தவன். உங்கள் மகாநாட்டிற்கு தலைமைவகிக்கநான்முதலில் வரமாட்டேன் என்று சொன்னேன். பின் மறுக்காமல் வந்தேன். உங்கள் குறைகளை பார்த்து மனக்கஷ்டப்படாமலிருக்காது. இனி மேல் செய்யக்கூடிய உதவிகளை செய்யமுயற்சிக்கிறேன். ஈ. வெ. இராமசாமியார் பொன்னம்பலம் முதலியோருக்கும் உங்களுக்கும் வந்தனம் செலுத்துகிறேன் என்று பேசினார்.

திரு. சிவபிச்சை அவர்கள் வந்தனோபசாரம் கூற மகாநாடு முடிவு பெற்றது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டைகளை உங்கள் தலையில் கட்டியடித்ததற்காக, எத்தனை தடவைகளில் நான் எனது மார்பை அடித்துக் கொண்டிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? நானே நம்பாத விஷயங்களை யெல்லாம் வெள்ளை மனதான நீங்கள் நம்பும்படி செய்தேனே, அக்கொடுமையை நினைந்து நினைந்து எத்தனை தடவை வெட்கியிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? நான் செய்த மதப்புரட்டுகளை ஒருபொது மேடையில் உங்கள் முன்பு சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று சுமார் ஆயிரம் தடவைமுயற்சித்திருப்பேன். ஆனால் எனது பலஹீனம் மீறிய பயமானது இந்தநிமிஷம்வரையில் என்வாயை அடைத்து விட்டது. நானும உங்களை இருட்டிலேயே விட்டிருந்தேன். நான் ஒரு படுபாவி என்றே நினைக்கிறேன். மன்னியுங்கள். இந்த நிமிஷத்திலாவது உண்மையை, —என் மனதில் இத்தனை வருஷமாய் அடைபட்டுத்திமிறிக்கொண்டிருந்த உண்மையை—உங்கள் முன் கொட்டி விட்டு சாகின்றேன்; கவனியுங்கள்". (தொடரும்)

கந்தர்வக் கோட்டை.

பிராமணீயம்நீங்கிய சீர்திருத்த மணம்:—

கந்தர்வக்கோட்டைக்கடுத்த மோகனூர் கிராமத்தில் 28-5-31ந்தேதி திருமதிபட்டு அம்மாளுக்கும், திரு.கி. வேங்கடாசலத்திற்கும், பல எதிர்ப்புகளுக்கிடையில் பார்ப்பனீயம் அறவே யொழிந்த சுயமரியாதைத்திருமணம், திருஆதிமூலம் அவர்களால் நடத்திவைக்கப் பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

அதிசயமான இரகசியங்கள்!

நீங்கள் இதுவரையில் கண்டிராத இரகசியங்கள் ஆச்சரியப்படும்படியான உண்மைகள் அடங்கிய புஸ்தகம் இனாமாக அனுப்புகிறோம். இப்புஸ்தகத்தில் கேய்ரோனடன் டானிக் மருந்தை வாங்கிச்சாப்பிட்டுச் சுகமடைந்தவர்கள் புகழ்ந்து எழுதியிருக்கிற நற்சாட்சிக்கடிதங்களை வாசித்து அதிசயப்படுவீர்கள். தாதுபுஷ்டி மருந்துகளுக்கெல்லாம் அரசன்.

"கேய்ரோனடன்"

தாது புஷ்டிக்கும் கைகண்டது. வெள்ளை, மூலச்சூடு, மேகக்கானகை, வாய்ப்புண், உஷ்ண வியாதிகள் தீரும். மலச்சிக்கல், வாய்வுகள், வயிற்றுவலி, க்ஷயம், இருமல், சுவாசகாசம், நீர்நீர் வியாதிகள், வாதநோய்கள் நீங்கும். இரத்த சுத்தி, இரத்த விருத்தி, தேக புஷ்டி., பலம் அழகு தேகக்குளிர்ச்சி தரும். பத்தியமில்லை. பூர்ண சுகத்திற்கு ஒரு புட்டி போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1க்கு விலை ரூ. 5—0—0. தபால் செலவு வேறு.

விலாசம்
தந்தி விலாசம்: சித்தர் மதுரை

ஆர். எஸ். பதி அண்டு கோ., (ரிஜிஸ்டர்ட்)
ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கோவில் மேலக்கோபுரம் உட்புறம்,
டிப்போ நெ. 5, மதுரை.

அகில இந்திய நூல் நூற்போரின் சங்கம்.

இராஜபாளையம் கிளைஸ்தாபனத்தின் ஊழல்கள்.

அகில இந்திய நூல் நூற்போரின் சங்கத்தின் ராஜபாளையம் கிளைஸ்தாபன நிர்வாகத்தில் அடியில் குறிக்கப்பட்டிருக்கும் ஊழல்கள் காணப்படுகின்றன. இந்த ஊழல்களை கவனித்துத்தக்கபடி அதிசீக்கிரத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென ஓர் காங்கிரசு வாதியும், இராஜபாளையத்திலிருப்பவருமாகிய நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

1. அனுவசியமாக, அளவுக்குமீறிய சிப்பந்திகள் ஆபீசில் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

2. கராச்சி, அகிலஇந்தியா காங்கிரசின் தீர்மானத்திற்கு விரோதமாக அவர்களுடைய சம்பளம் அதிகமாகவே இருந்து கொண்டு வருகிறது.

3. யாதொருவித ஒழுங்குகளின்றியும், நியாயங்களின்றியும், சிப்பந்திகள் நியமிக்கப்பட்டும், நியமனம் செய்து கொண்டும் வருகின்றார்கள். இவ்வித நியமனங்களால் பொது ஜனங்களுடைய மனதில் நாளாவட்டத்தில் பட்சபாதமான அபிப்பிராயங்கள் ஏற்படுவதற்கு அனுகூலமாயிருக்கின்றது.

4. மேலே குறிப்பிட்ட மூன்று விஷயங்களும், கீழேகாணப்படும் புள்ளிகளால் நியாயமெனபுலப்படும்.

மாதாந்திர செலவு.

4 மானேஜர்களின் சம்பளம் ஏறக்குறைய	ரூ. 130-0-0
நூற்றநூல்களை வாங்கி வருபவர்கள் சராசரி ரூ 22, 15, 12, 10, 8, 6, வீதம் 5-பெயர்களின் சம்பளம்.	ரூ. 75-0-0
ஸ்ரீவில்லிபுத்தூரில் நூற்றநூல்களை வாங்கும் ஒருவருக்கு படிச்செலவு.	ரூ. 12-0-0
கமிஷன் ஏஜண்டுகளின் செலவு, ஏறக்குறைய	ரூ. 100-0-0

மேலே குறிப்பிட்ட புள்ளிகளிலிருந்து, உண்மையாகவும், அனுபவத்தை யொட்டியும் நான்கு மானேஜர்களுக்குவேலையேகிடையாதென்பதை தாழ்மையுடன் அறிவித்துக் கொள்ளுகின்றேன். ஆபீசில் செய்யவேண்டிய வேலைகளைக்காட்டிலும் ஒரு மானேஜர் மட்டுமே சாமர்த்தியமாகவும், நிதானமாகவும், இன்னும் அதிக வேலையை செய்யலாமென்று யாதொரு பயமின்றியும் நான் உரைக்கமுடியும். இதர இடங்களில் நூற்கும் நூல்களைவாங்கிவருவதற்காக வேண்டி இராஜபாளையத்திலிருந்து நாம் ஆட்களை அனுப்பிக்கொண்டு வருவதால், அவர்களுக்குகொடுக்கப்படும்படி செலவின்மூலமாக அனுவசியமாகவும், ஏராளமாகவும் செலவு ஏற்படுகின்றது. இத்தகைய அபரிமிதமான செலவுகளால்தான் கதர்துணிகளின்விலை அதிகமாக ஏறி ஜனங்களும் பாதிக்கப்படுவதுமல்லாமல் கதரின் பிரசாரமே நாளா வட்டத்தில் நாசமடைந்தும்விடும். சுயநலத்தையொழித்தும், சிக்கனமுறையையனுசரித்தும், அனுவசியமானவைகளை குறைக்க தகுந்த திட்டங்களை உண்டாக்கினால் கதர் துணிகள் யாவரும் விரும்பும்படியாக, குறைந்த விலைக்கு விற்கப்படுவதுடன் மக்களின் மனதிற்குள்ளாகவே இருந்துவரும் துவேஷமும் மறைந்துவிடும்.

எண்ணிறந்த ஊழல்களில் சிலவற்றைமட்டில் இங்கே குறிப்பிட்டிருக்கின்றேன்:

ஆகையால், இந்த ஊழல்களை நீக்குவதற்கான முயற்சிகளில் தாங்கள் உடனே மனமுவர்ந்து ஈடுபடவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன் என இராஜபாளையத்திலிருந்து திரு. R. M இராமசாமி எழுதுகிறார்.

C. ராஜகோபாலாச்சாரியார்

திருவாளர்கள் சி. ராஜகோபாலாச்சாரியார்ஆர். கிருஷ்ணமூர்த்திஅய்யர், கிருத்திவாசஅய்யர், ஆகிய மூன்றுபேர்கள் ஈரோட்டிற்கு காங்கிரஸ் பிரசாரம் செய்ய வந்திருந்த பொழுது காங்கிரஸ் தொண்டர்களே திரு ஆச்சாரியாரை சில கேள்விகள் கேட்டார்கள்.

அதாவது:—

1. கதர் போர்டில் வாசல் கூட்டுகிறவர்களும் மூட்டை தைக்கிறவர்களும், இரவில் கண்விழித்து காவல் காக்கின்றவர்களும் தவிர மற்றவர்கள் பார்ப்பனர்களாகவே இருக்கின்றார்களே இதன் காரணம் என்ன? சமதர்ம சுயராஜியம் கேட்பதாகச் சொல்லும் தங்கள் ஆதிக்கத்தில் இருக்கும் ஸ்தாபனமே இக்கதியாயிருப்பதற்கு காரணம் என்ன?

2. தீண்டாமை விலக்கும் காங்கிரசில் ஒரு திட்டமாக இருப்பதாக சொல்லிக்கொள்ளும் உங்கள் கூட்டம் இதுவரை தீண்டாமைவிலக்குக்க அதாவது தீண்டாதாருக்காவது என்ன செய்திருக்கிறீர்கள்?

3. தீண்டாதாருக்கு தனிக்கோவிலும் தனிக்கிணறும் ஏற்பாடுசெய்து கொடுக்க நீங்கள் முயற்சிப்பதானது தீண்டாமை விலக்குப்பிரசாரமா? தீண்டாமை நிலைநிறுத்தும் பிரசாரமா?

4. இனிமேலாவது மற்றபிரசாரத்தைப்போல் தமிழ் நாட்டில் தீண்டாமை விலக்கு பிரசாரம் செய்ய ஏதாவது வழி செய்யக்கூடுமா? என்றுகேட்டார்கள்.

இதற்கு திரு ஆச்சாரியார் சொன்னபதில்: ஒரே வார்த்தைதான். அதாவது காங்கிரஸ்பிரசாரவிஷயங்கள் எல்லாம் மகாத்மா காந்தி இஷ்டப்படி நடத்தப்படுவதாதலால் அவற்றிற்கு நாங்கள் பதில் சொல்லமுடியாது. நாங்கள் மகாத்மா காந்தி கட்டளைப்படி நடப்பவர்கள். ஆதலால் மற்றவர்கள் வேண்டுமானால்தீண்டாமை விலக்குப் பிரசாரங்கள் தங்கள் சொந்தப்பொறுப்பில் செய்யட்டும் எங்களை ஏன் தொந்திரவு செய்கிறீர்கள் என்று சொல்லிவிட்டதுடன் கதர் போர்டு விஷயமாகஉனுக்குப் போய்பதில் எழுதுவதாக சொல்லிவிட்டார்:-

மேலும் தாங்கள் மிகவும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் என்றும் எல்லோரும் சீக்கிரம் சுயராஜியம்கிடைக்கும்படிகடவுளை பிரார்த்திக்கவேண்டும் என்றும் சுயராஜியம் கிடைத்துவிட்டால் இவ்வித கேள்விகளுக்கு இடமிருக்காதென்றும்சொன்னதோடு கடவுள் பிரசாரம் செய்வதை தடுக்கயாருக்கும் அதிகாரமில்லையென்றும் கடவுள் இல்லை என்று சொல்ல மற்றவர்களுக்கு இருக்கும் உரிமை போலவே கடவுள் உண்டு என்று சொல்ல தங்களுக்கும் உரிமை உண்டு என்றும் சொன்னார். பிறகு திரு சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் வைசிராய் சபை சட்ட மெம்பர் பதவியை ஒப்புக்கொண்டதை கண்டித்தார். இதன்கருத்தாவது, இப்படி ஏதோஒன்றுஇரண்டு பார்ப்பனர்கள் இந்தமாதிரி காரணம் போட்டு பெரிய உத்தியோகங்களுக்குப்போய்விடுவதால் பார்ப்பனர்கள் பெயரேகெட்டுப்போவதாக மிகவும் வருத்தப்படுபவர் போலவும், இதனால் மற்றபார்ப்பனர்களை யாரும் வையாதிருக்கவேண்டும் என்றும் கருதியிருக்கக்கூடும் என்றுநினைத்தேன்.

ஒரு நிருபர்.

கோவை ஜில்லா செங்குந்தர் மகாநாடு.

சிறுவலூர்.

செங்குந்த மாகாண சங்கத்தின் ஆதரவில் 22-5-31ந்தேதி சிறுவலூரில் கோவைஜில்லா செங்குந்தர் நாலாவது மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. மதுரை வழக்கறிஞர் உயர் திரு. எஸ். லக்ஷ்மீரதபாரதி எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமைவகித்தார். ஜில்லாவின் பலபாகங்களிலிருந்தும் ஏராளமாய் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களாவது:—

சமூக சீர்திருத்தத்திற்கு அவசியமான சட்டதிட்டங்கள் பிறப்பிக்கவேண்டுமெனவும், அவ்வித சட்ட திட்டங்களை காலதாமதமின்றி அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென சட்டசபை மெம்பர்களையும், கவர்ன்மெண்டாரையும் கேட்டுக்கொள்ளுவதாகவும், அவ்வித சட்டங்கள் பிறப்பிக்கும்பொழுது "மதம் அழிந்து போகிறது" என்று கிளர்ச்சி செய்யும் வருணாச்சிரமக் கூட்டத்தார்கள் நடத்தையைக்கண்டிப்பதாகவும், பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்கும் மசோதா சென்னை சட்டசபையில் கூடிய சீக்கிரம் நிறைவேற்றவேண்டுமென சட்டசபை அங்கத்தினர்களையும், கவர்ன்மெண்டாரையும் கேட்டுக்கொள்ளுவதாகவும், இந்திய சட்டசபையில் உயர் திரு R. K. சண்முகம் அவர்களால் கொண்டுவரப்படும் பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்கும் மசோதாவை முழுமனதுடன் ஆதரிப்பதாகவும், சாரதா சட்டத்தை அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்வதாகவும், சுயமரியாதைத்திருமணங்கள் நடைபெறுவதை ஆதரிப்பதாகவும், கதரையும் காந்தி இர்வின் ஒப்பந்தத்தையும் ஆதரிப்பதாகவுமாகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, மகாநாடு இரவு 7மணிக்கு பூர்த்திப் பெற்றது.

WANTED Candidates for Telegraph & Station Master's Classes. Apply with 2 annas stamp to:— Imperial Telegraph College, DELHI

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

மாவிலோ கலகம். நமது நாட்டிலோ தானியவிலை குறைந்து விட்டது. ஆனதால் மூர்ச்சையான தெய்வத்தை நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பிழைக்க வைத்துக்கொடுப்பார்களோ வென்பது சந்தேகம்தான்.

உங்கள் தெய்வமான விஷ்ணு பெண்ணாகவும்எங்கள்தெய்வமான சிவன் ஆணாகவும் வேஷம்போட்டு ஆடிக் கூடி பெற்றபிள்ளை சுந்தரோப சுந்திரனும் தெய்வந்தானா? உங்கள்சுவாமியின் திருப்பதி மலையில் எங்கள் சுவாமியும் அம்மனும் குரங்குவேஷமெடுத்து கூடிப்பெற்ற குரங்கும் தெய்வந்தானா? இந்தத்தெய்வங்களெல்லாம் பணக்காரனை ஏமாற்றிப் பார்ப்பனனும்படித்தவனும் வயிறுவளர்க்க ஏற்பட்ட தெய்வங்களே யல்லாமல் உண்மைத் தெய்வங்களல்லவென்று சொன்னால்வட்டமேஜை மகாநாட்டுக் கூட்டத்திற்கு வந்த ஆபத்தென்ன? இந்த தெய்வங்களின் தயவினால்தான் வட்டமேஜை மகாநாடு நடக்கவேண்டுமோ?

(4ம் பக்கத்தொடர்ச்சி)

ஒரு மதமாகுமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள் என்று பேசினர்.

பிறகு காரைக்குடி குமரன் பத்திரிகை ஆசிரியர் உயர்திரு. சொ. முருகப்பா அவர்கள் 'புராணங்களால் ஏற்பட்ட தொல்லை'' என்பதுபற்றியும், திருவாளர்கள் அ. பொன்னம்பலனார் அவர்களும், பட்டுக்கோட்டை அழகர்சாமி அவர்களும் இரவு 8 மணி வரையிலும்அரிய விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். பிறகு, திரு. ஈ. வே. இராமசாமி அவர்களுக்கு வந்தனம் செலுத்தி கூட்டம் இனிது முடிந்தது.

மறுநாள் காலையில் எல்லோரும் ஊருக்குப் பிரயாணமாகி விட்டார்கள்.

குடி அரசு ஓங்குக.

நம் அருமைக்குடி அரசுக்கு ஏழாவதாண்டு பிறந்துவிட்டதென்பதைத் தாங்களெல்லோரும் ஒருவாறு நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள். இச்சிறுவாண்டுக்குள் அன்னவள் நமக்குச்செய்த பேருதவியை இன்ன இன்னவை என்று எடுத்துரைக்கப்புகின் அவை எண்ணிறந்தவையாகும். ஆகினும் அவள்செய்த பேருழியத்தில் சிறிதை ஈண்டு விளக்குவாம். தீண்டாமை யொழித்தல்,பெண்ணுரிமைபேணல்,பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்தல் வேதம், புராணம், இதிகாசங்களிலுள்ள புளுகுகளை வெட்டவெளிச்சமாக்குதல், பணக்காரரின் ஆணுவத்தை அகற்றுவித்தல், விதவை மணம் கோறுதல், சாமிகள் பேரால் நடக்கும் அக்கிரமங்களைத் தொலைத்தல், இன்னம் இதுபோன்ற அநேகமூடப்பழக்கவழக்கங்களை எல்லாம் துரத்தியோட்டி நம்மவர்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்திய அருமைக் குடிஅரசுக்கும் அவளின் அரிய தந்தையாம் ராமசாமிப்பெரியாருக்கும் நாம் என்றும்மறவா நன்றி பாராட்டுவோமாக.

அன்பர்கள் நமக்கு இத்துணை நற்றொண்டாற்றி வந்த அன்னவளுக்கு நாம் செய்யவேண்டிய உதவி என்னை? மேலும் மேலும் அவள் உழைத்துவரும் சீரிய தொண்டிற்கு ஆதரவு நல்கி நாமெல்லோரும் அவளை ஏகமனதாய்ப்போற்றுவோமாக.

சுயமரியாதை திருமணம்

மதுரை:—மதுரை வக்கீல் திரு டி. நாராயணன் அவர்கள் மைத்துனர் திரு கெ. ஜி. ஆழ்வாரப்பன் பி. ஏ. அவர்களுக்கு 25-5-31 ந்தேதி நம்மை தருபார் கோவில் தெருவில் சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றதுடன் சமபந்தி போஜனமும் செய்யப்பட்டது. இத்திருமணம் ஒரேநாள் திருமணமாகும். திருவாளர்கள் டி. நாராயணன், எஸ். கே. திருமகள் மாறன் அவர்கள் முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

இரத்தமே உயிர்.

திருவாரூர், ஷண்முகானந்த வைத்தியசாலையின் இணையற்ற இரத்தவிர்த்தி மருந்து.

சுவர்ண காந்தம்.

அயம், காந்தம், அப்ரகம், தங்கம், மண்டூரம் 5-ம் சேர்ந்தது.

பாண்டு, சோகை, காமாலை, பித்தப்பாண்டு, விஷப்பாண்டு, சூதகபாண்டு, நீர்ப்பாண்டு, பித்தவெட்டை, ஜுரக்கட்டி, சூதகக்கட்டி, குன்மம், பித்தவாயு, மதுமேகம், க்ஷயம், காசம், கைவீக்கம, கால்வீக்கம், வயறுவீக்கம், கிறுணி, அதிசாரம், உஷ்ணவாயு, சூதகவாயு, முதலிய அசாத்திய நோய்களும் ஆச்சரியப்படும்படி குணமாகி நல்லஇரத்தவிர்த்தியுண்டாகும். உத்ரவாதம்.

1-நே. 20 நாள் மருந்து விலை ரூ 10—8—0 வி. பி. வேறு.

டாக்டர் கண்ணுசாமி,

சென்னை மாகாண சித்த வைதிய பிரச்சாரம் திருவாரூர்

N. B.:—குணமில்லாவிடில் பணம் வாபீஸ்,

மிகவும் குறைந்த விலை. ஒரே மாதம் மட்டும்.

பாலேலஸ் ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் வாச் நெ. 501.



22 கார்ட் ரோல்ட் கோல்ட் கேஸ்டன் டையல் ரிஸ்லெட் செடியாரம் 5 வருஷ உத்தரவாதம். ஆண் பெண்களணிய அலங்கார பூஷணமாகும். இத்துடன் (1) கூலிங் கண்ணாடி, (2) 14 காரட் நிப்புடைய பௌண்டன் பேனா, (3) ரிஸ்ட் ஸ்பிரிங் செயின் இனாமளிக்கப்படும், விலை ரூபாய் 6—0—0.

பூரா த்துகை முன்பணம் அனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.

விலாசம்:—பிராட் பீல்ட் வாட்சு கம்பெனி, பார்க்டவுன், மதருஸ்.

சுதேசி உடைகளின் அபிமானியுங்கள்.

இந்தியர்களுக்கென்றே ஸ்பெஷலாய் தயார்செய்யப்பட்டது.

வெள்ளைகாஷ்மீர் பட்டில் தயார்செய்த சன்னக்கம்பிக்கரை பட்டு வேஷ்டிகள்
8 முழ நீளம் 52'' அகலம் விலை ரூ. 12—0—0

பனாரஸ் ஸில்க்

கோடைகாலத்திற்கு ஆரோக்கியமானது.

பழுப்பு (மங்கின) வெள்ளை ஷர்டிங் தான் 7-கெஜநீளம் 52'' அகலம் ரூ. 15-முதல் 18-வரை.
ஷை காக்கிகலரில் ஷை அளவுள்ளது. ரூ. 15-முதல் 18-வரை.
நெ. 1: ஷை கோட்டிங் மிகவும்நேர்த்தியானது 7கெஜநீளம் 52'' அகலம் ரூ. 25முதல் 28வரை.
நெ. 2: கோட்டிங்தான் ஷை அளவுள்ளது. ரூ. 15-முதல் 18-வரை.

பனாரஸ் உயர்ந்த பட்டுப் புடவைகள்.

எங்கள் புடவை! வீட்டுப்போக்கிஷம்!!

உடல் சாதா பட்டுசேலை, கரை, முகதலை தங்கசரிகைகளினால் பூவேலைகள் செய்யப்பட்டதும், மேகவர்ணம், ஆரஞ்சு, சிவப்பு, ரோஸ், கத்தரிப்பூ, மயில்கண் மற்றும் விருப்பமுள்ள பல கலர்கள் கிடைக்கும். பார்வைக்கு மிகவும் நேர்த்தியானது. இந்த சேலை எல்லா ஜாதியினருக்கும், தற்கால நாகரீகத்துக்கும் ஏற்றது.

12 முழம் x 44'' அகலம் புடவை 1க்கு ரூ: 20 to ரூ. 35
16 முழம் x 44'' ,, ,, ,, 30 to ரூ. 50
18 முழம் x 44'' ,, ,, ,, 35 to ரூ. 60

உடல்புட்டா சேலை (பூக்கள் போட்டது) ஜங்களாசேலை. (உடல்முழுதும் சரிகையினால் பூ கொடி செடி வேலைப்பாடுள்ளது) தார்பானு சேலை (பாவுபட்டினாலும், உண்டை சரிகையினாலும், உடல் முழுவதும் பூ கொடி செடி வேலைப்பாடுள்ளது) ஷை தினுசுகளில் ஜாக்கெட்டுகளும் கிடைக்கும். மற்றும் பட்டுலுங்கிகள் சாதா தினுசுகளும், புட்டா போட்டதும் கிடைக்கும்.

ஆர்டர்களை கவனித்து வி. பி. மூலமாய் அனுப்பப்படும்.

எமது விலாசம்:—

V. RAJARAM & Co., Silk Merchants
38-203 Ramapura BENARES CITY.

தயவு செய்து எமது விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல் ...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ...	0—4—0
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ...	0—2—0
*குறள் ...	0—8—0
* இயற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாபீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாபீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி, ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.

*கால்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, எடய தெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
கிரேட்காட்டன் ரோடு,
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாட்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

வி. கண்ணன்,
சீமை எரு டிபோ,
காஞ்சீவரம்.

A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
17 பாரிஸ் வெங்கிடாஜல
அய்யர் தெரு
சென்னை.

A. R. M. சுந்திர பாண்டியன்,
கடைவீதி,
அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.

*B. றங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜி முகமது ஷேக்உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.

*M. ரத்னம்,
கிரோசினுயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குறிச்சி.

C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்ளூர் Cant

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
துறையூர்.

முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2, மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு,
கொழும்பு.

A. S. பரமசிவம்
34, காரிக் ஹவுஸ்
டிபன்சிகா ரோடு
ஹேவலக் டவுன்
கொழும்பு.

எட்வர்ட்பால்
திருமலராபுரம்.

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்.

S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்.

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

* இந்த புள்ளியுள்ள விலாசதார்களிடம் குடி அரசு பதிப்பு புஸ்தகங்களும் கிடைக்கும்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

G. R. கணேசர் & Co.,
10/1 Cecil St.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

Visvanath Book depot,
9, Brickfield Rd.

R. S. Naidu,
86, Ampang St.

O. M. Ali Saiboo & Co,
27, Java Street

The Selanger Stamp Co.,
Market Street.

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang.

South Indian Trading Co,
Ipch. Perok F. M. S.

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M. S.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சொ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
இதன்வருடசந்தா ரூ. 4—0—0
அல்லது $. 2,25
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0
ஆசிரியர்: S. குருசாமி B.A.
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு „ 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0
ஆசிரியர்: அ. பொன்னம்பலம்
மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமனாதபுரம் ஜில்லா.

———

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

———

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்.

———

அடக்க முடியாத தாது புஷ்டியினால் யானை பலத்தை அடையலாம்

மதயானைக்குளிகை

தண்ணீர் போல் உடைந்தோடும் இந்திரியத்தை இறுக்கிக்கட்டி மணியாக்கி நாடி நரம்புகளை முறுக்கேற்றி மதங்கொண்டயானையைப்போல் இல்லற இன்பத்தில் நீண்டநேரம் முறைத்து போராடும் வல்லபம் இதற்கே உண்டு, ஒவ்வொருவரும் பரீக்ஷித்து ஆனந்தமடையக்கூடியது.
100 குளிகை ரூ. 12. 50 குளிகை ரூ. 7. (மாதிரிக்கு 30 குளிகை ரூ. 4-8-0)

விலாசம்:— கே. எஸ். பதி, வைத்தியசாலை, பழனி 1 S Ry.

ஏழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஔஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்கபஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம் வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது
காமரூபிலேகியம்
இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடலாம் சேர் ரூ 15

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ. 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும், கீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C மஹாலயப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு ஸ்ரீமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.